விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 11 ஞாயிற்றுக்கிழமை (27.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியில்

# உணர்வெழுச்சியுடன் உணவு தவிர்ப்பு

## திலீபனுக்காக சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு முன்பாக நேற்று ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகள்



(யாழ்ப்பாணம்)

கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியில் அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து தியாகி திலீபனுக்காக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு முன்பாக நேற்று உணர்வெழுச்சியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். (15ஆம் பக்கம் பார்க்க)



## ரணில் அழைத்தால் செல்லக்கூடாது

முப்படைகளின் தளபதிகளுக்கு கட்டளையிட்டிருந்த மைத்திரி

11ஆம் பக்கம் பார்க்க

72 குண்டுகள் முழங்க அரச மரியாதையுடன்

## எஸ்.பி.பியின் உடல் அடக்கம்



12ஆம் பக்கம் பார்க்க

## 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிருங்கள்

மகிந்தவுடனான கலந்துரையாடலில் மோடி வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சிறுபான்மையினரான தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட வேண்டும் என அழுத்தமாக வலியுறுத்தியுள்ள இந்தியப்



பிரதமர் நரேந்திர மோடி சமத்துவம், நீதி, அமைதி, கௌரவம் ஆகியவற்றை எதிர்பார்க்கும் தமிழர்களின அவாவை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் 15

## உண்ணாவிரதத்துக்கு சென்ற பல்கலைக்கழக மாணவர்களை தடுக்க பொலிஸார் முயற்சி



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கட்சிகளால் நேற்று சாவகச்சேரி, சிவன் ஆலய முன்றலில் முன்னெடுக கப்பட்ட 15

## திலீபனின் உயிர் பிரிந்த நேரத்தில் அகவணக்கம்



15

## தமிழர்களின் உரிமையை வலியுறுத்தி

# வடக்கு, கிழக்கு முழுவதும் நாளை பூரண ஹர்த்தால்

## அனைத்துத் தரப்பினரும் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு முழுவதும் நாளை திங்கட்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள் 15

## யாழில் நேற்று கடுமையான இராணுவக் கெடுபிடிகள்

## வீதியில் பயணிப்பவர்களை துருவித் துருவி விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று கடுமையான இராணுவக் கெடுபிடிகள் காணப்பட்டன.

வீதியில் பயணிப்பவர்களை இடைமறித்து எங்கே செல்கின்றீர்கள் எனத் துருவித் துருவி இராணுவத் 15

கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில்

## தமிழர்களின் பாரம்பரியமான வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலய வருடாந்த பொங்கல்



(வவுனியா)

தமிழர்களின் பாரம்பரியமான வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த பொங்கல் விழா 15

## யாழ்.நகரில் பட்டப்பகலில் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று பட்டப் பகலில் வாள்வெட்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதியில் பெருமாள் கோவிலுக்கு 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி தேவை

கிளிநொச்சி, பூநகரி பகுதிகளில்
சுமார் 4 ஏக்கர் - 100 ஏக்கர் வரையிலான
விஸ்தீரணமுள்ள காணி தேவை.

(4084)

**தொடர்பு : 075 925 1036**

நேரம் காலை 9.00 மணி முதல்
மாலை 5.30 மணி வரை

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கூளாவடி ஒழுங்கை
(வைரவர் வீதி), கொட்டடியில்
6 பரப்புக்காணி விற்பனைக்கு.
(பிரித்து 1 1/2 பரப்பு வீதமும்
விற்பனை செய்யப்படும்.)
தரகர் தேவையில்லை.

(4100)

**தொடர்பு 076 221 2037**

## காணிகள் விற்பனைக்கு

A9 வீதியில் 50 ஏக்கர், 25 ஏக்கர், 28 ஏக்கர் காணிகள், 2 வெட்டுக் கிணறுகள், 2 வீடுகள், 300 காய்க்கும் இளம் தென்னைகள் மற்றும் 1 1/2 ஏக்கரில் தேசி, வேறு மரங்களுடன் 7 ஏக்கர் காணியும் / யாழ். ஸ்ரான்லி வீதியில் தனித்தனி காணிகள் 4 பரப்பு. / நெல்லியடி மாலு சந்தியில் 41/2 பரப்பு / யாழ். திருநெல்வேலியில் 1 பரப்பு காணியுடன் புதிய வீடு / வவுனியா நகர் பகுதியில் 1 Km தூரத்தில் உறுதிக் காணி மலிவு விலையில் /யாழ் கொட்டடியில் 3 பரப்புக் காணி /கொழும்பு வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் தொடர் மாடி வீடுகள் விற்பனைக்கு உண்டு. 150 ஏக்கர் தென்னம் காணி வன்னியில் விற்பனைக்குண்டு.

(C-410)

**VIMP :-076 534 6562, 076 283 7441, 077 522 1132**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காயகள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான
அழகைக் காண்பீர்கள்

(4095)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## உடனடி வேலை வாய்ப்பு

O/L, A/L முடித்தவர்களுக்கும்
Corona வினால் வேலையை
இழந்தவர்களுக்கும்
உடனடி வேலை வாய்ப்பு
(EPF, ETF உட்பட).

(4094)

**077 241 7007**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

2014 YAMAHA 125
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்கு உண்டு.
25 000 km / BAS - Number
Japan Bike

(4098)

**077 898 9691**
யாழ்ப்பாணம்

## கணினி திருத்தம்

- கணினி, லப்டொப் சிறந்த முறையில் திருத்தித் தரப்படும்.
- சிசிரிவி கமரா பொருத்துதல் சேவையும் பெற்றுக் கொள்ளலாம்.

(4101)

**076 827 5129**
**021 222 8797**

**PC Garage**
255 B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## DATA ENTRY OPERATORS

Data Connect



**QUALIFICATION**

- Data Entry Skills
- Gender - No Biasness
- Employment is Fulltime or Part time
- Age - 20 to 35 Years

**உடனடி வேலை வாய்ப்பு**

- இலகுவான முறையிலான தரவு ஏற்றம்.
- ஆண், பெண் இருபாலரும் கோரப்படுகின்றார்கள்.
- பகல் மற்றும் இரவு இரு பிரிவுகளாக வேலை செய்யலாம்.
- உங்கள் திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.
- ஏனைய விடயங்கள் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

(4083)

Kalviyankadu, Jaffna.

Attractive salary together with other benefits awaits the selected Candidate
Applly within 7 days of the advertisement via APPLY NOW.

Sent us your cv to kulenthp@gmail.com or Contact us on 077 230 6747

## மணமகள் தேவை

80, சுவாதி, 7இல் செவ்வாய்,
64 பாவம், லண்டன் சிற்றிசன்
மணமகனுக்கு யாழ். இந்து
கௌரவ மணமகள் தேவை.

(4099)

**077 818 5978**
**075 011 1122**

இணையவழி கருத்தரங்கு

## ECONOMICS

**For 2020 A/L TAMIL MEDIUM**

க.பொ.த உயர்தர 2020 பொருளியல் பாடத்திற்கான மாபெரும் நிகழ்நிலை கருத்தரங்கில் பங்கு கொள்வதற்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

**www.myclasses.lk**

**V. PARAMESHWARAN**
B.BA (Hon's) MA (Econ)

எதிர்பார்க்கை MCQ, கட்டுரை வினாக்களுக்குள் விளக்கங்கள் வழங்கப்படும்

(C-1037)

தொடர்புகளுக்கு
A .Sujeepan : 075 578 3728

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## சரவணமுத்து முருகமூர்த்தி

ஏழு வர்ண நிறமுடைய அஸ்வங்களைக் கொண்ட இரதத்தினை செலுத்தி வரும்
கதிரவனைப் போல் எம் குலத்தில் தோன்றிய சூரியனே தாம்.
இப் புவியினை விட்டு மறைந்ததென்றல்லோ நாம் நினைத்து
ஏங்கிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நீரோ
"தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க" எனும் பொது வாசகத்திற்கமைய இப்புவி மீதினில்
வாழும் எல்லா உயிரினங்களுக்கும் ஆதாரமான ஆதவனாகவெல்லோ ஆகிவிட்டீர் - ஆம்
சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய
தெய்வமும் இல்லை என்ற முதுமொழிக்கமைவாக
முருகேசு, சரவணமுத்து என முருகப்பெருமானின் சக நாமங்களை
உச்சரிக்கும் நாம எழுத்தினாலான முருகமூர்த்தி எனும் நாமம் உமக்கு
உமது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல
ஸ்ரீ சிவசுப்பிரமணிய பெருமான் துணை புரிவார் ஆக.

**27.09.2020 இன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

மற்றும் அன்னாரது மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து துக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் அவரது பிரிவால் இன்னும் துன்புற்றிருக்கும் இதயங்களுக்கும் மற்றும் தொலைபேசி வழியில் துக்கம் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இன்னும் ஏனைய வழிகளிலும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இந் நன்றி அறிதலை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நன்றி நவிலல் என்று நினையாது நேரில் தெரிவிக்கப்பட்ட நன்றி அறிதலாக இதை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

பிறப்பு
**21.06.1954**

இறப்பு
**27.08.2020**


சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

தகவல் : சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4092)

# கண்ணீர் அஞ்சலி

## வருந்துகின்றோம்...




**பூநகரி** மண்ணின் பெருமைகளைப் பாடிய
"பாடும் நிலா" தெய்வத்திரு

## S.P.பாலசுப்பிரமணியம்

அவர்களுக்கு எங்கள் கண்ணீர்
அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்

**"போகும் பாதை தூரமே
வாழும் நாட்கள் கொஞ்சமே...
இந்தத் தேகம் மறைந்தாலும்
இசையாய் மலர்வேன்..."**



**தென் இந்திய இசை அமைப்பாளர்
அக்னி கணேஷ்**

**சரவணப் பொய்கை. INC
பாடல் ஆசிரியர்கள்
திருஞானபவன்
சதானந்தபவன்**

(C-398)

# ஆழிப்பேரலை போல் தமிழினம் எழும் அடக்க நினைப்பவர்களை விரட்டும் காலம் வரும்

## எச்சரிக்கிறார் இயக்குநர் கௌதமன்



**(சென்னை)**

**ஒரு காலம் வரும். இயற்கை கை நீட்டும். அப்போது தமிழீழத்தை எமது இளைய தலைமுறை பெற்றெடுக்கும். ஜல்லிக்கட்டிற்காக உலகத் தமிழினம் எழுந்து போராடியது. தமிழீழத்தைப் போல தமிழ்நாட்டின் விடுதலையும் பறிக்கப்பட தமிழினம் ஆழிப்பேரலை போல எழும். எம்மை அடக்க நினைப்பவர்களை விரட்டும் காலம் வரும்" என இயக்குநரும் நடிகருமான கௌதமன் எச்சரித்தார்.**

தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வுகளை நடத்துவதற்கு அரசாங்கம் தற்போது தடை விதித்திருப்பது அனைவரும் அறிந்ததே. இந்த நிகழ்வை நடத்தக் கோரி இந்தியாவிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்திற்கு மனு அளிக்க சென்ற போது இயக்குநரும் நடிகருமான கௌதமன் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

32 ஆண்டுகளாக நடைபெற்று வந்த தியாகி திலீபனின் நினைவு நிகழ்வை இந்த ஆண்டு நடைபெற அனுமதிக்க வேண்டும் என்று இயக்குநரும் நடிகருமான கௌதமன் இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் மனு கையளிக்கச் சென்றார்.

பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதியுடன் சென்ற அவர், உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கொரோனா பாதுகாப்புக் கருதி தூதரக வாசலில் வந்து மனுவை கையேற்பார்கள் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் மனுவை தூதரக அதிகாரிகள் வாங்க மறுத்து விட்டனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"தமிழ்நாட்டு தமிழர்களின் வரிப்பணத்தில் எங்களின் நிலத்தில் இருக்கும் தூதரகத்திற்கு தமிழக அரசு அனுமதியளித்துள்ளது. ஆனால் தமிழர் உரிமையை கேட்க முனைந்த எங்களுக்கு அனுமதி அளிக்கவில்லை.

உலகத்தில் ஒன்றரைக் கோடி சிங்களவர்கள் தான் உள்ளார்கள். இலங்கை மண்ணை தமிழன் ஆண்டான் என்பது தான் வரலாறு. கோட்டாபய அரசு இந்துக் கோயில்களை இடித்து புத்த விகாரை கட்டுகிறது. கலாசாரங்கள் அழிக்கப்படுகின்றன. இதை இந்திய அரசு வேடிக்கை பார்க்கிறது.

இறுதி யுத்தத்திற்கான பண, படைப் பலத்தை இந்திய அரசு வழங்கியது. தற்போது தமிழக அரசு, தமிழக பொலிஸ் சிங்கள அரசிற்கு ஆதரவாக இருக்கின்றது. இலங்கை அரசு சீனாவுடன் உறவு வைத்துள்ளது. இந்தியாவை சீனா தாக்கும் போது தான் விடுதலைப் புலிகளை அழித்தது எவ்வளவு தவறு? பிரபாகரன் இந்தியாவிற்கு எவ்வளவு பாதுகாப்பாக இருந்தார் என்பது இந்தியாவிற்குத் தெரியும்.

உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்கள் திலீபன் நினைவு நிகழ்வை நடத்துங்கள். நாங்களும் தமிழகத்தில் நடத்துவோம்.

ஒரு காலம் வரும். இயற்கை கை நீட்டும். அப்போது தமிழீழத்தை எமது இளைய தலைமுறை பெற்றெடுக்கும். ஜல்லிக்கட்டிற்காக உலகத் தமிழினம் எழுந்து போராடியது. தமிழீழத்தைப் போல தமிழ்நாட்டின் விடுதலையும் பறிக்கப்பட தமிழினம் ஆழிப் பேரலை போல எழும்.

எம்மை அடக்க நினைப்பவர்களை விரட்டும் காலம் வரும் என அவர் மேலும் எச்சரித்தார். சிறந்த தமிழ் உணர்வாளராக அறியப்பட்ட இவர், ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான கோரிக்கைகளுக்கு குரல் கொடுப்பவர். தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4-9)

# இராஜதந்திரிகளுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள்

## பொது சுகாதார பரிசோதகர்கள் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டிற்கு வரும் இராஜத ந்திரிகளுக்கு விமான நிலை யத்தில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் பி.சி.ஆர் சோதனைக்கு பதிலாக அந்தந்த நாட்டில் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவை இராஜதந்திரிகள் சமர்ப்பிக்க முடியும் என்ற நடைமுறை காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், பி.சி.ஆர் பரிசோதனைகளை இராஜதந்திரிகளுக்கு கட்டாயமாக்குவது குறித்து சுகாதார அமைச்சிற்கு தகவல் வழங்கியுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். (ஜ-2)


நீங்கா நினைவலைகளில் ஓராண்டு நினைவுச்சுடர்



அமரர்
சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆற
முடியவில்லை அப்பா உன் இழப்பு,
உன் முகம் காணாது
உன் குரல் கேட்காது
தவிக்கின்றோம் நாம் இங்கு. காலனவன்
காலடியில் ஏன் சென்றாய் எம்மைப் பிரிந்து.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது உன் நினைவு;
மீண்டும் உன் திருமுகம் காண
ஏங்குதப்பா எம்மனது.
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பிறப்பு 1951.07.14
இறப்பு 2019.10.09

(4093)

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்


# வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் நோக்கி தரிசன பாதயாத்திரை




(குப்பிளான்)

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு இலங்கை மணித்திருநாட்டில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கிடையேயான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளரவும், உலகமெல்லாம் அச்சுறுத்தி வரும் கொரோனா நோய் விலகவும் இறையருள் வேண்டி நெடுங் கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் நோக்கிய புனித திருத்தல தரிசன யாத்திரை நேற்று சனிக்கிழமை வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலில் இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத்தொண்டர் சபையின் ஏற்பாட்டில் ஆரம்பமானது.

குறித்த தரிசன பாதயாத்திரையில் நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள், சைவப் புலவர் கந்த சத்தியதாசன், இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஆணையாளர் வை. மோகனதாஸ், இலங்கை இந்துசமயத் தொண்டர் சபையின் உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களைச் சேர்ந்த அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-2-4-18)

# ரஷ்ய பிரஜைக்கு கொரோனா இல்லை தனிமைப்படுத்தி கண்காணிப்பது அவசியம்

(மாத்தறை)



மாத்தறையில் அமைந்துள்ள ஹோட்டலொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த போது கொவிட் - 19 தொற்றுக்குள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்ட ரஷ்ய பிரஜைக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத்சம ரவீர தெரிவித்தார்.

குறித்த நபருக்கு விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது தொற்று ஏற்பட்டுள்ளமை இனங் காணப்படவில்லை.

அதன் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வேளை பரிசோதனை மேற்கொண்ட போதே தொற்றுக்குள்ளாகியுள்ளமை கடந்த புதன் கிழமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து இரு தினங்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இறுதியாக மேற்கொண்ட பரிசோதனையின் போது தொற்று இல்லை என்ற பெறுபேறு கிடைக்கப் பெற்றுள்ளது.

எனினும் இந்த பெறுபேற்றைக் கொண்டு அவருக்கு வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்று கூற முடியாது.

தொடர்ந்தும் சிகிச்சையளிப்ப தோடு தனிமைப்படுத்தி கண் காணிக்க வேண்டியது அவசியமாகும்.

குறித்த நபரோடு நேரடியாக தொடர்பு கொண்டவர்களும் , அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களும் சுமார் 150 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ஜ-4)


## வாடகைக்கு

வெள்ளவத்தையில் Harmes Avenue யில் குறைந்த விலையில் நாள், கிழமை, மாத வாடகைக்கு.

2,3,6 Bed Rooms சுபகாரியங்களுக்கும் கொடுக்கப்படும். MARKET, Station அருகில்.

தொடர்பு:- (C-1033)
SATHIYA - 077 766 7511, 011 250 3552

## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center (C-1034

076 568 4346

## வீட்டு வேலையாள் தேவை

75 வயது யோகி ஒருவருக்கு வீட்டு வேலை செய்வதற்கு பணியாளர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு
அஷ்டாங்கயோகி ந.குலசிங்கம்
ஈஸ்வர் இராஜயோக சிகிச்சா நிலையம்
இணுவில் மானிப்பாய்.
(4088)






## மரண அறிவித்தல்

### சின்னத்துரை செளந்தராஜன் (சந்திரன்)

பிறப்பு 1961 - 08 - 10



இறப்பு 2020 - 09 - 25

சுன்னாகம் மைலனி பருத்தியோலையை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செளந்தராஜன் (சந்திரன்) நேற்று முன்தினம் 25.09.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மாணிக்கத்தின் மருமகனும், நந்தினியின் அன்புக்கணவரும், கௌதமன்,செளருகன், சாருகனின் அன்பு தந்தையும் தெய்வேந்திரம் பவளராணி, இந்திராணி காலஞ்சென்றவர்களான தங்கராணி, இந்திரராஜா மற்றும் பாஸ்கரன், தங்கராஜா, புஸ்பராணி ஆகியோரின் சகோதரனும் காலம் சென்ற நடனசபேசன் மற்றும் நளாயினி, நளினி, அஞ்சலி, அருந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-399)
கைதடி, நாவற்குழி,
கைதடி.

தகவல்
திருமதி சுப்பிரமணியம்-
மாணிக்கம்(மாமி)

## மரண அறிவித்தல்

### திருமதி.கணேஸ்வரி செல்வராஜா

(ஓய்வூதியர், விற்பனைத்திணைக்களம்)



சந்தைவளவு, K.K.S. வீதி, சுன்னாகம் வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கணேஸ்வரி செல்வராஜா அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கனகசுந்தரம் (சாமியார்) அவர்களது அன்பு மகளும், திரு.சங்கரப்பிள்ளை செல்வராஜாவின் (ஓய்வூதியர் கூட்டுறவுத் திணைக்களம்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு,திருமதி சங்கரப்பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருமதி ஜெகதீஸ்வரி கந்தசாமி, மற்றும் திருமதி விமலேஸ்வரி சபாரட்ணம், திரு.ஜெகநாதன் (முன்னாள் பிரதி அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) திரு.சிவகுமாரன் (CARE நிறுவனம்) செல்வி காத்தியாயினி ஆகியோரின் சகோதரியும், திரு.சங்கரப்பிள்ளை இரத்தினசிங்கம் (முன்னாள் தபால் அதிபர்-கனடா), திரு.சங்கரப்பிள்ளை கனகரட்ணம் (கணக்காளர்-கொழும்பு), திருமதி சிவபாக்கியம் கெந்தீஸ் வரன்(முன்னாள் ஆசிரியை), செல்வி சங்கரப்பிள்ளை பேரின்பநாயகி (முன்னாள் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அலுவலகர்-வவுனியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.09.2020 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைக்களுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4090)
சந்தை வளவு
K.K.S. வீதி, சுன்னாகம்.
(சதொச முன்பாக)

தகவல்
திரு.ஜெகநாதன் (சகோதரர்)


Canada VISA
நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் ✤ Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

(Diploma, Undergraduate & Postgraduate Studies)



REFUSED VISA உங்கள் மறுக்கப்பட்ட வீசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய வீரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Sponsor Letters
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Hotline: 0777-761 346
10 வருட கால நம்பிக்கையான சேவை
FLEX Graphic


## யா/அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி

### பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்:- 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- முற்பகல் 10.00 மணி
இடம்:- கல்லூரி பிரதான மண்டபம்

❖ அடுத்த ஓர் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படும்.

❖ கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(4088)

திரு.கு.ரவிச்சந்திரன்,
தலைவர்.

திரு.பொ.சற்குணநாதன்,
செயலாளர்.



யாழ்ப்பாணம்-வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் தேர்த்திருவிழா நேற்றுக்காலை சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# "20" இற்கு எதிர் தரப்பினர்கள் சிலர் ஆதரவு வழங்கினாலும் அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள மாட்டோம் - செஹான்

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு எதிர்தரப்பு உறுப்பினர்கள் சிலர் ஆதரவு வழங்குவதால் அவர்களை அரசாங்கத்தில் ஒருபோதும் இணைத்துக் கொள்ளமாட்டோம். திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான பெரும்பான்மை பலம் ஆளும் தரப்பினரிடம் உள்ளது என அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், இல்லாத காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு எதிர் தரப்பினர் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை எதிர்க்கிறார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் பாராளுமன்ற ஜனநாயகம், ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை என குறிப்பிட்டுக் கொண்டு மறைமுக அரசியல் பழிவாங்கலாக அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தது.

நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதுடனும், 19 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட குறைபாடுகளையும் நாம் சுட்டிக்காட்டினோம். திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளை திருத்த அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை ஒரு வார காலத்திற்கு கொண்டு வருவதாக மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதி பதவி வகித்தபோது பாராளுமன்றத்திற்கு வந்து எதிர் தரப்பின் உறுப்பினர்களிடம் தனிப்பட்ட முறையில் வாக்குறுதி வழங்கினார்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு வாரத்திற்குள் அல்ல 5 வருடகால பதவி காலத்தில் நிறைவேற்றவில்லை.

ராஜபக்ஷக்களை இலகுபடுத்தி கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தம் நல்லாட்சிக்கு சாபக்கேடாக அமைந்தது என்பதை அவரே ஏற்றுக் கொண்டார்.

கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு இடையில் அதிகார முரண்பாடுகள் ஏற்பட்டன. இதன் விளைவை நாட்டு மக்களே இறுதியில் அனுபவித்தார்கள் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## கேரளக் கஞ்சாவுடன் கைது

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நபரை பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் செட்டிகுளம் வீரபுரம் பகுதியில் கேரளக் கஞ்சா வியாபாரம் நடைபெறுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதில் வீரபுரம் பகுதியினை சேர்ந்த 45 வயதுடைய நபரை செட்டிகுளம் பொலிஸார் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 25 கிராம் கேரளக் கஞ்சாவையும் கைப்பற்றினர்.

குறித்த நபரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-4-250)

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞனொருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து அல்வாய் வடக்கு பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞனை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 8 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ஜ-2-4-60)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு மாற்றீடாக வாடகை இல்லங்கள்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு மாற்றீடாக தற்காலிகமாக வாடகை இல்லங்களைப் பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் இராஜகிரியவிலுள்ள மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கான பயிற்சி நிலையத்தின் ஒரு பகுதியை வாடகை அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக பாராளுமன்றத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் இவ் விடுதிகளை மூன்று மாதங்கள் மாத்திரம் வரை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பில். கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு தமக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீளக் கையளிக்காமையால் புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-6)

## வீதி ஒழுங்குகள் மீறல்; 1200 பேருக்கு அழைப்பு

(கொழும்பு)

வீதி ஒழுங்கு முறையை மீறிய 1200 பேர் நேற்று பொலிஸ் காலாற்படை தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் வீதி ஒழுங்கு விதிகளை மீறிய ஆயிரத்திற்கும் அதிகமான சாரதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு வீதி ஒழுங்கு விதிகளை மீறிய விதம் தொடர்பில் தெளிவு படுத்துவதற்கு குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். (ஜ-6)


# தியாக தீபம் திலீபனுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி






யாழ்ப்பாணம்











ஒட்டுசுட்டான்





மட்டக்களப்பு





லண்டன்

(படங்கள்:- சுபேசன், சாவகச்சேரி, பளிக்கன்குளம் செய்தியாளர்கள்)

# மணிவிழாக் காணும் கலாநிதி திருமதி.ஜெயலக்சுமி இராசநாயகம்



யாழ்ப்பாணத்து வடமராட்சி மண்ணில் மேலைப்புலோலிக்கு அருகமைந்து வியாபாரி மூலைப்பதியில் மார்கண்டு மகேஸ்வரி தம்பதியருக்கு அழகிய கனி மகவாக 1959 ஆடித் திங்கள் 13 ஆம் நாள் புகழோடு பிறந்தவர் ஜெயலக்சுமி.

தமது பாலர் கல்வியை அந்நாளில் ஆச்சியக்கா என்ற அன்பு நாமத்தால் அழைக்கப்பட்ட புகழ் பெற்ற முன்பள்ளி ஆசிரியரான சகுந்தலாதேவியிடம் கற்றார். தொடர்ந்து ஆரம்பக் கல்வியை ஆறுமுக நாவலர் வழித்தடத்தில் நாகலிங்க முதலியாரால் தோற்றுவிக்கப்பட்ட யா/மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலையில் கற்றுத் தேர்ந்தார்.

இடைநிலை மற்றும் உயர் நிலைக் கல்வியை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கற்றுக்கொண்டார். இங்கு கலைத்துறையில் கற்று உயர் தரத்தில் சிறப்புறத்தேறி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானார். 1980-1984 காலப்பகுதியில் யா/பல்க லைக்கழகத்தின் இந்து நாகரிகத் துறையில் சிறப்புக்கலை பயின்று இந்து நாகரிக சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றார். பல்கலை உருவாகி பத்து வருடங்கள் கூட நிறைவுறாத வேளையில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு சித்தி என்பது மிக அரிதாயிருந்த அக்காலத்தில் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தி பெற்று அக்கல்வியாண்டிற்குரிய சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பரிசிலையும் பெற்றுக் கொண்டார்.

பட்டமளிப்பு நிறைவு பெற்ற வேளையில், பட்டதாரி ஆசிரிய நியமன அடிப்படையில் 26.12.1985 அன்று பட்டதாரி உதவி ஆசிரியராக முதல் நியமனம் பெற்று கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் அரச பணியாக அரும்பணியாகிய ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். இங்கு முன்னுதாரண ஆசிரியராக 5 வருடங்கள் சிறப்புறப் பணியாற்றி கிளி/இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கு 7 மாதங்கள் முன்னர் போல் தன்னிகரில்லாதவாறு ஆசிரியப்பணி தொடர்ந்தார்.

அங்கும் கற்பித்தலுக்கப்பால் கல்வித்தலம் உயர பணிகள் பல உயற்றி அவ் வரும் பணியின் பெரும் பேறாக யாழ்ப்பாணம் வேம்படி உயர்தர மகளிர் பாடசாலைக்கு மாற்றம் பெற்றார். இந்தப் பட்டணத்துப் பாடசாலையிலும் தம் பண்பாலும் பணிகளாலும் ஆளுமை மிக்க கற்பித்தலாலும் அரும் சேவை ஆற்றினார். இங்கு பணியாற்றிய காலத்தில் பணியின் மேன்மைக்கு வேண்டிய பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியை 1994/1995 கல்வியாண்டில் கற்று அதிவிசேட சித்தியினைப் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வித் துறையில் பணியாற்றிய புகழ் பூத்த விரிவுரையாளர்களான பேராசிரியர் வ.ஆறுமுகம், பேராசிரியர் க.சின்னத்தம்பி, பேராசிரியர் சபா.ஜெயராசா, பேராசிரியர் மா.சின்னத்தம்பி, கலாநிதி த.கலாமணி, செல்வி சு.அருனானந்தம் முதலானவர்களிடம் கற்கும் வாய்ப்பைப் பெற்றார்.

இவர்களுடைய அறிவூட்டலும் வழிகாட்டலும் அன்பான ஆசியும் கல்வித் துறையில் மேலும் வளர வழிகாட்டின.

1992 இல் யாழ்ப்பாணத்தைச் சேர் ந்த நாகமணி இராசநாயகத்தை மணம் புரிந்து கொண்டார். இந்த நல்லறத்தின் பயனாக 2 ஆண்பிள்ளைகளையும் 2 பெண்பிள்ளைகளையும் பெற்றார். இதில் முதல் மூவரும் கணனித் துறையில் மென்பொறியியலாளர்களாக பல்கலைக் கழகங்களில் கற்று வருகின்றனர். இளையவள் ஹாட்லிக் கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவில் கற்றுக் கொண்டிருக்கிறார். அன்புக் கணவர் வணிகமாணிப் பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணப் பிரதேச செயலகம், யாழ்.மாநகர சபை, யாழ்.போதனா வைத்தியசாலை உள்ளிட்ட அரச திணைக்களங்களில் கணக்காளராக, பிரதம கணக்காளராகப் பணியாற்றி நிறைவாக வடமாகாண பிரதம உள்ளகக் கணக்காய்வாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

யாழ்.பல்கலையின் கல்வியியற்றுறையின் விரிவுரையாளர் பதவிக்கான நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு 05.12.1996 இல் கல்வியியற்றுறை விரிவுரையாளரானார். பேராசிரியர் சபா.ஜெயராசாவின் மேற்பார்வையின் கீழ் "20 ஆம் நூற்றாண்டில் இந்தியக் கல்வி விழுமியங்கள்" என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு முழு தத்து வமாணிப் பட்டத்தப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்தும் மூத்தவர் தம் மதிப்புரையால் தஞ்சைத் தமிழ்ப் பல்கலையின் மேலாள் துணைவேந்தர் பேராசிரியர் பாஸ்கரன் வழிகாட்டலில் "இந்தியக் கல்வி மரபில் ஆன்மீக விழுமியங்களும் இலங்கையில் அவற்றின் தாக்கங்களும்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

தமிழ் நாட்டில் மேற்கொண்ட கலாநிதிப்பட்ட ஆய்வு நிறைவுற்ற பின்னர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வருகை நிலை விரிவுரையாளராகச் சிறிது காலம் பணியாற்றிய சிறப்பு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வெளிவரும் அக விலி, ஆசிரியர், கடல் முதலான கல்வித்துறை சார்ந்த சஞ்சிகைகள் தொடக்கம் இந்தியாவில் வெளிவரும் வருடாந்த ஆய்வுக் கோவை சஞ்சிகை வரை கல்வித்துறை சார்ந்த கட்டுரைகள் வரைந்துள்ளதுடன் தனியாக ஏழு நூல்களையும், துணைவரோடு இணைந்து இரண்டு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

எழுத்தால் மட்டுமன்றி கருத்தாளமான நல்லுரைகள் பலவற்றாலும் அம்மையார் பெருமை பெற்றார். நூல் வெளியீடுகளில் ஆய்வுரை தொடக்கம் நயப்புரை வரை சிந்தனைகளால் சிறந்த உரைகள் பல நிகழ்த்தியவர்.

இந்தியா, மலேசியா, சுவிட்சர்லாந்து முதலான வெளிநாடுகளில் ஆய்வு மாநாடுகளிலும் ஆய்வுகளை முன்வைத்து உரையாற்றிய அனுபவம், நீண்டகால ஆசிரியத்துவம் சார் வழித்தடம், இயல்பான அறிவாற்றல் ஆளுமைகள் அம்மையாரைச் ஒரு தலைசிறந்த விரிவுரையாளராக உருவாக்கின.

"நல்லாசிரியர்" என்ற நாமம் நலிவுறும் இந்த நாட்களில் இன்னும் இருக்கிறது அப்பணியின் மகத்துவம் என்று ஆசிரியர் - விரிவுரையாளர் பணியில் வெள்ளி விழாக் கண்டு வாழ்க்கைப் பயணத்தில் மணிவிழாக்காணும் நாயகி வாழ்க! நாளும் உங்கள் நலமோங்க இறையாசிபெருகட்டும்!

**திரு.சி.மனோகரன்,**
**. திரு.கு.பாலஷண்முகன்**
**விரிவுரையாளர்கள்.**

---

# மணிவிழா அழைப்பிதழ்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர்

கலாநிதி (திருமதி)

## ஜெயலக்சுமி இராசநாயகம்

அவர்களின்




**இடம் : இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி,நீராவியடி, யாழ்ப்பாணம்**

**காலம் : 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி**

## நிகழ்ச்சி நிரல்

மு.ப 8.30 நீராவியடிப் பிள்ளையார் கோவிலில் இருந்து
விழா மண்டபம் வரை வரவேற்பு ஊர்வலம்
மங்கல இசை: ஈழநல்லூர் பி.எஸ்.பாலமுருகன் குழுவினர்

**மு.ப 9.00 மங்கல விளக்கேற்றல்**

**மு.ப 9.05 இறைவணக்கம்**
கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள்

**மு.ப. 9.10 வரவேற்பு நடனம்**
தனிகா நுண்கலை மன்ற மானவியர், கொக்குவில்

**மு.ப. 9.15 வரவேற்புரை**
திரு.ச.லலீசன் (பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**மு.ப. 9.20 ஆசியுரைகள்**

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)
- சைவப்புலவர் சிவஸ்ரீ இ.திருமாறக் குருக்கள் (வியாபாரிமூலை, இன்பர்சிட்டி சித்தி விநாயகர் ஆலயம்)
- அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள்
- அய்சேக் மௌலவி எம்.ஏ.பைசர் (காசிமி, மதநி)
- செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

**மு.ப. 9.50 தலைமையுரை**
**திரு.சு.பரமானந்தம்**
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

**மு.ப.9.50 வாழ்த்துரைகள்**

**பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா**
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் கு.மிகுந்தன்**
(பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் கே.சுதாகர்**
(பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் திருமதி அனுசியா சத்தியசீலன்**
(கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் க.சின்னத்தம்பி**
(முன்னாள் கல்வியியற்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

**கலாநிதி த.கலாமணி**
(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

**திரு.செ.உதயகுமார்**
(மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)

**திரு. இ.பத்மநாதன்**
(பிரதிப் பிரதம செயலாளர் –நிதி வடக்கு மாகாணம்)

**திரு. வீ.கருணலிங்கம்**
(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**திரு.கி.கந்தவேள்**
(பிராந்திய உதவிப் பணிப்பாளர், திறந்த பல்கலைக்கழகம், யாழ்.பிராந்திய நிலையம்)

**மு.ப 11.00 "ராஜஜெயம்" நூல் வெளியீடு**
(கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம் அவர்களின் கட்டுரைகள் அடங்கிய மணிவிழா மலர்)

**வெளியீட்டுரை**
**திரு.அ.பௌநந்தி**
(விரிவுரையாளர், கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)

மு.ப. 11.20 முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் வழங்கல்

மு.ப 11.30 மணிவிழா நாயகி கௌரவிப்பு

பி.ப 12.10 மணிவிழா நாயகி ஏற்புரை

**பி.ப 12.30 நன்றியுரை**
**திருமதி சத்தியா ரஞ்சிற்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**நிகழ்ச்சித் தொகுப்பு**
**திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை**
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**மணிவிழா குழுவினர்**

# இராசிபலன்

27.09.2020
புரட்டாதி 11, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 10.31 மணிவரை
திருவோணம் பின்னிரவு 12.10 மணிவரை
சுபநேரம் 9.02 - 10.32 மணிவரை
இராகுகாலம் 4.32 - 6.02 மணிவரை
சந்திராஷ்டமம்:- திருவாதிரை, புனர்பூசம்
ஏகாதசி விரதம் வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

தொழில் நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மிதுனம்

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள், ஆரோக்கியக் குறைபாடுண்டு.


கடகம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.


துலாம்

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தினருக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.


விருச்சிகம்

கௌரவமான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


தனுசு

உங்களின் வார்த்தைகளை மற்றவர்கள் ஏற்று நடப்பார்கள், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


மகரம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.


கும்பம்

மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மீனம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


மற்றவர்களின் இயல்பான குணத்தோடு அவர்களை ஏற்றுக்கொள்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# 45 நிமிடத்திற்கு முன்னர் புலனாய்வு உத்தியோகத்தரை சந்தித்த தற்கொலை குண்டுதாரி

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்ட குண்டுதாரியொருவர், தாக்குதலிற்கு 45 நிமிடங்கள் முன்னதாக புலனாய்வுத்துறை உத்தியோகத்தர் ஒருவரை சந்தித்து பேசினார் என்ற அதிர்ச்சித் தகவலை முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர வெளியிட்டார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் ஆணைக் குழு விசாரணை நடத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்.


கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தற்கொலை தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டு. குண்டு வெடிக்காததையடுத்து தெஹிவளை ரொப்பிகல் இன் விடுதிக்கு வந்து குண்டை பரிசோதித்த போது உயிரிழந்த குண்டுதாரியே, தாக்குதலிற்கு 45 நிமிடங்களின் முன்னர் புலனாய்வுத்துறை அதிகாரியொருவரை சந்தித்ததாக தெரிவித்தார்.

இது தொடர்பில் சி.ஐ.டியினர் முறையான விசாரணை நடத்தாமல் தன் மீதும் ஹேமசிறி பெர்னாண்டோ மீதும் குற்றச்சாட்டு சுமத்தியுள்ளதாகத் தெரிவித்தார். (ஐ-4)

# கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை மீண்டும் அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த ஆண்டு பிரித்தானியாவில் இருந்து வந்த கழிவுகள் அடங்கிய 21 கொள்கலன்களை விரைவில் திருப்பி அனுப்பவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



குறித்த முடிவு செப்டெம்பர் 22 ஆம் திகதி எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜி.வி. ரவிப்ரிய மொத்தம் 263 கழிவுக் கொள்கலன்கள் இலங்கைக்கு வந்தன, அவற்றில் 130 (40 அடி கொள்கலன்களில்) ஹேலீஸ் குழுமத்தால் அகற்றப்பட்டு கட்டுநாயக்க பகுதியிலுள்ள நிறுவனமொன்றின் வளாகத்தில் வைக்கப்பட்டது.

இதன் பின்னர் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக அந்தக் கழிவுகள் 330 கொள்கலன்களில் (20 அடி கொள்கலன்களில்) மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

மீதமுள்ள கொள்கலன்கள் சீனாவினால் இயங்கும் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையங்களிலும் கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு முனையங்களிலும் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அந்தவகையில் கொழும்பு துறைமுகத்திற்குள் காணப்படும் 133 கொள்கலன்களில் 21 ஐ விரைவில் திருப்பி அனுப்புவோம் என இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.வி.ரவிப்ரிய குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் கூறினார். (ஐ-4)

# தமிழ் மாணவி கொலை

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொட - பின்னவத்த பிரதேசத்தில் தமிழ் மாணவி ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மாணவியின் மரணம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

பலாங்கொட வைத்தியசாலையில் சுமார் ஐந்து மணி நேரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. (ஐ-4)

# போலி கச்சேரி

(கொழும்பு)

மருதானையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் என்ற பெயரில் போலி கச்சேரி ஒன்று நடத்தி செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கச்சேரியை நடத்தி சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொரோனாத் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த சான்றிதழ்களும் அங்கு தயாரிக்கப்படுவதாக தெரியவந்துள்ளது. (ஐ-4)

# ஒலிக்க மறுத்த இசைப்பேழை!





இந்திய இசை உலகம் அதன் மிக மெல்லிய குரல்களில் ஒன்றை இழந்துள்ளது.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்.

-ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்-

ஆந்திராவில் நடந்த இசை நிகழ்ச்சியில் எஸ்.பி.பியை முதன் முதலில் சிறுவனாக சந்தித்தேன். அப்போது அவரிடம் நீ சிறந்த பாடகனாக வருவாய் என கூறினேன். பின்னாளில் அதே போல் சிறந்த பாடகராக வந்தார்.

அவரது மறைவு தகவலை அறிந்த தருணம் முதல் என் மன நிலை இயல்பாக இல்லை.

மனம் விவரிக்க முடியாத துயரத்தில் தவிக்கிறது

-பாடகி ஜானகி-

மறைந்த பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் இறுதி பயணத்தை அரச மரியாதையோடு அனுப்பி வைப்பதே எமது பெருமை.

பாடல்கள் மூலம் மக்களின் மனத்துயரத்தை துடைத்தெறிந்தவர்.

அவரது மறைவு, இசை உலகிற்கு பேரிழப்பு. மண்ணை விட்டு மறைந்தாலும் காற்றில் கரைந்திடா அவரது கானங்கள் மூலம் காலங்கள் கடந்து வாழ்ந்து கொண்டிருப்பார்.

கூவும் குயில்போல, தாலாட்டும் தாய்போல, நம்மை தம் நாவால் வசப்படுத்திய தேன்குரலாளர். தனது பாடல்கள் ஊடாக மக்களின் மனத்துயரை ஆற்றிய பெருங்கலைஞர் பாலசுப்பிரமணியத்தை, போற்ற வேண்டியது நமது கடமை. அவரது இறுதிப் பயணத்தை அரச மரியாதையோடு அனுப்பி வைப்பதே நமது பெருமை" என குறிப்பிட்டுள்ளார்.

சீமான்
-நாம் தமிழர் கட்சித் தலைவர்-


பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் துரதிர்ஷ்டவசமான மறைவுடன் நமது கலாசார உலகம் மிகவும் ஏழ்மையாகி விட்டது.


இந்தியா முழுவதும் எஸ்.பி.பி. ஒரு வீட்டுப் பெயர் அவரது இனிமை யான குரல் மற்றும் இசை பல தசாப்தங்களாக ரசிகர்களைக் கவர்ந்தது.

-பிரதமர் மோடி-

பாட்டுக்குயில் போனதென்று
காட்டுக் குயில்கள் கதறுகின்றன.

-கவிஞர் வைரமுத்து-







இறைவன் அளித்த இனிய கொடையாக வந்து உதித்தவர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் "தமிழ்நாட்டு மக்களை தேனினும் இனிமை யான தனது குரலால் கவர்ந்த எஸ்.பி.பி. இந்திய இசை உலகத்திற்கு 20ஆம் நூற்றாண்டில் இறைவன் அளித்த இனிய கொடையாக வந்து தித்தார். மிக அதிகமான பாடல்களைப் பாடி புகழின் உச்சிக்கே சென்ற எஸ்.பி.பி.யின் மறைவு தமிழ் திரைப்படத் துறைக்கும், இசை ரசிகர்களுக்கும் மிகப்பெரிய இழப்பு"

-தமிழக முதல்வர் எடப்பாடி-

பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மறைவுக்கு நடிகர் ரஜினிகாந்த் இரங்கல் தெரிவித்து உள்ளார். என்னுடைய குரலாக பல ஆண்டுகள் ஒலித்தீர்கள். உங்கள் குரலும், நினைவுகளும் என்றென்றும் என்னுடன் வாழும் நம்முடன் இனி எஸ்.பி.பி இல்லை என்பது மிகவும் வருத்தமளிக்கிறது.

எஸ்.பி.பி. பாடலுக்கு ரசிகர்களாக இல்லாதவர்கள் இந்தியாவிலேயே இல்லை அவரது கம்பீரமான குரல் நூற்றாண்டுக்கும் மேல் ஒலித்துக்கொண்டே இருக்கும். அவரது மனிதநேயத்தை அனைவரும் நேசித்தார்கள் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது.

-நடிகர் ரஜினிகாந்த்-

உலக வாழ் இசை ரசிகர்கள் அனைவருக்கும் இன்று ஒரு கறுப்பு தினம். பாடும் நிலாவை இழந்தது இசை. "பாலு எங்க போனாய், வா என்றேன் நீ கேட்கவில்லையே", பாலு சீக்கிரம் எழுந்து வா.. உன்னை பார்க்க நான் காத்திருக்கிறேன் என நான் சொன்னேன்.

நீ கேட்கவில்லை. உன் வார்த்தை கேட்கவில்லை.. போய்விட்டாய். எங்கே போனாய்? கந்தவர்களுக்காக பாடச் சென்றுவிட்டாயா? இங்கு உலகம் ஒரு சூனியமாகிவிட்டது. பேசுவதற்கு பேச்சு வரவில்லை. சொல்வதற்கு வார்த்தையில்லை. என்ன சொல்வது என தெரியவில்லை.

எல்லா துக்கத்திற்கும் ஒரு அளவு இருக்கிறது. இதுக்கு அளவு இல்லை.


-இசையமைப்பாளர் இளையராஜா-





இசையுலகின் ஒப்பற்ற நாயகனாக விளங்கிய எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மறைவு இசை உலகில் மட்டுமல்லாது அனைத்து மக்களுக்குமே மிகுந்த வருத்தத்தை அளிக்கக் கூடியது. திரை இசைக்கு அப்பாற்பட்டு ஆன்மீகத்திலும் பற்று கொண்டவராய் விளங்கி வந்தார். பல தெய்வபக்தி பாடல்களும், பலவிதமான ஸ்தோத்திரப் பாடல்களும் மிகச் சிறந்த முறையில் பாடி மக்களிடம் பக்தி மணம் பரப்பியவர்.

-காஞ்சி ஸ்ரீசங்கர மடம்-



எஸ்.பி.பி யின் குரலின் நிழல் பதிப்பாக பல காலம் வாழ்ந்தது எனக்கு வாய்த்த பேறு. ஏழு தலைமுறைக்கும் அவர் புகழ் வாழும்.

-நடிகர் கமலஹாசன்-

எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மறைவு பேரழிவு.

-இசையமைப்பாளர் ஏ.ஆர் ரகுமான்-

# ரணில் அழைத்தால் செல்லக் கூடாது

# முப்படைகளின் தளபதிகளுக்கு கட்டளையிட்டிருந்த மைத்திரி

## சாட்சியத்தில் வெளியான பரபரப்புத் தகவல்

நாட்டில் ஜனாதிபதி இல்லாத போது, முப்படைகளை அழைக்க பிரதமருக்கு அதிகாரம் இருந்த போதும், தான் இல்லாத சந்தர்ப்பங்களில் அப்போதைய பிரதமர் ரணில் அழைத்தால் அவரை சந்திக்க செல்லக் கூடாது என முப்படைகளின் தளபதிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்டளை இட்டிருந்ததாக, முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன சாட்சியமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில், கடந்த வியாழக்கிழமை மாலை முதல் இரவு நேரம் வரையிலும் தனது சாட்சியத்தை பதிவு செய்யும் போதே அவர் இதனை வெளிப்படுத்தினார்.

அத்துடன், தான் தொடர்ச்சியாக உளவுத்துறை ஒருங்கிணைப்பு கூட்டங்களில் பங்கேற்ற போதும், அக்கூட்டங்களில் ஒருபோதும், சஹ்ரான் கைது செய்யப்பட வேண்டிய நபர் என்பதை தேசிய உளவுச் சேவை பிரதானி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன அங்கு குறிப்பிடவில்லை எனவும், ருவான் விஜயவர்தன சுட்டிக் காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அதிகாரம்) 2 ஆம் அத்தியாயத்தின் கீழ் கடந்த 2019 செப்டெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஆணைக் குழுவில் இடம்பெற்று வருகின்றது.


இதன்போதே முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன சாட்சியமளித்தார். அவரது சாட்சியம் ஆரம்பிக்கப்பட்ட போது, அதனை நெறிப்படுத்திய அரச சிரேஷ்ட சட்டவாதி,

**கேள்வி- நீங்கள் கலந்து கொண்ட உளவுத்துறை ஒருங்கிணைப்பு கூட்டங்களின் போது, சஹ்ரானை கைது செய்யப்பட வேண்டியவர் என்பதை, தேசிய உளவுச் சேவை பிரதான நிலந்த ஜயவர்தன கூறினாரா?**

**பதில்-** முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான்விஜயவர்தன, இல்லை ... ஒருபோதும் இல்லை. நான் கலந்துகொண்ட புலனாய்வு ஒருங்கமைப்பு கூட்டங்களில் அவர் அப்படி எதனையும் கூறவில்லை என்றார். இதன்போது, ஆணைக் குழுவின் தலைமை நீதிபதி ஜனக் டி சில்வா தொடர்ச்சியாக பல கேள்விகளை எழுப்பினார்.

**கேள்வி- குறிப்பாக முதலில், நீங்கள் கலந்து கொண்ட பாதுகாப்பு குழு கூட்டத்தில், இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் திறந்த, வெளிப்படை விசாரணைகளை செய்ய வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போதைய பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டாரா?**

**பதில்-** ஆம்...முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜிதவுக்கு அப்படியான ஒரு கட்டளையை முன்னாள் ஜனாதிபதி பிறப்பித்தார். திறந்த விசாரணைகளை செய்ய வேண்டாம் என தெரிவித்த அந் நடவடிக்கைகளை நிலந்த ஜயவர்தனவுக்கு பொறுப்பளித்தார்.



குறிப்பாக 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதிக்கு பின்னர் நான் பாதுகாப்பு குழு கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லை.

**கேள்வி- அவ்வாறு கலந்துகொள்ளாமைக்கான காரணம் என்ன?**

**பதில்-** 2018 ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதிக்கு பின்னர், பாதுகாப்பு குழு கூட்டங்களில் கலந்துகொள்ள எனக்கு எந்த அறிவித்தலும் வரவில்லை. இது தொடர்பில் நான் பாதுகாப்பு அமைச்சின் அப்போதைய செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவிடம் வினவினேன். அதற்கு பதிலளித்த அவர், உங்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் ஜனாதிபதியின் அனுமதி கிடைக்கும் வரையிலேயே காத்திருக்கின்றோம் என பதிலளித்தார்.

**கேள்வி- ஜனாதிபதி வெளிநாடு செல்லும் போது, கடமைகளை முன்னெடுக்க உங்களை பதில் அமைச்சராக நியமித்து விட்டா செல்வார்.**

**பதில்** அதற்கு பதிலளித்த ருவான் விஜயவர்தன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் ஒரே ஒரு முறை மட்டுமே, ஜனாதிபதி வெளிநாடு செல்லும் போது என்னை பதில் அமைச்சராக நியமித்து விட்டு சென்றார். பாதுகாப்பு பதில் அமைச்சராக நான் கடமையாற்றிய மற்றைய சந்தர்ப்பங்கள் மூன்றும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் பின்னரான சந்தர்ப்பங்களாகும்.

அவ்வாறு பதில் அமைச்சராக நியமித்தாலும், வெளிநாட்டுக்குச் செல்ல முன்னர் அது எனக்கு அறிவிக்கப்படவில்லை.

அவர் வெளிநாடு சென்று ஓரிரு நாட்களிலேயே; பாதுகாப்பு அமைச்சராக தான் பதில் கடமைகளை செய்ய வேண்டும் என தொலைநகல் ஊடாக அறிவிப்பு வரும். அதன் மூலப் பிரதி கையில் கிடைக்கும் போது, ஜனாதிபதி மீள நாட்டுக்கே திரும்பி விடுவார்.

**கேள்வி- சாட்சியாளரே, பாதுகாப்புக் குழு கூட்டங்களின் போது பிரதமர் கலந்து கொண்டாலும் 5 நிமிடங்களில் அங்கிருந்து சென்று விடுவாராம். இவ்வாறான சாட்சியங்கள் இவ்வாணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனால் கேட்கின்றேன் ... அந்த விடயம் உண்மையா... அதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

**பதில்-** ஆம்... நான் ஏற்றுக்கொள்கின்றேன். பல சந்தர்ப்பங்களில் அவர் அவ்வாறு வெளியேறிச் சென்றுள்ளார். பாதுகாப்புக் குழு கூட்டத்தில் தலையீடு செய்ய பிரதமருக்கு அதிகாரம் இருக்கவில்லை.

ஜனாதிபதி இல்லாத போது, முப்படைகளை அழைப்பதற்கான அதிகாரம் பிரதமருக்கு இருந்தாலும், தான் இல்லாத போது பிரதமர் சந்திக்க அழைத்தால் செல்லக் கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முப்படைகளின் தளபதிகளுக்கு கட்டளையிட்டிருந்தார்.

**கேள்வி- அப்போதைய நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என கூறினால் அதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா?**


**பதில்-** இல்லை. ஒருபோதும் தேசிய பாதுகாப்பினை குறைத்து எடை போடவில்லை.

எனினும் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான மோதல் நிலைமை தேசிய பாதுகாப்பை பாதித்தது.

**கேள்வி- நல்லாட்சி அரசாங்க காலத்தில் உளவுத்துறை பலவீனமடைந்திருந்ததா?**

**பதில்-** இல்லை. நான் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன். உளவுத்துறைகளின் பிரதானிகளிடையே நிலவிய நம்பிக்கையின்மை காரணமாகவே அவர்கள் உளவுத் தகவல்களை பரிமாறிக்கொள்ளவில்லை என்பதே எனது நிலைப்பாடு. நான் உளவுத்துறை ஒழுங்கமைப்பு கூட்டங்களில் பங்கேற்ற நாட்களில், தேசிய உளவுச் சேவை பிரதானியாக இருந்த நிலந்த ஜயவர்தனவுக்கும், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக இருந்த நாலக சில்வாவுக்கும் இடையே உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்வது தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டன என சாட்சியமளித்தார். (2-7)

# அரச மரியாதையுடன் பாடும் நிலாவின் உடல் அடக்கம்

மறைந்த பின்னணிப்பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் உடலுக்கு இறுதிச் சடங்குகள் நிறைவடைந்த பின்னர் பொலிஸ் அணிவகுப்புடன் இறுதி ஊர்வலம் நடைபெற்று உடல் அவரது பண்ணை வீட்டில் குண்டுகள் முழங்க நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது. (ஐ)

# குணமடைந்தோர் 3186

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 28 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 186 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)

# பாடசாலைகளுக்கு விழிப்புணர்வுப் பதாகைகள் வழங்கி வைப்பு

(குருமன்காடு)

கொவிட் - 19 இன் தாக்கம் நீடித்து வரும் நிலையில் மாணவர்களை பாதுகாக்கும் நோக்குடன் சுகாதார வழிமுறைகளை வெளிப்படுத்திய பதாகைகள் வவுனியா பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளையினரால் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் -19 தாக்கத்தில் இருந்து விடுபட மாணவர்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றும் முறை தொடர்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகள் ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் செட்டிகுளம் கோட்டத்திற்குட்பட்ட செட்டிகுளம் மகாவித்தியாலயம், அல் - இக்பால் மகாவித்தியலாயம் உள்ளிட்ட பல பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (2-4-250)






சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு காலியிலிருந்து யாழ்.நோக்கி விழிப்புணர்வு துவிச்சக்கர வண்டிப்பயணம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 23 ஆம்திகதி காலியில் ஆரம்பிக்கப்பட்ட பயணம், நேற்று முன்தினம் வவுனியாவை அடைந்தது. காலியைச் சேர்ந்த பர்னாந்து (வயது-73) என்ற முதியவரே இப் பயணத்தில் ஈடுபட்டவராவார். (படம்-நெளுக்குளம் செய்தியாளர்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 12 1/2 செவ் 6 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சொந்தமாக பான்சிக்கடை வைத்திருக்கின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11226 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 15 1/2 சூரி.செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.<br>எதிர்பார்ப்பு: படித்த மணமகன்<br>தொ.இ: G/11267 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 51 3/4 செவ் 7 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc. Civil Engineer (America)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11227 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 19 செவ் 5 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma in QS, Quantity Serveyor<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/11271 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 40 1/4 செவ் 2 இல் உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. நிரந்தர தனியார் உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11228 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 34 1/4 செவ் 9 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Sc in Computer Science Software Engineer (private)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11272 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: செவ் 2 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அவுஸ்திரேலியாவில் சொந்த நிறுவனம் வைத்திருக்கின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11229 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 3 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: வெளிவாரிப் பட்டதாரி தபால் அதிபர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11274 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முக்கிய விடயங்கள் வெளியாகலாம்?

## தயாராகும் மைத்திரி, ரணில்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பல விடயங்களை வெளியிட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் 5 ஆம் திகதி மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மறுநாள் 6 ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த ஆணையகத்தில் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நிச்சயமாக பதிலளிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதுதவிர மேலும் பல சர்ச்சைக்குரிய உண்மைகளை வெளிப்படுத்துவேன் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணி உறுப்பினர்களிடம் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், குறித்த ஆணையகத்தை சந்தித்து பல முக்கிய விடயங்களை வெளிப்படுத்த தான் தயார் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தெரிவித்தார். (ஐ-4)

முயற்சி இல்லையென்றால் உன்னால் ஜெயிக்க முடியாது. முயற்சி இருந்தால் உன்னால் தோற்க முடியாது. - அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருவிழாக் காலத்து கடைகள் போல நம் ஒற்றுமை இருந்துவிடக்கூடாது

அகிம்சையின் அடையாளமாக விளங்கும் தியாகி திலீபனின் 33ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று.

தமிழ் இனத்தின் எதிர்பார்ப்பை அகிம்சை வழியில் எடுத்துக்கூறி, தன்னுயிரைத் தியாகம் செய்த ஓர் உத்தமனின் நினைவில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கின்ற நிகழ்வு நேற்று சாவகச்சேரி சிவன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

உண்ணாவிரத அனுஷ்டிப்பில் தமிழ்த் தேசியத்தின் பால் பற்றுக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் தன்னார்வத்துடன் பங்கேற்றனர்.

தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டதைப் பார்த்தபோது, எம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

பார்த்தீபனின் ஆத்ம பலம் அனைவரையும் ஒன்றுதிரட்டியுள்ளது என்று நினைத்த போது இதயம் நெகிழ்ந்து கன்னத்தின் ஓரம் நனையக் காரணமாயிற்று.

ஒரு தூயவனின் பெயரால் ஒன்றுசேர்ந்த இந்த ஒற்றுமை நீடித்து நிலைக்க வேண்டும் என்பதே நம் பிரார்த்தனை.

தமிழ்த் தேசியத்தின் பால் பற்றுக்கொண்ட அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுபடுவதற்கான சூழமைவு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழமைவைக் கடந்த பொதுத் தேர்தல் நமக்குத் தந்துள்ளது.

பொதுத் தேர்தலில் சிலருக்குக் கிடைத்த வெற்றிகளும் சிலருக்கு ஏற்பட்ட பின்னடைவுகளும் மிகப்பெரும் பலத்தை நம் தமிழினத்துக்குத் தந்துள்ளது எனலாம்.

அதிலும் குறிப்பாக தோல்விகள்தான் வெற்றியின் முதற்படிகளாக இருந்துள்ளன.

தவிர, வெற்றிகளை விட தோல்விகள் பெற்றுக் கொடுத்த விடுதலைகளே அதிகம்.

ஒருமுறை சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தேர்தலில் தோற்றுப்போனார். தேர்தலில் தோல்வி கண்ட அவர் மஞ்சுகள் நடமிடும் மாதோட்டத்துக்குச் சென்றார்.

அங்கு சிறு குடிசை அமைத்து அந்தக் குடிசையில் ஒரு குப்பிவிளக்கின் வெளிச்சத்தில் இருந்து கொண்டு திருக்கேதீச்சர ஆலயத்தைக் கட்டியெழுப்பினார்.

அன்று சேர் கந்தையா வைத்தியநாதன் தேர்தலில் வென்றிருந்தால், மக்கள் பிரதிநிதி என்பதோடு அவரின் கதை முடிந்திருக்கும்.

ஆனால் அவர் தோற்றதனால்; பாடல் பெற்ற திருக்கேதீச்சரம் மீண்டெழுந்தது.

அந்த மீட்சி இலட்சோப இலட்சம் மக்களுக்கு ஆன்மீக தானத்தை – தெய்வீகத்தை ஈந்து அருளுகிறது.

ஆக, தோல்விகள் தேவையின் காரணமாக இறைவனால் ஏற்படுத்தப்படுபவை.

எனவே கிடைத்த சந்தர்ப்பத்தை தக்க முறையில் பயன்படுத்தி எங்கள் ஒற்றுமையை பலப்படுத்துவோம்.

எங்கள் ஒற்றுமை என்பது திருவிழாக் காலத்துக் கடைகள் போலன்றி, நிரந்தரமாய் நிலைக்கட்டும்.

அதற்காக நாம் அனைவரும் தமிழராய் ஒன்றிணைவோம்.

## குருநகரில் வீடு புகுந்து 20 பவுண் நகை கொள்ளை

### 17 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகரில்வீட்டில்யாரும் இல்லாதபோது, வீடுடைத்து 20 பவுண் தங்க நகைகளும் 35 ஆயிரம் ரூபாய் பணமும் கொள்ளையிட்ட 17 வயது இளைஞன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் நகைகளை வாங்கிஅடகு வைத்த ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், கொள்ளையடித்த நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 17ஆம் திகதிமுற்பகல்இடம்பெற்றது.

வீட்டில் இருந்தவர்கள் வேலைக்குச் சென்றிருந்த வேளை, வீடுடைத்து நகைகள் கொள்ளையிடப்பட்டன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ்நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

திருநகரைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் பொலிஸாரால்நேற்று கைது செய்யப்பட்டார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கொள்ளையிட்ட நகைகளை அடகு வைத்துக் கொடுத்த மற்றொருவரும் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்கள் இருவரும் இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-3)

## சித்தர் வழி யோகா நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

இயற்கை உணவு மூலிகை வைத்தியர் நாகலிங்கம் குலசிங்கம் எழுதிய சித்தர்கள் வழியோகா மற்றும் உணவு மருத்துவம் என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய மண்டபத்தில் இடம்பெறும்.

பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள் மற்றும் தொண்டு நாத சுவாமிகள் ஆகியோர் வழங்குவர். (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நல்ல விடயம் எதுவும் ஒரே நாளில் நடந்து விடுவதில்லை. படிப்படியாக முயற்சித்தே வாழ்வில் குறிக்கோளை எட்டிப் பிடிக்க முடியும் என்பதை மறக்காதீர்கள். -புருஷோத்தமானந்தர்

### நெற் செய்கையாளர்களுக்கு

## இலவச உரம் வழங்குவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெற்செய்கையாளர்களுக்கு முழுமையான மானியத்தில் உரம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஏனைய பயிர்ச் செய்கையாளர்களுக்கு 50 வீத மானியத்தில் அதாவது ஆயிரத்து 500 ரூபாய் வீதம் விநியோகிக்க உள்ளதாகவும் விவசாயிகள் தமக்குத் தேவையான அளவை பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் கடந்த பதினைந்து நாட்களுக்கு முன் உரத்திற்கு ஓரளவு தட்டுப்பாடு நிலவியதை ஏற்றுக் கொள்வதாகவும் இதனைத் தவிர்க்க தற்போது இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மெற்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்துள்ளதாகவும் விவசாயிகள் தமக்குதேவையான உரத்தை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியும் என்று விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (ம-3.10)

## வீரமைந்தன் நூல் வெளியீட்டுவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தின் ஏற்பாட்டில் வீரமைந்தன் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் சேர் பொன். இராமநாதன்வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் கௌரவ விருந்தினராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.சிதம்பரநாதனும் சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசனும் கலந்து கொள்வர்.

ஏற்புரையை கலாபூஷணம் இரா.பீதாம்பரம் நிகழ்த்துவார். (ம-3)

### 20ஆவது திருத்தச் சட்டத்தில்

## திருத்தங்களை முன்வைக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)


பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டத்தில் பல திருத்தங்களை முன்வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தில் பாராளுமன்றம் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து பாராளுமன்றத்தைக் கலைக்க ஒரு வருடத்திற்குப் பிறகு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

எனினும் இதில் மாற்றம் செய்து பாராளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு இரண்டரை ஆண்டு வரம்பு விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்தத்தில் மீண்டும் உறுதி மொழியைச்சேர்க்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ நீதியின் பாதையில் தான் ஜீவன் உண்டு. ஆதலின் அந்தப் பாதையின் எந்தப்புறமும் மரணம் இல்லை.
- ❖ மூடர்களின் வாயில் அகப்பட்ட நீதிமொழிகள் குடிகாரன் கையில் அகப்பட்ட ஒரு முள் போன்றது!
- ❖ வேட்டையில் எடுத்து வந்ததைச் சோம்பேறி சமைப்பது இல்லை. சுறுசுறுப்பே மனிதனின் அரும்பொருள்.
- ❖ ஓர் ராஜ்யம் தனக்குத் தானே உள் விரோதமாகப் பிளவுபடுமேயானால், அந்த ராஜ்யம் நிலைநிற்க மாட்டாது.
- ❖ நீ பரிசுத்தமான மனிதனையும், நேர்மையாளனையும் கவனித்துப் பார். அவனுடைய முடிவு அமைதியானதாயிருக்கும்.
- ❖ மனதில் பற்றற்றவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் மோட்ச ராஜ்யம் அவர்களுடையது.
- ❖ அயலவனை அவமதிப்பவன் பாபம் செய்கிறான். ஆனால், எளியவனுக்கு இரங்குபவனோ ஆனந்தமாயிருக்கிறான்.
- ❖ வானமும் பூமியும் ஒழிந்துபோகும். ஆனால், என் வார்த்தைகளோ அழியவே அழியாது.

# மக்களின் பொது நலனுக்காக வழங்கப்படும் உத்தரவுகளை மீறுகின்ற அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி அதிரடி

(கொழும்பு)

**மக்களின் பொது நலனுக்காக வழங்கப்படும் அனைத்து வாய்மொழி ரீதியிலான உத்தரவுகளையும் சுற்றறிக்கையாக கருதி செயற்படுத்த வேண்டுமென்றும் இவ் உத்தரவுகளை மீறுகின்ற அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.**



பதுளை, ஹல்துமுல்லை, வெலங்விட்ட கிராமத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட "ஜனாதிபதி கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்வின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச அதிகாரிகளிடமிருந்து நான் எதிர்பார்ப்பது மக்கள் பிரச்சினைகளை தெளிவாக புரிந்துகொண்டு தீர்வுகளை வழங்குவதே ஆகும். மக்களின் பக்கம் நின்று சரியான மற்றும் தைரியமாக முடிவெடுக்கக்கூடிய அதிகாரிகளை நான் பாதுகாப்பேன்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க அரச நிறுவனங்கள் நீண்டகாலத்தை எடுக்கின்றன.

ஒரு நிறுவனத்திலிருந்து எழுத்துமூல விசாரணைக்கு இன்னுமொரு நிறுவனம் 14 நாட்களுக்குள் பதில் அளிக்காதவிடத்து. அவ் எழுத்து மூல வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதாக கருதி மக்களுக்கு பதில் கூறவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

ஹல்துமுல்லை, பதுளை மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசங்களில் ஒன்றாகவும் வெலங்விட்ட, ஹல்துமுல்லை பிரதேச செயலகப் பிரிவின் பின்தங்கிய கிராமமாக உள்ளது.

"ஜனாதிபதி கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்வின் முதலாவது சந்திப்பு ஹப்புத்தளை, வெலங்விட்ட 100 ஏக்கர் கிராமத்தின் குமாரதென்ன வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, பிரதேச மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டார்.

பாதைகள், மின்சாரம் மற்றும் குடிநீர் பிரச்சினை உள்ளிட்ட அடிப்படை தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாமல் மக்கள் தமது பாரம்பரிய கிராமங்களை விட்டுச் சென்றுள்ளதாக கிராமவாசிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

காணிமறுசீரமைப்புஆணைக் குழு, வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரிய காணிகள் தொடர்பாக மக்கள் முன்வைத்த பிரச்சினைகளுக்கு உரிமம் மற்றும் உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மகாசங்கத்தினர், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் தேனுக்க விதானகமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷன தெனிபிட்டிய, திஸ்ஸ குட்டியாரச்சி, சாமர சம்பத் தசநாயக்க, ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோருடன் பிரதேச அரசியல் பிரதிநிதிகள், நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஜ-4)

# புதிய இராஜதந்திரிகளை நியமிக்க பாராளுமன்ற தெரிவுக் குழு ஒப்புதல்

(கொழும்பு)

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட எட்டு புதிய இராஜதந்திர அதிகாரிகளை நியமிக்க, உயர் பதவிகள் சம்பந்தமான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.


சபாநாயகர் தலைமையில் நேற்றுக் கூடிய கட்சி தலைவர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உயர் பதவிகள் சம்பந்தமான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய சி.எ.சந்திரபிரேம ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாகவும் எஸ்.அமரசேகர தென்னாபிரிக்கவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகராகவும் ஓய்வுபெற்ற அட்மிரல் கே.கே.ஹரிஸ்சந்திர சில்வா ஆப்கானிஸ்தானுக்கான இலங்கை தூதுவராகவும் நிமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், விஸ்ராமால் சஞ்சீவ் குணசேகர ஜப்பானுக்கான இலங்கையின் தூதுவராகவும் மிலிந்த மொரகொட இந்தியாவுக்கான புதிய இலங்கை உயர் ஸ்தானிகராக, ரவிநாத் ஆரியசிங்க அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, பேராசிரியர் செனிகா ஹிரிபுரேகம பிரான்ஸிற்கான இலங்கை தூதுவராகவும் கலாநிதி பாலித கொஹன சீனாவுக்கான இலங்கை தூதுவராகவும் நியமிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (2-7)

# தேங்காய்க்கு நிர்ணய விலை



(கொழும்பு)

தேங்காய் ஒன்றிற்கான அதியுச்ச நிர்ணய விலையை அறிவித்து நுகர்வோர் விவகார அதிகார சபை வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தேங்காய்க்கான நிர்ணய விலையானது நேற்று முன்தினம் 25 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 13 அங்குலத்திற்கு அதிகமான தேங்காயை 70 ரூபாவுக்கும் 12 முதல் 13 அங்குலம் வரையான தேங்காயை 65 ரூபாவுக்கும் 12 அங்குலத்திற்கு குறைவான தேங்காயை 60 ரூபாவுக்கும் விற்பனை செய்ய வேண்டும் என அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# கைதுகள் 402



(கொழும்பு)

மேல் மாகாணத்தில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் 402 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்றுக் காலை 5 மணிவரை நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைளின் போது பலர் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 200 | 200 |
| தக்காளி | 200 | 150 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 130 | 120 | 120 |
| கரட் | 100 | 190 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 100 | 80 |
| புடோல் | 100 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 160-120 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 160 |
| பாகற்காய் | 300 | 360 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பயற்றங்காய் | 180 | 200 | 130 | 160 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 90-100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 300 | 270 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 280 | 200 |
| போஞ்சி | 300 | 280 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 75 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 260 | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | -- | -- |

## யாழ்.நகரில்...

முன்பாக நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கார் ஒன்றில் வந்த நான்கு பேர், மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருவரை மோதி விழுத்தி விட்டு அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## யாழில் நேற்று...

தினர் விசாரணை நடத்தினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி செல்லும் வழியில் செம்மணியிலிருந்து இராணுவம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டது.

மேலும் ஒன்றுபட்ட தமிழ்க் கட்சிகளின் உண்ணாவிரதப் போராட்டம் சாவகச்சேரி சிவன் கோயில் முன்றலில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அப்பிரதேசம் முழுவதும் பொலிஸார், அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

பொதுமக்கள் ஆலய பிரதேசத்துக்கு செல்வது தடுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் கதிரை மற்றும் பந்தல்களுடன் வந்த வாகனங்களை அவற்றை இறக்க விடாது பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,6,10)

## திலீபனின் உயிர்...

சாவகச்சேரியில் நேற்று நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தின் இடையே, தியாக தீபம் திலீபன் சாவைத் தழுவிய காலை 10.48 மணியளவில், உண்ணாவிரதம் இருந்த அனைவரும் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தினர். (ம-3)

## 13ஐ முழுமை...

கொண்டார்.

தமிழர் தரப்புடன் அமைதி மற்றும் சமாதானத்துக்கான பேச்சை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும் இந்தியா இதன்போது வலியுறுத்தியதாக இந்திய மத்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

13ஆவது சட்டத்திருத்தம் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்கிறது. அதன்படி தமிழர்களுக்கும் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதை இந்தியா வலியுறுத்தியது.

இந்தியா - இலங்கை நாடுகளுக்கு இடையேயான உச்சிமாநாடு காணொளிக் காட்சி வாயிலாக நேற்று நடைபெற்றது.

இதில் இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இதன் போதே இலங்கையிடம் பிரதமர் மோடி இதனை வலியுறுத்தியதாக இந்திய வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகள், வாணிபம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது இருதரப்பினரும் பேசினர். மேலும் மீனவர்கள் பிரச்சினை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது இலங்கையுடனான பரந்த உறவுகளை வளர்க்க பிரதமர் மோடி 15 மில்லியன் டொலர்கள் உதவியை அறிவித்தார். (ம-3)

## தமிழர்களின்...

வின் இறுதி நாளான நேற்று 108 பானைகள் வைத்து கோலாகலமாக பொங்கல் விழா இடம்பெற்றது.

3 ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழா நிகழ்வு கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்கள் இடம்பெற்று நேற்று பத்தாம் நாள் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றது.

அந்தவகையில் நேற்றையதினம் ஆலய வளாகத்தில் 108 பானைகளில் பொங்கல் பொங்கி விசேட பூஜை நிகழ்வுகளுடன் கோலாகலமாக பொங்கல் விழா நிகழ்வுகள் இடம்பெற்றது.

இதேவேளை ஆலய வளாகத்தில் அதிகளவான பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் ஆலயத்திற்குள் உட்செல்வதற்கான சந்தியில் ஒலுமடு பிரதான வீதியை அண்டி இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை ஆலயத்தில் தியாகி திலீபனை நினைவுகூர்ந்து தீபம் ஏற்றி நிகழ்வுகள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என வவுனியா நீதிமன்றால் வழங்கப்பட்ட தடை உத்தரவு கோரிக்கை ஒன்றின் பிரதியை நெடுங்கேணிப் பொலிஸார் ஆலயத்தின் நிர்வாகத்தினருக்கு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## வடக்கு, கிழக்கு...

எது.

வர்த்தக சங்கத்தினர், பொது அமைப்புகள் என அனைத்துத் தரப்பினரும் கதவடைப்பு போராட்டத்துக்கு ஆதரவளிக்க தயாராகி வருகின்றனர்.

இதனால் நாளை திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு முழுமையாக முடங்க வுள்ளதாக தெரிய வருகிறது. (ம-3)

## உணர்வெழுச்சி...

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலை தடுக்கும் நோக்கில், நீதிமன்றங்களின் மூலம் தடை உத்தரவுகளை பிறப்பித்து, தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையை ஒடுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில், உண்ணாவிரத போராட்டத்தை நடத்த திட்டமிட்டிருந்த போதும், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் அதற்கு தடை உத்தரவு பிறப்பித்ததால், அங்கு போராட்டம் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அத்துடன் மல்லாகம் நீதிமன்றத்திலும் பொலிஸார் தடையுத்தரவை பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை 9 மணியளவில் சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு முன்பாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் சுமார் 30 பேர் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

போராட்டம் தொடங்கியதை அறிந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் விரைந்து சென்று தடுக்க முயன்றனர். உண்ணாவிரத போராட்டம் இடம்பெறுவதை அறிந்து, மேலும் பல அரசியல் பிரமுகர்கள் பொதுமக்களும் போராட்ட களத்துக்கு சென்றனர்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் திரண்டு இந்த போராட்டத்தில் உணர்வெழுச்சியுடன் பங்கெடுத்திருந்தனர்.

இதேவேளை நேற்றுக் காலை 9 மணிக்கு முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மாலை 5 மணிக்கு சுமூகமான முறையில் பழரசம் வழங்கி நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

பழரசத்தினை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ் முதலாவதாக அருந்தி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து போராட்டத்தில் கலந்து கொண்ட ஏனையோரும் பழரசம் அருந்தி உண்ணாவிரதத்தினை முடிவுக்கு கொண்டு வந்தனர். (ம-3,6,10,30)

## கொல்கத்தா வெற்றி




## பல்கலைக்கழக...

அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் பங்கேற்றனர்.

எனினும் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்ட இடத்துக்குச் சென்ற போது, பொலிஸார் அவர்களை அனுமதிக்க மறுத்தனர்.

எனினும், சட்டத்தரணி என்.சிறிகாந்தா பொலிஸாருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து, அவர்கள் போராட்டத்தில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். (ம-3)


மெகா பவர்
திகதி 26/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0624
வெற்றி எழுத்து: D | சுப்பர் இலக்கம்: 25 | வெற்றி இலக்கங்கள்: 12 43 64 73

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/09/26 | சீட்டிழுப்பு இலக்கம் 1538
சுப்பர் இலக்கம் 03 | வெற்றி இலக்கங்கள் 34 52 55 63
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 26-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2552
ஆங்கில எழுத்து: Q | வெற்றி இலக்கங்கள்: 18 27 58 66
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/09/2020 | சீட்டிழுப்பு இலக்கம் 1058
ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கங்கள்: 9 3 4 8 6 6
தேசிய லொத்தர் சபை

සංවර්ධන වාසනාව — அபிவிருத்தி அதிஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 370 | திகதி 26.09.2020 | வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து: H | வெற்றி இலக்கங்கள்: 26 52 53 | விதி எண்: 8
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,292,936
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1227 | நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 26.09.2020 | தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: P 04 56 57 76
SUPER 500: 5 4 6 0
அபிவிருத்தி லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை | சீட்டிழுப்பு இல: 1053 | வர்ணம்: மஞ்சள் | சீட்டிழுப்பு திகதி: 2020.09.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 73,232,225/-
வெற்றி இலக்கங்கள்: 06 53 67 74 | ஆங்கில எழுத்து: S
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9715
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 315
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சனிக்கிழமை | சீட்டிழுப்பு திகதி: 2020.09.26 | சீட்டிழுப்பு இல.: 3383 | வர்ணம்: பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,796,690/-
வெற்றி இலக்கங்கள்: 18 28 44 57 | ஆங்கில எழுத்து: Z
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 1040
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 26.09.2020 | வெற்றி வாரம் 2934 | வர்ணம் இளநீலம்
வெற்றி இலக்கங்கள்: 20 22 40 58 | சிம்மம்
பம்பர் சான்ஸ் — லிசேட் இல.
ரூ.500 பரிசுக்குரிய 4229
ரூ.100 பரிசுக்குரிய 240
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,182,520
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் www.dlb.lk தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## அமெரிக்க லொத்தர் விசா

2021 ஆம் ஆண்டுக்கான
அமெரிக்க லொத்தர் விசாவிற்கான
பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
நீங்களும் அதிஷ்டசாலியாகுங்கள்.

LANKA CARGO WORLDWIDE EXPRESS
315, Kasthuriyar Road, Jaffna.
(4096)

**No - 076 485 4092**



## பெயர் மாற்றம்

யாழ்.- நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட நிர்மலகுமார் கஜானன் ஆகிய எனது பெயரை இன்றுமுதல் நிர்மலகுமார் ஜனா என மாற்றம் செய்து இனி வரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.
(4091)

உண்மையுள்ள– நிர்மலகுமார் ஜனா


## 20 ஆல் ஆபத்து - சந்திரிகா

(கொழும்பு)

20 ஆவது திருத்தம் நாட்டுக்கு ஏற்றதல்ல என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று அத்தனகல்லவில் நடந்த ஒரு நினைவு நிகழ்வுக்குப் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் பேசிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நாட்டின் ஜனநாயகத்தை அழிக்கும் ஆபத்தான சட்டமாகும் என்றார். (ம-03)


## விற்பனைக்கு

அலுவலக மேசைகள்
(Computer Tables)
விற்பனைக்கு உண்டு.
(4085)

**076 691 1081**



## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன

Lanka Cargo Worldwide Express

315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (4073)

021 221 1995
076 283 2397



## வேலை வாய்ப்பு

- விற்பனை முகாமையாளர் - ஆண், பெண் (சிங்களம் பேசும்திறன் உடையோர் தேவை.)
- விற்பனைப் பிரதிநிதி - ஆண்
- விற்பனை உதவியாளர்கள் - ஆண், பெண்
- கணக்காளர் உதவியாளர் - பெண் (கணினி அறிவுடையோர்.)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் சமுகமளிக்கவும்
குரு ஹாட்வெயார், கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி

தொடர்புகளுக்கு 077 743 5265
உரிமையாளர் குரு ஹாட்வெயார்.
(C-368)



## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை.

- வாகன சாரதி 1 – ஆண்
- கணக்காய்வாளர் 2 – பெண்கள்
- ஸ்ரோர் கீப்பர் 2 – பெண்கள்
- பில் கிளார்க் 1 – பெண்
- விநியோக உதவியாளர் 3 – ஆண்கள்

நேர்முகத்தேர்வு 30.09.2020 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். சுயவிபரக் கோவையுடன் சமுகம் தரவும். (C-400)

யாழ்ப்பாண இரும்பகம்
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 8468**



## FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்ச் Courses

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma
(DELF A1, A2, B1, B2)
V. ஜெகன் (Trained in France)
(C-377)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781

23\2, சோமசுந்தரம் அவெனியு,
கச்சேரி. Near the Fuel Station.
0779 789 456 / 021 221 9497

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1,
Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.



## ENGLISH LANGUAGE CLASS (SPOKEN)

5 - 18 வயதினருக்கான ஆங்கிலமொழிக் கற்றல் செயற்பாடுகளுக்கான புதிய பிரிவு

03.10.2020 காலை 9.00 மணிக்கு ஆரம்பம்.
(3 மாதங்கள் – சனி, ஞாயிறு)

ஒரு பிரிவில், 25 மாணவர்கள் மட்டுமே உள்ளடக்கப்படுவர்.

பதிவுகளுக்கு முந்துங்கள்
(4097)

**No :- 076 283 2397**



## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை


லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலண்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது (C-366)

இந்தியா – டுபாய் – சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துனுக்காய் மன்னார்/வவுனியா


# மரண அறிவித்தல்



## வீரபாகு மகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற மலேரியா தடை இயக்க ஊழியர்)

பிறப்பு – 1948.05.17 இறப்பு – 2020.09.26

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் 2ம் ஒழுங்கை, முல்லை வீதி, பரந்தனை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வீரபாகு மகேஸ்வரன் நேற்று (26.09.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரபாகு - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் கேதீஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா – ஜானகி தம்பதியரின் அன்பு மருமகனும் தீபா, லாவண்யா, பிரிந்தா, சங்கீதா, கீர்த்திகா, கிரகரி, ஜனார்த்தனன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதாசன், நடராஜா, கேதீஸ்வரன், மதியழகன், உதயன், சிவகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லோகேஸ்வரன், ரஞ்சினிதேவி, காலஞ்சென்றவர்களான அஞ்சலிதேவி, விக்னேஸ்வரன் மற்றும் ரவிச்சந்திரிகா காலஞ்சென்ற மங்களம் மற்றும் முகுந்தன், விக்னேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ராஜேஸ்வரி, ராஜேந்திரம், பத்மநாதன், வக்சலாதேவி, மகேந்திரம், காலஞ்சென்ற விஜயராணி, மற்றும் பாலசரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் விதுசா, புகழன்பு, யதுஸ்னவி, யட்சியா, ஜீவராஜ், லுயிக்கா, சாருண்யா, யதுசன், நிதுசன், பிரீத்தி, தாருசா, நிவேதன், ரிஷ்மிகா, அபிநயா, சுவாதிகன், லுக்ஷாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பரந்தன் கோரக்கன்கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-402)

2ம் ஒழுங்கை, முல்லை வீதி, பரந்தன். 076 615 6958 தகவல்:- குடும்பத்தினர்


## குத்தகைக்கு காணி தேவை

சிறிய அளவிலான Restaurant ஒன்று அமைப்பதற்கு ஏதுவாக யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குறைந்தது ஒரு பரப்புக்கு மேற்பட்டவாறு வெற்றுக்காணி நீண்டகால குத்தகைக்குத் தேவை.
(4084)

தொடர்பு - 077 725 1036
நேரம் காலை 9.00 முதல் மாலை 5.30 வரை



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-308)



## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-112)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com



## கனடாவில் வேலைவாய்ப்பு / கல்வி கருத்தரங்கு

3 year work permits / குடும்பத்துடன் நிரந்தரமாக தங்கலாம்

Home support worker – வருடத்திற்கு 2500 வீசா வாய்ப்புக்கள்
Home child care provider – வருடத்திற்கு 2500 வீசா வாய்ப்புக்கள்

அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L
- வயதெல்லை :- 19 முதல் 50 வரை

அனுமதி இலவசம்

இன்று மட்டும் 27-09-2020

CANADA MIGRATION PILOT
CIMS
(C-308)

Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684
Member of Immigration Consultants of Canada Regulatory Council
Member of Canadian Association of Professional Immigration Consultants

CIMS COLLEGE
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
0777069777 / 0777068777

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 277

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 | 27.09.2020 | தொலைபேசி : 021 222 3378





# மறுக்கப்படும் உரிமைகள் !



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தன் இசையால் உலகை ஈர்த்த எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மறைவுக்கு ஈழத் தமிழர்கள் சார்பில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, மீண்டும் அனைவரும் எழுந்து மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் இசை உலகிற்கு இறைவனால் தரப்பட்ட பொக்கிசம். அவர் மறைந்தாலும் அவரின் இசை சூரிய சந்திரர் இருக்கும் வரை இந்தப் பூமியில் ஒலித்துக் கொண்டே இருக்கும் எனப் பண்டிதர் கூறினார்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் அமைதி நீடித்தது. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** இலங்கையில நினைவேந்தக் கூட உரிமை இல்லாதவர்களாகத்தான் நாம் இருக்கிறம். எப்படி எல்லாம் தமிழ் மக்களின்ர உரிமைகளை நசுக்க முடியுமோ அதெல்லாம் மிக நுட்பமாக நடந்தாகிறது.

**கங்காணி:** 2009 மே இறுதி யுத்தத்தோட எங்கட அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு சர்வ தேசத்திட்ட முறையிட்டிருக்க வேணும். என்ன செய்யிறது கிடைச்ச அருமந்த சந்தர்ப்பங்களையும் தொலைச்சுப்போட்டு இருக்கிறம்.


**மூப்பர்:** உண்மைதான் காலத்தை பயன்படுத்த வேணும். காலம் கடந்து போனால் எல்லாம் அவ்வளவுதான்.

**சிறாப்பர்:** சுயநல அரசியல் செய்த தமிழ் அரசியல் தரப்பால தான் எல்லாம் அழிந்து போனது.

ஆனாலும் இப்ப தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டிருப்பது மனதுக்கு ஆறுதலைத் தருகுது.

**விதானையார்:** ஆனால் எனக்கொரு மனக் குறை இருக்குது.

**சிறாப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.



## தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகக் குரல் கொடுத்த போது

**விதானையார்:** தியாகி திலிபனை நினைவேந்தல் செய்வதற்கு அனுமதி வழங்க வேணுமெண்டு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பி வைக்கிற கடிதத்தில தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டவியள். எல்லாரும் ஓர் இடத்தில கூடிக் கையெழுத்திட, முன்னணிக்காரரிட்ட கடிதத்தைக் கொண்டு போய்க் கையெழுத்து வாங்கினது நயத்தக்க நாகரிகமாகத் தெரியவில்லை. இவ்வாறான சம்பவங்களை தவிர்ப்பது எல்லோருக்கும் நல்லது.

**சாத்திரியார்:** என்ன இருந்தாலும் பாராளுமன்றத்தில விக்னேஸ்வரன் ஐயா, சிறிதரன், கஜேந்திரகுமார் ஆகியோர் ஆற்றுகின்ற உரைகள் நாங்கள் தமிழரடா என்று மார்தட்ட வைக்குது.

**விதானையார்:** சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பேசுவதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்த போது, அனுமதி மறுக்கப்படுவது பிழை என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எழுந்து பேசின போது மனம் நெகிழ்ந்தது. இப்படி எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு தமிழ் இனத்திற்காகக் குரல் கொடுத்தால், எப்படி இருக்கும்.

**பண்டிதர்:** இதைத்தானே தமிழ் மக்கள் எதிர்பார்க்கினம்.

**மூப்பர்:** இலங்கையின் மூத்தகுடி தமிழர்கள் என்று பாராளுமன்றத்தில விக்னேஸ்வரன் ஐயா பேசிய போது சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கத்திக் குழறினவியள். அந்த நேரம் எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருத்தரும் விக்னேஸ்வரன் ஐயாவுக்குச் சார்பாக நிண்டு குரல் கொடுக்கல்லத்தானே!

**வாத்தியார்:** சரி... சரி ...குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. இனி மேலாவது தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு செயற்பட்டால், அது பெரும் காரியம். அந்த ஒற்றுமையை வலியுறுத்த வேணும். பழைய துகளை புரட்டிக் கொண்டிருந்தால் எதுவும் நடக்காது. வாத்தியார் வைத்திலிங்கம் இறுக்கமாகக் கூறினார்.

வாத்தியாரின் கண்டிப்பு ஆலடியை சில நிமிடம் மௌனமாக்கியது.

(மௌனத்தைக் கலைக்க சாத்திரியார் குரல் கொடுத்தார்).

**சாத்திரியார்:** அதுசரி, எங்கட வாழ்வியல் முறைகளை, பண்பாடுகளைப் பாதுகாக்க வேணும் எண்டு சொல்லுறம். ஆனால் எங்கட மூதாதையர் கட்டி வைத்த அருமந்த வீடுகளை உடைச்சுத் தள்ளுறம். இதைத் தடுக்க ஆர் இருக்கினம்.

**கங்காணி:** சாத்திரியார் சொல்லத்தான் எனக்கு ஞாபகம் வருகுது. யாழ்ப்பாணம் அரசடி வீதியில இருந்த பழைய காலத்துப் பெரிய வீடொன்றை உடைச்சு அகற்றுகினம். அதைப் பார்க்க வயிறு பத்தி எரியுது.

சிற்ப வேலைகள் அடங்கிய கதவுகள், வைரம் குன்றாத பனை மரங்கள் தமிழர்களின் கூட்டுக் குடும்ப வாழ்வியலை அடையாளப்படுத்தும் நாற்சாரங்கள்.. உண்மையில அந்த வீட்டைத்திருத்தாமலே எத்தனையோ ஆண்டுகளுக்கு அப்படியே வைத்திருக்க முடியும்.

**பண்டிதர்:** எங்கட பழைய வீட்டுக் கதவு நிலை, ஜன்னல்களை தென் பகுதி ஆட்கள் வாங்கிக் கொண்டு போய் அங்க இலட்சக்கணக்கில விக்கினம்.

அந்தக் கதவு நிலைகளை ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களுக்குப் பொருத்துகினம் எண்டால் எங்கட பெறுமதி எங்களுக்குத் தெரியல்ல என்பதுதானே பொருள்.

**சிறாப்பர்:** நீங்கள் இதைச் சொல்லுறியள் அந்தக் காலத்தில எங்கட மூதாதையர்கள் பயன்படுத்திய குத்துவிளக்கு, செம்பு, தாம்பாளம், துண்டாமணி விளக்கு, வெற்றிலைத் தட்டம் இவற்றையெல்லாம் எங்களிட்ட இருந்து வாங்கிக் கொண்டு போனவர்கள், இப்ப அதற்கு முலாம் பூசிப் போட்டு இப்ப இங்க கொண்டு வந்து விற்கினம் எண்டால் பாருங்களன்.

பெரு மூச்சு விட்டபடி சிறாப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ் மக்களால் உணரப்படும் பாதுகாப்பற்ற சூழமைவு



மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது தியாகி திலீபனை - முள்ளிவாய்க்காலில் இறந்து போன எங்கள் உறவுகளை - மாவீரர்களை நினைவுகூருவதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

நினைவேந்தல் என்பது அடிப்படை உரிமை என்ற விடயம் அப்போது இலங்கையில் செல்லுபடியாகி இருந்தது.

ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, நினைவேந்துகின்ற உரிமையை தமிழ் மக்கள் இழக்க வேண்டியதாயிற்று.

ஆக, இலங்கையில் தமிழ் மக்களின் இருப்புக்கும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டென்பது உறுதியாகிறது.

அதாவது இலங்கையில் தமிழர்களின் உரிமை சட்டங்கள் ஊடாக வரையறை செய்யப்படவில்லை.

மாறாக இலங்கையின் ஜனாதிபதியாக யார் வருகிறார்களோ, பாராளுமன்ற அரசை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களைப் பொறுத்துத்தான் தமிழர்களின் தலைவிதி அமைகிறது.

முன்பு ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இருந்த போது, தமிழ் மக்கள் நினைவேந்தும் உரிமைக்கு உரித்துடையவர்களாக இருந்தனர்.

ஆனால் இப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமை மறுக்கப்படுகின்றது.

இங்கு தியாகி திலீபனை நினைவேந்துவதற்கான தடையை நீதிமன்றமே விதித்தது.

எனவே நீதிமன்ற விவகாரங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலையிடமாட்டார் என்பது கெஹலிய ரம்புக்வெலவின் அறிக்கை.

நல்லது. நீதிமன்ற விவகாரங்களில் ஜனாதிபதி தலையிடாமல் இருந்தால், அது வரவேற்கப்பட வேண்டும்.

நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்க வேண்டும். அதுவே நீதிபரிபாலனத்திற்கு மிகவும் அவசியமானது. அவ்வாறு நீதிமன்றங்களின் தீர்ப்புகளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலையிடமாட்டார் என்பது உண்மையாயின் நீதிமன்றத்தால், குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டவர்களுக்கு - மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு வழங்கியது எந்த அடிப்படையில் என்ற கேள்வி எழும்.

ஆக, நீதிமன்ற விவகாரங்களில் ஜனாதிபதி தலையிடமாட்டாரா? அல்லது தமிழர்கள் தொடர்பில் நீதிமன்றம் வழங்குகின்ற தீர்ப்புகளில் ஜனாதிபதி தலையிடமாட்டாரா? என்ற ஐயம் எழவே செய்யும்.

எது எவ்வாறாயினும் தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு அனுமதி தாருங்கள் எனத் தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கூட்டாக விடுத்த கோரிக்கை மீது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

எனினும் அவர் அதனை உதாசீனம் செய்துள்ளார் என்பதை இங்கு குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தன்னை ஆதரிக்கவில்லை என்பதற்காக தமிழ் அரசியல் கட்சிகளின் கடிதத்தை அவர் உதாசீனம் செய்தாரா? அல்லது நினைவேந்தும் உரிமையை தமிழர்களுக்கு வழங்க முடியாது என்ற கோதாவில் ஜனாதிபதி கோட்டாபய செயற்பட்டாரா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, இந்த நாட்டின் அனைத்து மக்களையும் சமமாக நடத்துவேன் எனக் கூறியிருந்தார்.

அப்படியாயின், தமிழ் மக்கள் தங்களின் உன்னதமான தியாகி எனப் போற்றுகின்ற தியாகி தீலிபனை நினைவேந்துவதற்கு ஜனாதிபதியிடம் அனுமதி கேட்டபோது அதனை அவர் வழங்காமல் வாழாதிருந்தது ஏன்? என்ற கேள்வி எழுவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

இந்தக் கேள்விகளுக்கூடாக நிறைந்த ஐயங்களும் பயங்களும் ஏற்படுவதுடன் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளையும் தமிழ் மக்கள் உணர்கின்றனர்.

தவிர, தேவையற்ற வன்முறைகளும் அடக்குமுறைகளும் தமிழர் தாயகத்தில் தலைவிரித்தாடக் கூடிய ஏதுக்களும் உருவெடுக்கின்றன என்பதையும் இங்கு உணர முடிகின்றது.

இதனை உதாரணப்படுத்த வேண்டுமாயின் நேற்று முன்தினம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுடன் பொலிஸாரும் படையினரும் முரண்பட்டுக் கொண்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுடன் பொலிஸார் முரண்பட, பொலிஸாருக்கு உதவியாக வந்த இராணுவம் துப்பாக்கி முனைகளை நீட்டி மாணவர்களை அச்சுறுத்த; யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சூழலில் பதற்றம் ஏற்பட்டது.

ஏற்பட்ட பதற்றம் ஒருமாதிரியாகத் தணிந்ததாயினும் அந்தப் பதற்றம் முற்றி முறுகலாகி இருந்தால், அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருந்திருக்கும்.

ஆக, சமகாலத்துச் சூழ்நிலையில் தமிழ் மக்களுடன் வலிந்து தர்க்கம் புரிவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

எனவே இது விடயத்தில் நாம் மிகவும் நிதானமாக நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை மட்டும் இங்கு நாம் கூற முடியும்.

விதுரன்




## ஆமை- நத்தை- முயல்


ஒரு காட்டில் ஆமையும், நத்தையும் நண்பர்களாய் இருந்தன. அவை இரண்டுக்கும் நீண்டகாலமாக, ஒரு மனக்குறை இருந்தது.

தங்களால் வேகமாக நடக்கவோ, தாவிக் குதித்து ஓடவோ முடியவில்லை என்ற மனக்குறைதான் அது. ஒரு நாள், அவை இரண்டும் நடந்து சென்றுகொண்டிருந்த போது, ஓர் அழகிய வெள்ளை நிற முயல் தாவிக் குதித்து, ஓடி வருதைக் கண்டன.

"முயலே நில்" என்றது ஆமை. முயல் நின்றது. "நீ எப்படி இவ்வளவு வேகமாய் தாவிக் குதித்து ஓடுகிறாய்?" என்று கேட்டது நத்தை.

"இது என்ன கேள்வி உங்களுக்கு இருப்பது போல், என் முதுகில் கனமான ஓடு இல்லை. அந்தச் சுமை இல்லாததால், வேகமாக ஓடுகிறேன்" என்று சொல்லி விட்டு, முயல் அந்த இரண்டையும் கேலியாகப் பார்த்தது.

"ஓஹோ எங்களின் வேகக் குறைவுக்கு எங்கள் ஓடுதான் காரணமா?" "ஆமாம், நீங்கள் உங்கள் ஓடுகளைக் கழற்றிப் போட்டு விட்டால், என்னைப் போல் வேகமாக ஓடலாம். வேகமாக ஓடுவதில், ஓர் அலாதியான சுகம் இருக்கிறது தெரியுமா... அனுபவித்துப் பாருங்கள்" என்றது முயல்.



ஆமைக்கும், நத்தைக்கும் அந்த இடத்திலேயே தங்கள் முதுகு ஓடுகளைக் கழற்றிப் போட்டுவிட வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அவற்றைக் கழற்ற முயன்ற போது, திடீரென புதர் மறைவில் ஏதோ அசையும் ஓசை கேட்டது.

ஆமையும், நத்தையும் ஆபத்தை உணர்ந்து, தங்கள் ஓடுகளைக் கழற்றும் முயற்சியைக் கைவிட்டன. சட்டென, புதர் மறைவிலிருந்து ஒரு ஓநாய் வெளிப்பட்டு, முயலை நோக்கிப் பாய்ந்தது.

ஆமையும், நத்தையும், விருட்டென்று தங்கள் உடலை ஓடுகளுக்குள் இழுத்துக் கொண்டு, உயிர் பிழைத்தன. ஓநாய் முயலைப் பிடித்தது.

சிறிது நேரம் சென்ற பிறகு ஓடுகளை விட்டு வெளியே வந்த ஆமையும், நத்தையும் முயலின் இரத்தத்தைப் பார்த்து, உறைந்து போயின.

தாங்கள் வேகமாய் ஓடுவதைவிட, உயிர் பிழைத்து வாழ்வதே முக்கியமானது என்பதை உணர்ந்தன. தங்கள் எதிரியிடமிருந்து காப்பாற்றிய தங்கள் ஓடுகளுக்கு அவை நன்றி கூறின.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## சர்ச்சைகளின் காலம்




இதிலிருந்து தேவரடியார்கள் எந்தளவுக்கு அடிமை வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இது இடத்துக்கு இடம், சூழலுக்குச் சூழல் மாறுபடக்கூடிய ஒரு சமூக நிலையாகவே இருந்திருக்கிறது.

உதாரணமாக சோழர்கள் நன்கு வாழ்ந்த காலத்தில் தேவரடியார்கள் அரசர், பிராமணர் ஆகிய இருவருக்கு அடுத்த நிலையில் இருந்திருக்கிறார்கள்.

பல்லக்கில் ஏறுகிற உரிமை அரசர், பிராமணர் தவிர தேவரடியாருக்குத்தான் இருந்திருக்கிறது.

பெரிய கோயிலின் அணுக்கன் திருவாயிலில் ராஜராஜன் தெய்வீகப் பணியாளர்களுக்கு இணையாக ஆடல் மகளிரும் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் சோழர்களின் வீழ்ச்சிக் காலத்தில் அல்லது பஞ்சம் நிலவிய சில சமயங்களில் இவர்களின் மதிப்பு குறைந்திருக்கிறது.

தேவரடியார்கள் பெரிய கோயிலில் ஆடல் மகளிர் என்று வகைப்படுத்தப்பட்டார்கள். இவர்கள் பரதத்திலும் இசையிலும் திருக்கோயில் தொண்டு புரிவதிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இவர்கள் மணம் புரியாமல் வாழ்க்கை நடத்தியதால் பிரம்மச்சாரிணி என்கிற பொருளில் மாணி என்றழைக்கப்பட்டார்கள்.

கணிகையர் எண்ணெண் கலையோர் என்றும் அழைக்கப்பட்டார்கள். அறுபத்து நான்கு காமக்கலைகளையும் அறிந்தோர் என்று இதற்கு அர்த்தம்.

நியமிக்கப்பட்ட கோயில்களுக்கேற்ப இவர்களின் பெயர்கள் மாற்றம் அடைந்தன. தேவரடியார்கள், வணிகக் குழுவினரின் நிர்வாகத்திலிருந்த கோயில்களில் ஐந்நூற்றுவ மாணிக்கம் என்றும் வேளாளர் சமூகத்தினர் நிர்வாகத்தில் இருந்த கோயில்களில் சித்திரமேழி மாணிக்கம் என்றும் விதவிதமாக அழைக்கப்பட்டார்கள்.

தேவாரம், திருவாசகம் ஓதுவது, நடனம் ஆடுவது ஆகிய பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். திருவிழாக்களின் போது நாடகங்களிலும் பங்கேற்றார்கள்.

இசையிலும் கூத்திலும் வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள். அதிக சம்பளம் பெற்ற தேவரடியார்கள் தங்கள் வருமானத் தில் பெரும்பகுதியைக் கோயில்களுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

சோழர் காலக்கட்டத்தின் தேவரடியார் சமூகம் பற்றி இன்று பலவிதங்களில் பேசப்படுகிறது. ராஜராஜசோழன் வடக்கே வேங்கை, கலிங்க நாடுகளில் இருந்து தேவரடியார்களைக் கொண்டு வந்து சோழநாட்டில் குடியேற்றினார்.

அன்று நகரங்களின் வளர்ச்சியால் கோயில்கள் அதிகமாகின. இதனால் தேவரடியார் அதிக எண்ணிக்கையில் தேவைப்பட்டார்கள். அதற்காகவே பொட்டுக். கட்டும் வழக்கம் ஏற்பட்டது.

(தொடரும்)



பாலசுப்பிரமணியம் மறைந்து விட்டார். அவரின் பாடல்கள் நிலைத்து வாழும்தானே?

**தரன் — வதிரி**

**கதை சொல்வதில் நீங்கள் வீரனாமே, எனக்காக அருமையான ஒரு கதை சொல்ல முடியுமா?**

ஒருவர் தனது படகிற்கு வர்ணம் பூச ஒருவரை அழைத்து வந்தார். எப்படி எப்படி வர்ணம் பூச வேண்டும் என கூறிவிட்டு அவர் சென்று விட்டார்.

வர்ணம் பூசுபவர் வர்ணம் பூசும் போது அந்த படகின் நடுவில் ஒரு ஓட்டை இருந்ததைக் கண்டு அதை அடைத்தார். வர்ணம் பூசி முடிந்ததும் படகு உரிமையாளரிடம் சென்று பணத்தை வாங்கி சென்று விட்டார்.

அடுத்த நாள் காலை அந்த படகின் உரிமையாளர் வர்ணம் பூசியவரின் வீட்டிற்கு வந்து மேலும் ஒரு தொகைப் பணத்தை கொடுத்தார். அவருக்கு எதுவும் புரியவில்லை. ஏன் என வினவ உங்களிடம் வர்ணம் பூச விட்ட நான் அதில் ஓட்டை இருப்பதை மறந்து விட்டேன். நீங்கள் சென்றதும் நான் படகை பார்வையிட வரும் போது படகு அங்கு இல்லை. எனது இரண்டு பிள்ளைகளும் மீன்பிடிக்க படகை எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

நான் பதைபதைத்து விட்டேன். அப்போது தூரத்தே அவர்கள் படகில் வருவது தெரிந்த பின்பே எனக்கு நிம்மதி வந்தது.

நீங்கள் மட்டும் அந்த ஓட்டையை அடைக்காது விட்டிருந்தால்... கண்கலங்கியபடி அவரின் கைகளை பிடித்து நன்றி தெரிவித்தார் படகு உரிமையாளர்.

**கேதீஸ் — கீரிமலை**

**பாலசுப்பிரமணியம் மறைந்து விட்டார். அவரின் பாடல்கள் நிலைத்து வாழும்தானே?**

நிச்சயமாக அவரின் பாடல்கள் இந்த உலகு இருக்கும் வரை நிலைத்திருக்கும்.

போகும் பாதை தூரமே வாழும் நாட்கள் கொஞ்சமே... இந்தத் தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன் என அருமையான தத்துவங்களை எமக்குத் தந்துவிட்டு சென்று விட்டார் தேனமுதக் குரலோன்

"மண்தான் கடைசியில் ஜெயிக்கிறது. இதை மனம்தான் உணர மறுக்கிறது" என்கின்ற பாடல் வரி நினைவில் வர கண்கள் கலங்கிப் போகிறது.

இசையால் எம்மை ஆசுவாசப்படுத்திய அந்த ஜீவன் சாந்தி பெற பிரார்த்திப்போம்.




விட்டுக் கொடுப்பு தமிழர்களிடம் இல்லாது போனது ஏன் என்று கூறமுடியுமா?

**நேதாஜி — வதிரி**

**திலீபனின் நினைவேந்தலை எதிர்க்கும் சில அரசியல் தலைவர்கள் பற்றி?**

அது அவர்களின் சொந்த விருப்பு வெறுப்பு. ஆயினும் திலீபனின் போராட்டம் ஜனநாயக ரீதியான அகிம்சைப் போராட்டம்.

அதை எவர் கொச்சைப்படுத்தினாலும் அவர்களுக்கு தமிழ் மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார் என்பது உண்மை.

எதிரியாக இருந்தாலும் அவரின் தியாகத்தை மதிக்க வேண்டும். அதுவே ஒரு வீரனுக்கு இருக்க வேண்டிய பிரதான இயல்பு அவ்வளவு தான்.

**வியாசர் பதில்கள்**

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**கௌசி — காரைநகர்**

**வாழ்க்கையில் சோகம் என்பது தொடருமா வியாசரே?**

சோகம் தான் வாழ்க்கை என்றால் இந்த உலகம் எப்போதோ கண்ணீரால் மூழ்கி அழிந்திருக்கும்.

சோகம் என்பது எமக்கு கடவுள் தரும் பரீட்சை. இந்த பரீட்சையை நாம் முயற்சியால் எழுதி முடித்துவிட்டால் வெற்றி கிட்டும்.

முயற்சியுங்கள் வெற்றி கிட்டும்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**திலீபனை நினைவுகூருவது தவறா வியாசரே?**

ஜனநாயக ரீதியாக அகிம்சை வழியில் போரிட்டவரை நினைவுகூருவது தவறான விடயம் அல்ல.

உயிரிழந்தவர்களை நினைவுகூரும் அடிப்படை உரிமை இங்கு மீறப்படுகிறது.

இவை எல்லாம் நடக்கும் என்பது தமிழ் மக்களுக்கு தெரிந்த விடயம் தானே. இதற்கு வியந்து பலனேதும் இல்லை.



திலீபனை நினைவுகூருவது தவறா வியாசரே?

**ஆகாஷ் — எழுமட்டுவாழ்**

**பல்கலைக்கழகம் பகிடி வதைக் கழகமாக மாறுகிறதே?**

ஒரு காலத்தில் எப்படி இருந்த எம் பல்கலைக்கழக மாணவர்களா இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்று நினைக்க நெஞ்சம் வெடிக்கிறது.

தமிழ் இனத்தின் விடுதலைக்கான தியாகங்கள் விதைக்கப்பட்ட அந்த மண்ணை மிதிக்கும் எம் மாணவர்களா இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்.

மாற்றப்பட வேண்டும், துடைத்தெறியப்பட வேண்டும் இல்லையேல் பாரிய விளைவுகள் ஏற்படும்.

**சுதன் — குப்பிழான்**

**விட்டுக் கொடுப்பு தமிழர்களிடம் இல்லாது போனது ஏன் என்று கூறமுடியுமா?**

தமிழரின் ஒற்றுமை ஒரு காலத்தில் மற்றைய இனங்களே பார்த்து வியப்புக் கொள்ளும் அளவில் இருந்தது.

என்றைக்கு அரசியல் எனும் சூனியம் தமிழினத்தில் தொற்றிக்கொண்டதோ அன்று அவனிடம் இருந்த ஒற்றுமை காணது போய் விட்டது.

இப்போது கூட ஒற்றுமை என்கின்ற பதம் அடிபட ஆரம்பித்து விட்டது.

இந்த ஒற்றுமை தொடர வேண்டும். அது தனிப்பட்ட விரும்பு, வெறுப்பு இல்லாது தமிழ் மக்களுக்காக செயற்படும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழரின் விருப்பமும்.

**தனா — யாழ்ப்பாணம்**

**நீதி, நேர்மை, நியாயம் இவற்றுக்கு இங்கு மதிப்புண்டா வியாசரே?**


அப்படி இருக்கிறது போல எமக்குத் தெரியவில்லை. எதிலும் போலி, எங்கும் சுயநலம் என்பதுதான் இன்றைய உலகம்.

தான் தான் என்று எல்லாம் தனக்குத் தனக்கு என சுயநலத்தின் வெளிப்பாடாய் மனிதன் வழிப்படுத்தப்பட்டு விட்டான்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதுதான் இப்போதைய மனிதம்.

இது இங்கு அங்கு என்று இல்லை. எம் அனைவரின் அருகிலும் இருக்கிறது. இது தான் நிலை. இது தான் சாபம்.

## விதையொன்று



பாறையிலே விதை தூவியதன்
பலனை எதிர்பார்க்கும்
மூடனே- நீ
பட்டதும் படித்ததும்
ஏறவில்லையோ மூளையிலே

நிலம் பொறுத்தே
தூவிடும் விதை
வீரியங்கொண்டு
முளைக்கும்

விதையின் தன்மையைப்
பொறுத்தே முளையிடும்
காலங்கள் தீர்மானிக்கப்படும்

முளைத்தனவெல்லாம்
மரமாவதில்லை
மரமானவையெல்லாம்
காய்ப்பதுமில்லை
காய்ப்பனவெல்லாம்
உண்பதற்கல்ல

விதையொன்று
நீ போட்டால்
துளிரங்கு வெளிவரும்
போட்ட விதையென்னவென்று
காலங்காட்டும் கணக்குனக்கு

**சுழிபுரத்தூர்**
**க.சிவகுமார்**

## தியாகத்தின் உச்சம்

ஆலம் விருட்சமாய் அண்ணனின் நினைவுகள்
ஊரெழு பதியிலே உற்பவித்த தியாகமே
உலகெல்லாம் உன்புகழ் அகிம்சையை சாற்ற
தமிழரின் உரிமைக்காய் வலம்வரும் ஆத்மாவே
உன்னொளி பெற்று பிரகாசிக்கும் தமிழினம்
அத்தனையும் உன்கதை எடுத்து இயம்பும்
தியாக தீபமே நினைவழியா உன் நினைவுகள்
வாடும் பயிருக்கு வான்மழை போல்
காலம் காலமாய் நினைவுகள் செப்பிய
காலனை வென்ற கரிகாலனின் புதல்வனே



உன்னத கொள்கையை உலகுக்குப் பரப்பி
குன்றில் தீபமாய் எங்கும் தமிழரின் மங்காப்புகழ்
தனிப்பெரும் தலைவனின் ஆணையை ஏற்று
தமிழரின் உரிமையை வென்றிடப் புறப்பட்டு
மக்களின் புரட்சி வெடிக்கட்டும் என்று
அகிம்சையைப் போதிக்க அமர்ந்தவன் திலீபன்
அற்புதங்கள் புரிந்திடும் நல்லூரான் வீதியிலே
தமிழரின் வரலாற்றை விதைத்துவிட்டான்
ஊனினை உருக்கி தமிழரின் உரிமையைப் பெற
வீறுகொண்டு எழுந்தான் வீரத்தமிழன்

**அராலியூர் ப.தர்மகுமாரன்**

## கொரோனா

சத்தமின்றி இரத்தமின்றி
யுத்தமொன்று நடக்குது
கணக்கில்லாத பல்லுயிரை
காவு வாங்கத் துடிக்குது
தும்மும்போதும் இருமும் போதும்
தேடிவந்து தொற்றுது- எதையும்
தொட்டுவிட்டால் ஆபத்தென்று
அபாயமணி ஒலிக்குது
சுற்றுமுலகில் நாளும் நாளும்
சுற்றிச்செல்லும் மனிதரெல்லாம்
உற்றம் அற்று சுற்றம் அற்று
பற்றறுத்து நிற்கையில்
பழங்குடியின் பழக்கமது
பற்றி வந்து போகுது
உண்டு உண்டு உறங்குவதே
வேலையென்று ஆகுது
உள்ளமென்றும் அச்சத்திலே
ஊரடங்கிப் போகுது
எட்டி எட்டி வாசல்படி வந்த எமனை
சுத்தம் எனும் கோட்டை போட்டு
சற்றே தள்ளித் தள்ளி வைக்கும்
வைத்தியர் உலகமதில்
காலமெல்லாம் காத்து நிற்கும்
கல்வியகம் கனவிலே
பட்டம் பெற்று பாரை காக்கும்
படலைகளும் பெரும் புட்டிலே
உணவு தரும் ஏழையரும்
தத்தளிப்பார் இடைநடுவிலே
அரண்டு திரண்டு அரோகரிக்கும்
பக்தர் கூட்டம்-இன்று
அடங்கிப் போனது வீட்டிலே
உள்ளம் மறவா காட்சி தந்தது
கொரோனா இந்த வழியில்
நானும் விளம்ப வார்த்தையின்றி
தவிக்குது இந்த உலகமே

**த.லக்ஸ்மன், நல்லூர்**

## அகிம்சையிடம் தோற்ற அகிம்சை தேசம்

அகிம்சையால் உயர்ந்து நின்ற
அகிம்சை தேசத்திடம்
ஐந்தம்சக் கோரிக்கையுடன்
அகிம்சை வழியில் போரிட்டான் ஒருவன்

காந்தி பிறந்த மண்
கருணை கொள்ளுமென
அடிமனதிலிருந்து நம்பிக்கை
ஆறு நாட்களில் அற்றுப்போனது

நீர் வேண்டி நா துடிக்க
தேகம் சுருண்டு தெம்பற்றுப்போக
கொண்ட கொள்கை மாறாது- தமிழன்
எனும் திமிரோடு கிடந்தான் அவன்

யார் யாரோ எவர் எவரோ
விட்டுவிடு விட்டுவிடு என
கோரிக்கைவிட
புன்னகையை உதிர்த்து
அகிம்சை தேசத்திடம் நிமிந்து நின்றான்

பதில் வரும் பதில் வரும் என
பத்துநாள் காத்திருக்க
வந்தது எம் கண்களில் நீரே
தவிர வேறேதும் இல்லை

பன்னிரெண்டாம் நாள்...
அகிம்சை தேசம்
அகிம்சையிடம் தோற்றுப் போனது
நீரின்றி மடிந்த நாற்றாய்
அவன் கிடந்தான்
விதைக்கப்பட்டது
அகிம்சைப் போருக்கான விதை

**மாவை. நா.கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல்- 496



## பரிதவிப்பு

வீதியெல்லாம்
வெடிவெடித்து
யுத்தம் வந்ததே
கையிழந்து காலிழந்து
வாழ்வும் போனதே
ஊனின்றி உறக்கமின்றி
நாளும் போனதே
நீயின்றி என் வாழ்வும்
விதவையாகிப் போனதே

**க.செல்வமலர்**
**இடைக்காடு**

## மௌனத்தின் தேடல் -497



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## புரியவைக்கக் காலம் வரும்

போர் வலியில் இருந்து இனும்
புலரவில்லை தமிழர் வாழ்வு
யார் உடலில் வலுவுமில்லை
குண்டின் பாகங்களாம்
சன்னங்கள்
சரீரமெலாம் உள்
உறுத்திடினும்
கேட்பதற்கு
யாருமில்லை எமை
கீழ்நிலைக்கு கெடுதல்
தரும் அரசு
பெண்மையினைப்
போற்றிடுமா
புரியவைக்கக் காலம் வரும்

**சாமிபுத்திரன்**
**கர்ணந்தோட்டம்**

## அடங்கமறு அத்துமீறு

அலைகடல் நடுவிலே
அடிமையாய் அலைகிறோம்
இந்த அகிலமே ஆண்ட நாம்
அகதிகள் ஆகினோம்
காலத்தின் ஜாலத்தால்
காட்டுவழி நடக்கிறோம்
கால்கிழித்த
முள்ளெடுத்து
போர் செய்ய துடிக்கிறோம்
விதி சதி செய்ததால்
வீழ்ந்தோம்
காலம் வரும் மதி
கொண்டு மீள்வோம்

**பாரதி**
**மானிப்பாய்**

## குற்றமும் சுற்றமும்

இயற்கையாய் நிகழும்
சீற்றங்களாயினும்
வகைதொகையின்றிப் பெருகி
திகைக்க வைக்கும்
குற்றங்களாயினும்
மற்றவர்களைவிட
பெரிதும் பாதிப்பது
பெண்களைத்தான்
இக்கட்டான தருணத்தில்
இன சனத்திற்காகவும்
மனநல மேம்பாட்டிற்கும்
இவர்கள் பெரிதும் நம்புவது
இறையருளைத்தான்

**க.நாகராசா**
**நுணாவில்**

## கலங்கியது போதும்

வண்ணத் திருமுகத்தில்
மாறாத வடுக்களுடன்
கண்ணில் கலக்கமுடன்
கதிகலங்கும் காரிகையே
என்ன கொடுமைகள்தான்
இப்புவியில் நடக்குதிங்கே
பெண்ணின் பெருமை
வெறும் பேச்சினில் மட்டுமா?
நிஜத்தில் பெண்ணடிமை
ஒழியவில்லை இவ்வுலகில்
பாரதி கண்ட புதுமைப்பெண்ணை
பாரினில் காண்பது எப்போது
கலங்கியது போதும்
கனன்று எழு பெண்ணே
கண்டிடலாம் விடிவு
ஒழியட்டும் பெண்ணடிமை

**சி.கஜா, முரசுமோட்டை**

## நாளை நமதே

நாளை நமதாகும் நாம்
நாளை மலரும் முல்லைகளாவோம்
பேதங்கள் நமக்கில்லை
தன்னம்பிக்கையை வளர்த்திடுவோம்
ஒற்றுமையால் சமூகத்தை ஒன்றாக்கி
நம் உரிமைகளை மீட்டிடுவோம்
வேற்றுமையை களைத்திடுவோம்
சாதியினை ஒழித்துவிட்டு
அன்பினில் தீப ஒளி ஏற்றிடுவோம்
ஊழலை வென்றிடுவோம்
நல் சமூகத்தை படைத்துக்கொண்டு
விவசாயத்தைப் போற்றிடுவோம்
வெட்டறுவாள்களை
தூக்கி எறிந்திடுவோம்
நாளை நமதென்று வாழ்ந்துகொண்டு
கல்வியினால் நமக்கென்று
சரித்திரம் படைத்திடுவோம்

**ரி.ஆகாஷ்**
**எழுதுமட்டுவாழ்**

# கொரோனா அச்சம் நீங்காத நிலையில் கட்டுப்பாடுகள் தளர்வது எதற்காக ?

**"எல்லை மீறும் இந்திய மீனவர்களால், கடல் எல்லைகளில் போதைப்பொருட்கள் கைமாற்றத்தினால், சட்டவிரோதமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் ஊடுருவுவதால் கொரோனாத் தொற்றும் அபாயம் வடக்குக்கு உண்டு."**



எப்போதும் ஒரு விடயம் நடந்தபின் கூப்பாடு போடுவதில் பயனேதும் இல்லை. இதையே எம் முன்னோர்கள் வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும் எனக் கூறியிருக்கிறார்கள்.

அதாவது மழை காலம் வருகிறது. மழை பெய்தால் வெள்ளம் ஏற்படும். வெள்ளம் வந்தபின்பு அணை கட்டுவதிலும் அது வருமுன் அணை கட்டுவதே சிறப்பானது.

வருமுன் காப்போம் என்பதற்கு இதை விட சிறந்த உதாரணத்தைச் சொல்லிவிட முடியாது.

சரி இப்போதுஇந்த விடயத்தை ஏன் கூறுகிறீர் அபிமன்யு என நீங்கள் மனதுக்குள் முணுமுணுப்பது எனக்குப்புரிகிறது.

கொரோனா (கொவிட் - 19) வைரஸ் சீனாவில் தோற்றம் பெற்றாலும் இன்று உலக நாடுகளைப்புரட்டிப் போட்டுக்கொண்டிருக்கிறது.

அதன் தாக்கத்தில் இருந்து அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகளே இன்னும் மீள்வதாய்த் தெரியவில்லை.

தடுப்பூசி தயாரித்தாலே தவிர கொரோனாவை வெல்ல வேறு எதுவும் செய்துவிட முடியாது என உலக சுகாதார நிறுவனம் அறிவித்து விட்டது.

அதற்கிடையில் உலகம் முழுவதுமான கொரோனாவின் இறப்பு பத்து இலட்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நினைக்கும் போது வாயில் இருக்கும் எச்சில் தொண்டையில் இறங்க மறுக்கிறது.

உலக வல்லரசு நாடுகளையே புரட்டி எடுத்துக் கொண்டிருக்கும் இந்த வைரஸின் விளைவு எம்மவர்க்குத் தெரியாது என்றுதான் கூறவேண்டும்.

இலங்கையில் இதுவரை 3287 பேருக்கு மாத்திரமே கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 13 பேர் இறந்திருக்கிறார்கள்.

உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் கொரோனாவின் தாக்க விகிதம் மிகமிகக் குறைவாகும்.

கொரோனாவைக் கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கையும் அடங்கும். அதற்கு அண்மையில் உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கையைப் பாராட்டியும் இருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, மேற்கத்தேய நாடுகளைப் அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தொற்று இப்போது இந்தியாவில் அதிகரித்துள்ளது. மெல்ல மெல்ல ஆரம்பித்த வைரஸ் தாக்கம் இப்போது மிக மோசமான நிலையில் இருக்கிறது.

மேற்கத்தேய நாடுகளில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்தபோது நாம் பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் இருந்ததற்கு காரணங்கள் இருக்கின்றன.

ஆனாலும் தற்போது இந்தியாவில் பாரிய பிரளயத்தையே கொரோனா ஏற்படுத்துகிறது என்பதற்குப் பிறகும் நாம் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என இருந்துவிட முடியாது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசு பல கட்டுப்பாடுகளை விதித்தது. இதில் மிக முக்கிய காரணிகளாக முகக் கவசம் அணிதல், வெளியே எங்கே போய் வந்தாலும் கைகளைச் சுத்தம் செய்தல், சமூக இடைவெளி பேணுதல், கூட்டம் கூடுவதைத் தவிர்த்தல் போன்ற கட்டுப்பாடுகளை விதித்து அவற்றைச் சட்டமாக்கி அதை மீறுவோர் மீது கடும் நடவடிக்கைகளையும் எடுத்து வந்தது.

தற்போது வடக்கில் அக்கட்டுப்பாடுகள் இருக்கிறதா? என்கின்ற கேள்வி எழுந்துள்ளது.

யாரும் முகக்கவசம் அணிவதில்லை, சமூக இடைவெளி பேணும் பேச்சுக்கே இடமில்லை, கை கழுவ வைக்கப்பட்ட சாதனங்கள் புழுதி படிந்து காணப்பட சமூக இடைவெளியா? அப்படி என்றால் என்ன என்கின்ற தோரணையில் எல்லோரும் நடந்து கொள்கிறார்கள்.

இலங்கையில் சமூகத் தொற்று இல்லை என்கின்ற ஒரே காரணத்திற்காக இவ்வாறான நடைமுறைகளை மீறி நடப்பது எவ்வளவு தூரம் சரியானது என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

புவியியல் ரீதியாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் (வடக்கு) மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

கொரோனா வைரஸ் இந்தியாவில் இருந்து வடக்கிற்குப் பரவும் அபாயம் இருக்கிறது என மருத்துவத்துறை தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டே இருக்கிறது.

இந்திய மீனவர்களின் எல்லை கடந்த மீன்பிடிச் செயற்பாடுகள், கடலில் நடைபெறும் சட்டவிரோத பொருட்கள் பரிமாற்றம், கேரள கஞ்சாக் கடத்தல் மற்றும் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் (வடக்கு) நுழைதல் போன்ற செயற்பாடுகளால் கொரோனா தொற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுகின்றன.

அதிலும் மிக முக்கியமான சிவப்பு வலயத்தில் வடக்கு இருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அப்பேற்பட்ட வடக்கில் கொரோனாத் தொற்று தொடர்பான நடைமுறை இறுக்கங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இது ஏன் என்றுதான் புரியவில்லை.

அண்மையில் தெற்கில் இருந்து வந்த ஒரு பெரும்பான்மை சகோதரரைச் சந்தித்த போது அவர் கூறினார்,

இங்கு யாரும் கொரோனாவுக்கு பயப்பிடவில்லையா ஏன்? அங்கு (தெற்கில்) முகக்கவசம் இல்லாது வெளியே வரமுடியாது. அப்படி வந்தால் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 5000 ரூபா தண்டப்பணம் அறவிடப்படுவதுடன் கட்டாய தனிமைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் சமூக இடைவெளி கட்டாயமானதாகவும் கைகளைச் சுத்தம் செய்யாமல் எந்த நிறுவனத்தினுள்ளும் புக முடியாது எனக் கூறினார். இதைக் கேட்கும் போது நெஞ்சு பக்குபக்கென அடித்துக் கொண்டது.

இறைவா இலங்கையில் கொரோனா வைரஸ் சமூகத் தொற்று இல்லை. இந்தியாவை கொரோனா வைரஸ் ஆட்டிப்படைக்கிறது. இந்தியா விலிருந்து வடக்கிற்கு கொவிட் - 19 பரவும் அபாயம் அதிகம் உண்டு.

ஆனாலும் அதிகம் பரவக்கூடிய அபாய வலயமாக எச்சரிக்கப்பட்ட வடக்கில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது போலத் தெரிகிறது.

ஒருவேளை வடக்கில் சமூகத் தொற்று ஏற்படுமாக இருந்தால் நிலைமையைக் கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்.

நினைக்கவே நெஞ்சம் படபட வென அடித்துக்கொள்கிறது. இந்தப் பயத்திற்கு ஒரே தீர்வு நாம் முன்பு சொன்னதுதான்.

வெள்ளம் வருமுன் அணைகட்டுவதுதான் அது.

எமக்குத்தான் வைரஸ் தொற்று இல்லையே என்ற நினைப்பில் நாம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்போமாக இருந்தால் விளைவுகள் பாரதூரமாக அமைந்துவிடும்.

தெற்கில் காட்டப்படும் இறுக்கம் வடக்கில் இல்லை என்பது எதற்காக என்பதை நாம் மறப்போம். நாம் நமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம். இதுவே எம் சமூகத்திற்கு ஆரோக்கியமான விடயமாகும்.


மக்கள் முகக்கவசம் அணிவதை, சமூக இடைவெளியை பின்பற்றாமல் இருப்பதை கவனிக்காமல் இருப்பவர்கள் வடக்கில் ஏதும் ஆர்ப்பாட்டம், அறவளிப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தால் கொவிட் - 19 தொற்று அபாயம் இருப்பதாய் அதை தடை செய்ய முனைகிறார்கள்.

அபிமன்யு

## இந்தியா - சீனா

# எப்போது முடியும் எல்லைப்பிரச்சினை?

இரண்டு அண்டை நாட்டு வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசினார்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டார்கள். ஒரு சாதாரண நிகழ்வாக இது கடந்து போயிருக்க வேண்டும். ஆனால் உலகம் முழுக்கக் கவனித்தது. சந்திப்பு மாஸ்கோவில் நடந்தது. நாள் செப்டம்பர் 10. ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு என்பது, சீனாவும் ரஷ்யாவும் மத்திய ஆசிய நாடுகளும் ஆண்டுதோறும் சந்தித்துக்கொள்வதற்காக நடத்தப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தியாவும் ஷாங்காய் கூட்டமைப்பில் உறுப்பினர் ஆகியிருக்கிறது. இந்த ஆண்டு மாநாடு கவனிக்கப்பட்டதற்குக் காரணம் அதன் வழமையான நிகழ்ச்சி நிரல் அல்ல. மாநாட்டு வளாகத்தில் இந்திய-சீன வெளியுறவு அமைச்சர்களான ஜெய்சங்கரும் வாங் யீ-உம் சந்தித்துக்கொண்டது தான்.



> “கடந்த 45 ஆண்டுகளில் இந்திய, சீன எல்லைப் பகுதிகள் குருதியால் நனைந்ததில்லை. இங்கே தோட்டாச் சத்தமும் கேட்டதில்லை. ஆனால் இந்த மோதலின் போதோ 20 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். சீனா தன் தரப்பில் ஏற்பட்ட இழப்புகளைச் சொல்ல மறுத்துவருகிறது.”

கடந்த நான்கரை மாதங்களாக் எல்லையில் பதற்றம் நிலவுகிறது. இராணுவ, ராஜதந்திர, அரசியல் மட்டங்களில் உரையாடல்கள் நடந்த வண்ணம் உள்ளன என்றாலும், வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் நிகழும் முதல் சந்திப்பு இதுதான். சந்திப்பின் முடிவில் அமைச்சர்கள் ஒரு கூட்டறிக்கையும் வெளியிட்டனர். கருத்து வேற்றுமைகள் சர்ச்சைகளாகிவிடக் கூடாது. எல்லையில் பதற்றம் நிலவுவது இரண்டு நாடுகளுக்கும் உகந்தது அல்ல. முந்தைய ஒப்பந்தங்கள் மதிக்கப்பட வேண்டும். பேச்சு வார்த்தைகள் தொடர வேண்டும். துருப்புகள் ஒருவரை ஒருவர் சுட்டுவிடும் தூரத்தில் நிற்கக்கூடாது என்று நீள்கிறது அறிக்கை. இதில் எழுதப்பட்ட வரிகளுக்கு இடையில் எழுதப்படாத சில வரிகளும் ஊர்வது அரசியல் நோக்கர்களுக்குப் புலப்பட்டது. பதற்றம் மே மாதம் தொடங்கியது. அதற்கு முன்பு நடப்பிலிருந்த எல்லையைச் சீனத்துருப்புகள் தாண்டக்கூடாது என்று இந்தியா வலியுறுத்தி வந்தது. இந்தக் கூட்டறிக்கையில் அது குறித்த வாசகங்கள் எதுவும் இல்லை. அதாவது சீனா அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்று யூகிக்க இடமிருக்கிறது.

இந்த எல்லைப் பிரச்னையின் கதையைச் சுருக்கமாகப் பார்க்கலாம். இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் வரைபடங்களில் சீன ஆக்கிரமிப்புக் காஷ்மீர் என்று சுட்டப்பட்டிருக்கும் பகுதி அக்சை-சின் என்றழைக்கப்படுகிறது. இந்தியா அதை லடாக்கின் பகுதியாகப் பார்க்கிறது. சீனாவோ சின்ஜியாங் மாநிலத்தின் பகுதியாகப் பார்க்கிறது. உய்குர் முஸ்லிம்கள் உள்ளிட்ட பல் சிறுபான்மையினர் வசிக்கும் மாநிலம் சின்ஜியாங். அக்சை-சின் ஒருபுறம் சின்ஜியாங்கை ஒட்டியும் மறுபுறம் திபெத்தை ஒட்டியும் இருப்பதால் சீனாவிற்கு இது பூகோள ரீதியாக முக்கியமானது. சர்ச்சைக்குரிய இன்னொரு முக்கியப் பகுதி வடகிழக்கில் உள்ள தவாங். அருணாசலப் பிரதேசத்தின் ஒரு பகுதி. இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. சீனா உரிமை கோருகிறது.

1954இல் இந்தியாவும் சீனாவும் பஞ்சசீலக் கொள்கையில் ஒப்பமிட்டன. அதே ஆண்டில் அக்சை-சின்னையும் அருணாசலப் பிரதேசத்தையும் உள்ளடக்கிய வரைபடத்தை இந்தியா வெளியிட்டது. சீனா இதை ஏற்க மறுத்தது. தொடர்ந்து எல்லைப்பகுதிகளில் உரசல்கள் தொடங்கின. 1959-ல் சீனப் பிரதமர் சூ-யென்-லாய் டில்லிக்கு வருகை தந்தார். நேருவும் சூவும் ஏராளமான ஆவணங் களையும் வரைபடங்களையும் முன் வைத்துக் கொண்டு மணிக்கணக்காகப் பேசினார்கள். நீண்ட வாதங்களின் முடிவில் சூ ஒரு சமரசத்தை முன்மொழிந்தார்.

மேற்கேயுள்ள அக்சை-சின் சீனாவிற்கு முக்கியமானது, அதை இந்தியா விட்டுக்கொடுக்க வேண்டும் பதிலுக்கு கிழக்கேயுள்ள தவாங் உள்ளிட்ட அருணாசலப் பிரதேசத்தை சீனா விட்டுக் கொடுக்கும். இதன் உட்பொருள் என்னவென்றால், மேற்கே இந்தியாவின் கோரிக்கை பலமானது. ஆனால், இந்தியா விட்டுக்கொடுக்க வேண்டும். கிழக்கே சீனாவின் கோரிக்கை வலுவானது. என்றாலும் சீனா விட்டுக்கொடுக்கும்.

நேரு இந்தச் சமரசத்திற்கு ஒப்புக் கொள்ளவில்லை. கருத்து வேறுபாடுகள் சர்சைகளாக வளர்ந்தன. 1962இல் போராக வெடித்தது. சீனா, அக்சை-சின்னைக் கடந்து லடாக்கிலும், மக் மோகன் கோட்டைக் கடந்து அருணாசலப் பிரதேசத்திலும் நுழைந்தது. முடிவில் அருணாசலப் பிரதேசத்திலிருந்தும் லடாக்கிலிருந்தும் பின்வாங்கிக்கொண்டது. அக்சை-சின் சீனாவின் வசமானது. அருணாசலப் பிரதேசம் இந்தியாவிடம் தங்கியது.

போருக்குக் கால் நூற்றாண்டுக்குப் பிறகு 1988-ல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சீனத் தலைவர் டெங்சியோ பிங்கைச் சந்தித்தார். எல்லைப் பிரச்சினைகளை அப்போதைக்கு ஒதுக்கி வைப்பது என்று முடிவானது. வணிகம் தழைத்தது. 1993இல் நரசிம்ம ராவ் - சீனப் பிரதமர் லீ பெங் இடையில் உருவான எல்லைச் சமாதான உடன்படிக்கையும் முக்கியமானது. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே ப்ரஸ்பரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கோடு என்பது இல்லை. 1959 முதலே சீனா நடப்புக் கட்டுப்பாட்டுக் கோடு **(line of actual control-LAC)** என்றொரு சொற்றொடரைப் பயன்படுத்தி வந்தது. யார் யாரிடம் எந்தெந்தப் பகுதிகள் உள்ளனவோ அவை அவரவரின் கட்டுப்பாட்டில் நீடிக்கும். அப்படியான பகுதிகளின் எல்லையைப் பிரிக்கும் கோடு தான் நடப்புக் கட்டுப்பாட்டுக் கோடு. 1993 உடன்படிக்கையானது நடப்புக் கட்டுப்பாட்டுக் கோடே மறு தீர்மானம் வரும்வரை எல்லைக் கோடாக நீடிக்கும் என்று ஏற்றுக்கொண்டது. இந்தப் பகுதிகளில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்றும் இரு பிரதமர்களும் ஒப்புக் கொண்டனர்.

ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லைப் பகுதிகளிலும் அவ்வப்போது உரசல்கள் நிகழவே செய்தன. பிரதமராக மோடி பதவியேற்ற பிறகு, மூன்றுமுறை உரசல்கள் நடந்து, எல்லைப்பகுதிகளில் பதற்றம் அதிகரித்தது. 2014இல் கிழக்கு லடாக்கில் சுமார் **(Chumar)** என்கிற இடத்தில் சீன ராணுவம் சாலை அமைக்க முயன்றபோது இந்திய ராணுவம் தடுத்தது. படைகள் நேருக்கு நேர் நின்றன. 16 நாள்கள் நீடித்த இறுக்கம் ராஜியம், இராணுவ மட்டத்திலான பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு தணிந்தது. 2015இல் லடாக்கின் வடபகுதியில் புர்ட்சே என்கிற இடத்தில் சீன ராணுவம் அமைத்த குடில் ஒன்றை எல்லைப்புறக் காவல் படை அகற்றியதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் துருப்புகள் குவிக்கப்பட்டன. எனினும் களத்தில் உள்ள ராணுவ மட்டத்திலேயே நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பலன் இருந்தது. ஒரு வார முடிவில் படைகள் பின்வாங்கிக் கொண்டன.

இந்த இரண்டு சம்பவங்களோடும் ஒப்பிடுகையில், 2017இல் நிகழ்ந்த தோக்லாம் உரசல் தீவிரமானது. 73 நாள்கள் நீடித்தது. தோக்லாம் 100 சதுர கி.மீ பரப்பளவுள்ளது. பள்ளத்தாக்குகளும் சமதளங்களும் நிரம்பியது. இந்திய- சீன- பூடான் முத்தரப்பு எல்லையில் பூடான் பகுதியில் உள்ளது. இங்கே சீனா சாலை அமைக்க முயன்றது. இந்தியா தடுத்தது. இரு தரப்பு வீரர்களும் கண்ணோடு கண் நோக்கும் தூரத்தில் நின்றுகொண்டனர்.

அந்தச் சூழலில்தான் பிரதமர் மோடியும் சீன ஜனாதிபதி ஷி ஜிங் பிங்கும் வுகான் நகரில் சந்தித்தனர். வுகான் சந்திப்பின் நட்புணர்வு 2019-ல் நடந்த மாமல்லபுரம் சந்திப்பிலும் தொடர்ந்தது. எனவே இனி மோதல் போக்கு இருக்காது என்று நம்பப்பட்டது. ஆனால் அது பொய்த்துவிட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் கால்வான் பள்ளத்தாக்கில் இந்தியா தனது பகுதியில் சாலைகள் அமைக்க முற்பட்டது தான் இப்போதைய பதற்றத்தின் தொடக்கப்புள்ளி. இப்போதையச் சூழல் முந்தைய உரசல் சம்பவங்களிலிருந்து பெரிதும் மாறுப்பட்டது. கடந்த 45 ஆண்டுகளில் இந்திய சீன எல்லைப் பகுதிகள் குருதியால் நனைந்ததில்லை. இங்கே தோட்டாச் சத்தமும் கேட்டதில்லை. ஆனால் இந்த மோதலின் போதோ 20 இந்திய வீரர்கள் உயிரிழுந்தனர். சீனா தன் தரப்பில் ஏற்பட்ட இழப்புகளைச் சொல்ல மறுத்து வருகிறது.

நான்கரை மாதங்களாக நிலவும் பதற்றச் சூழலில், இரண்டு அமைச்சர்களும் கூட்டாக அறிக்கை வெளியிட்டது நிச்சயமாக ஒரு ஒளிக் கீற்றுதான். ஆனாலும் பிரச்னை முழுமையாக முடிவுக்கு வந்ததாகச் சொல்ல முடியாது. இந்தச் சூழலில் இந்தியா என்ன செய்யலாம்?

முதலாவதாக, அரசு எல்லையில் உள்ள நிலவரத்தை மக்களுக்கு வெளிப்படையாகத் தெளிவுபடுத்தலாம். இரண்டாவதாக, இது நிச்சயமாக யுத்தத்திற்கான நேரமில்லை. ராஜிய வழிகளில் தீர்வுகளை மேற்கொள்வதே நல்லது. அதே வேளையில் அச்சுறுத்தல்களுக்கு இந்தியா பணியாது என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

மூன்றாவதாக, இந்தியா மட்டுமல்ல, உலக நாடுகள் பலவும் சீனாவின் உற்பத்தியையும் அதன் விநியோகச் சங்கிலியையும் அதிகமாகச் சார்ந்திருக்கின்றன. இதை ஒருநாளில் நேர் செய்துவிட முடியாதுதான். ஆனால் சீனச்சார்பு இல்லாமல் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு நீண்டகாலத் திட்டங்களை வகுக்க வேண்டும். இவற்றைச் சாத்தியமாக்குவதன் மூலம் இந்தியா சீனப்பிரச்சினையைக் கையாளலாம்.

ஜூனியர் விகடன்

# கடல் புறா

## இளையபல்லவன் 02



இப்படிக் காவலரின் கெடுபிடியால் நடந்து கொண்டிருந்த சுங்கச் சோதனையையும், சுங்கச் சாவடிகளின் பக்கம் போய்க்கொண்டிருந்த சுமை தாங்கிய ஊழியரையும், பெரும் சாட்டைகளைப் பக்கங்களில் சொடேர் சொடேரெனச் சொடுக்கி நீக்ரோவரை விரட்டிக் கொண்டிருந்த அரேபியர்களையும், அமைதியாக ஒரே ஒழுங்குடன் ஏதோ படைக்கு அணி வகுப்பவர்போல் சென்று கொண்டிருந்த யவன வணிகரின் கூட்டத்தையும் கவனித்துக் கொண்டே கரைக்கு வந்த படகிலிருந்து தானும் இறங்கத் தன் குதிரையையும் இறக்கிய ஒரு வாலிபன், சற்று நேரம் அலைப் பகுதியிலேயே புரவியுடன் நின்று கடல் பிராந்தியத்தையும் எதிரேயிருந்த பாலூர் நகரத்தின் பெரும் கோட்டையையும் நீண்ட நேரம் தன் கண்களால் துழாவினான். அந்த வாலிபன் அந்த பெருந்துறைக் கரையில் கால் வைத்ததுமே கலிங்கத்துப் போரின் வித்து விதைக்கப் பட்டுவிட்டது என்பதற்குச் சாட்சி சொல்ல இஷ்டப்பட்டனபோல் கடலின் அலைகள் முன்னை விடப் பெரிதாக இரைச்சல் போட்டன. கதிரவன் மறைந்து விட்டதால் நகருக்குள் ஏற்றப்பட்ட பெரும் விளக்குகளும் தீக்கண்களை விழித்து வந்திருப்பவன் யாரெனப் பார்க்கவும் தொடங்கின. அந்த விளக்குகளின் தீ விழிகளில் நாமும் பங்கு கொள்வது பிசகென நினைத்த சந்திரனும் தனது தங்க நிறத்தை மாற்றிக்கொண்டு வெண்ணிறம் பெற்றான்.

கரையில் திடமாகக் காலூன்றி நின்ற அந்த வாலிபனுக்கு வயது இருபத்தொன்றுக்கு மேலிருக்கக் காரணமில்லை. ஆயினும் அவன் கண்களில் விரிந்த ஆராய்ச்சி அவன் முதிர்ந்த அனுபவத்தைத் தெரியப்படுத்தியது. அவன் கன்னத்தில் சற்றே கீறியதுபோல் இருந்த ஒரு வடு அவன் வதனத்தின் அழகைக் குறைப்பதற்குப் பதில் அதற்கு ஒரு வீரக் களையையும் இணையற்ற கம்பீரத்தையுமே அளித்தது. "காக பக்ஷகம்" என்று புராணங்களில் சொல்லப்படுவது போல் காக்கையின் இறகுகளைப்போல் தலையில் விரிந்து கன்னங்களையும் தடவிடத் தொடங்கிய சுருண்ட அவன் குழல்கள் மட்டுமன்றி அகன்ற நெற்றியும், அதிக வளைவு என்று சொல்ல முடியாதபடி சிறிதே வளைந்து திடீரென பக்கங்களில் கத்திகளைப்போல கூர்மையுடன் இறங்கிப் புருவங்களும், நன்றாகச் சிவந்து சற்றுத் தடித்தே இருந்த வாயிதழ்களும் அந்த இளைஞன் வீரத்துக்கும் உறுதிக்கும் பெரும் சான்றுகளாயிருந்தன.

அங்கியில் மறைந்த இடம் போக மீதி இடங்களில் வெட்டுக் காயங்களுடன் காட்சியளித்த அவன் நீளமான கரங்களும் தழும்பேறியிருந்த விரல்களும் இளைய பருவத்திலேயே அவன் பெரும் போர்களைக் கண்டவன் என்பதை வலியுறுத்தின. சற்றுக் குறுகிக் காணப்பட்ட அவன் இடையை அடுத்துக் கச்சையிலிருந்து பக்கப் பகுதியில் தொங்கிய வாள் அதிக நீளமில்லையென்றும் உறையின் பரிணாமத்திலிருந்து அதன் அகலம் மிகுதியென ஊகிக்க முடிந்தது. அவன் கச்சையில் வயிற்றுக்கு எதிரில் செருகப்பட்ட சிறுவாளின் பிடியிலிருந்த விலை உயர்ந்த கற்கள் இளைஞன் அப்படியொன்றும் ஏழையில்லையென்பதை விளக்கின. அவன் அங்கியின் முகப்புகளிலிருந்த தங்கச்சரிகை வேலைப்பாடும் இளைஞன் நல்ல பசையுள்ள குடும்பத்தில் பிறந்தவன் என்பதை நிரூபித்தன. உறுதியுடன் மணலில் புதைந்து நின்ற அவன் கால்களின் பெருவிரலொன்று மணலில் பதிந்து பதிந்து குழி செய்து கொண்டிருந்தது. அதைக்கண்ட கடல் நண்டுகள், கலிங்கத்துக்கு இப்பொழுதே இந்த இளைஞன் குழி தோண்டுகிறானோ என்று பயந்தனபோல் தங்கள் மணல் வளைகளை நோக்கி ஓடி மறைந்தன.

குதிரையின் கழுத்தில், ஒரு கையைப் போட்டுக் கொண்டு நின்ற வண்ணம் கடற்கரைப் பிராந்தியத்தைக் கண்களால் அளவெடுத்த அந்த வாலிபன் கடலின் லாவண்ணியத்தையும், கோதாவரியின் கம்பீரத் தோற்றத்தையும், வெண்மதி அள்ளிச் சொரிந்த வனப்பையும், பல நாட்டுக் கலங்களில் வந்து சுங்கச்சாவடிக்குச் சென்று கொண்டிருந்த வணிகப் பொருள்களையும் பார்த்துப் பார்த்துப் பிரமை பிடித்து நின்றான். "இத்தனை வாணிபமும் இயற்கை வனப்பும் பொருந்திய இந்தத் துறைமுகத்தை, இந்த மாணிக்கத்தை, இழக்க எதற்காகத் தென்கலிங்கத்து மன்னன் பீமனும், வடகலிங்கத்து மன்னன் அனந்தவர்மனும் முயல்கிறார்கள்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட அந்த இளைஞன் நீண்ட பெருமூச்சொன்றை விட்டுவிட்டு, தன் புரவியை இழுத்துக்கொண்டு மெல்ல மெல்லச் சுங்கச் சாவடிகளை நோக்கி நடக்கலானான்.

அவன் திடமாகவும், சந்தேகமின்றி யாரையும் தகவல் கேட்காமலும் நடந்ததிலிருந்து அவன் பாலூர்ப் பெருந்துறைக்குப் புதியவனல்லவென்பதை ஊகித்துக் கொண்டார்களாதலாலும், அவன் இடையில் தொங்கிய வாளும் ஓரளவு பயங்கரமாயிருந்ததாலும் முகத்திலிருந்த களையும் சற்று எச்சரிக்கை செய்ததாலும், சுங்கக் காவலர்கூட அவனை எந்தக் கேள்வியும் கேட்காமலும் தடை செய்யாமலும் விலகி வழிவிட்டார்கள். பலநாட்டவரின் கூட்டத்தோடு கூட்டமாகவும் சில சமயம் சீனரோடும், சில சமயம் யவனரோடும், சில சமயம் அரேபியரோடும் தோளுடன் தோள் உராய்ந்து சென்ற அந்த வாலிபன் சுங்கச் சாவடிக்கு வெளியிலேயே குதிரையை நிறுத்திவிட்டுத் தான் மட்டும் சாவடிக்குள் நுழைந்தான்.

பெரும் மண்டபமாகச் சுமார் நூறு துண்டுகளுடன் பல பகுதிகளாகப் பிரித்துப் பிரித்துத் தடைகள் வைத்துக் கட்டப்பட்டிருந்த அந்தச் சுங்கச்சாவடியில் சுங்கம் வாங்கும் அதிகாரிகள் ஆங்காங்கு நின்று பிரயாணிகளின் சரக்குகளுக்கு மதிப்பீடு செய்தும், சுங்கப் பணம் வாங்கியும், சுங்கம் உத்திரை பதிப்பித்தும் ஊழியம் புரிந்ததால் ஏற்பட்ட ஒலியும், சுங்க மதிப்பீட்டை எதிர்த்து வணிகர்கள் போட்ட கூச்சலும் காதைத் துளைத்துக் கொண்டிருந்தன. அத்துடன் வசூலிக்கப்பட்ட தங்கப் பணங்கள் பாறைகளின் மீது தட்டப்பட்டதாலும், சரக்குடைய வெண்கல இரும்புக் குடங்கள் திடீரென இறக்கப்பட்டதாலும் ஏற்பட்ட உலோக ஒலிகள் மனிதர்களின் பேச்சொலிக்கு ஆதார சுருதி கூட்டின. படகில் வந்த இளைஞன் உள்ளே நுழைந்ததும் அந்தச் சுங்கக் கூட்டத்தையும் அங்கு வசூலிக்கப்பட்ட பெரும் சுங்கத் தொகையையும் பார்த்துக் கொண்டே வணிகரல்லாத பிரயாணிகள் சோதிக்கப்படும் இடத்துக்குச் சென்று தன் இடையிலிருந்த பட்டுப் பையை எடுத்துச் சுங்க அதிகாரிகளிடம் அளித்து விட்டு விரலில் இருந்த ஒரு முத்திரை மோதிரத்தையும் காட்டினான். அந்த மோதிரத்தைக் கண்ட மாத்திரத்தில் மின்னலால் தாக்குண்டவன் போல் பேரதிர்ச்சியும் குழப்பமும் திகிலும் அடைந்த சுங்க அதிகாரி சிலவிநாடிகள் ஸ்தம்பித்து நின்றான். பிறகு அந்த இளைஞன் கொடுத்த பையைச் சோதிக்காமல் திருப்பி அவனிடம் கொடுத்து விட்டு "சற்று இப்படி வாருங்கள்" என்று கையால் சைகை காட்டிக் கொண்டே தன்னிடத்தில் வேறோருவனை இருக்கச் செய்து சாவடியின் கோடியிலிருந்த அறையை நோக்கி நடந்தான். வந்த இளைஞனும் மீண்டும் இடையில் பையைச் செருகிக் கொண்டு, பதிலேதும் பேசாமலும், முகத்தில் எத்தகைய வியப்பும் காட்டாமலும் சுங்க அதிகாரியைத் தொடர்ந்தான்.

அக்கம் பக்கத்தில் எச்சரிக்கையுடன் பார்த்துக் கொண்டே கோடியிலிருந்த தனியிடமொன்றை அடைந்த சுங்க அதிகாரி, இளைஞன் அருகில் வந்ததும், "நீங்கள் அணிந்துள்ள மோதிரத்தின் மதிப்புத் தெரியுமா உங்களுக்கு?" என்று பயத்துடன் வினவினான். அவன் சொற்களின் உண்மைக் கருத்தைப் புரிந்து கொண்டாலும், புரியாதது போல் நடித்த இளைஞன், "தெரியும். ஆயிரம் பொற்கழஞ்சுகள். அதற்குச் சுங்கம் உண்டானால் விதியுங்கள்" என்று கூறி சுங்க அதிகாரியைக் கூர்ந்து நோக்கினான்.

சுங்க அதிகாரியின் விழிகளில் கோபமே அதிகரித்தது. "விலையைச் சொல்லவில்லை. வேறு மதிப்பைச் சொன்னேன்" என்றான் சுங்க அதிகாரி கோபம் குரலில் உஷ்ணத்துடன் ஒலிக்க.

"வேறு எந்த மதிப்பைக் குறிப்பிடுகின்றீர்கள்?" என்று மீண்டும் வினவினான் இளைஞன். "இதைச் சிலர்தான் அணிய முடியும்" என்று சுட்டிக் காட்டினான் சுங்க அதிகாரி.

"ஆம்." "இது பல்லவராஜ சின்னம்." "அதனாலென்ன?" "இதைப் பல்லவராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அணியலாம்". "அதையும் நானறிவேன்" இதைக் கேட்டதும் சுங்க அதிகாரியின் முகத்தில் ஈயாடவில்லை. "அப்படியானால் தாங்க...?" என்று திணறினான்.

"கருணாகர பல்லவன்" ஏதோ ஒரு சாதாரண விடயத்தை அறிவிப்பவன் போல் தன் பெயரை அறிவித்தான் அந்த இளைஞன்.

சுங்க அதிகாரிக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த தைரியமும் போய்விட்டது. அவன் இதயத்தில் விபரிக்க இயலாத பல உணர்ச்சிகள் மோதின. "இளைய பல்லவரா?" என்று மிதமிஞ்சிய வியப்பும் திகைப்பும் கலந்த குரலில் வினவினான் சுங்க அதிகாரி.

"ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையைஆட்டிய கருணாகரபல்லவன், "இனி நான் போகலாமல்லவா?" என்று வினவிக்கொண்டே மெல்ல திரும்பினான். "நில்லுங்கள்" என்று அதிகாரியின் குரலைக் கேட்டுத் திரும்பிய இளைய பல்லவனை அருகில் இழுத்த அதிகாரி, "நீங்கள் போக வேண்டிய இடம் எது?" என்று பயத்துடன் வினவினான்.

"கோடியக்கரை கூழவாணிகன் மாளிகை" "அது நகரத்துக்குள் அல்லவா இருக்கிறது?" "ஆம்" "அப்படியானால் இப்போது போக வேண்டாம். அடுத்தாற்போலுள்ள என் இல்லத்தில் தங்கியிருங்கள். நள்ளிரவுக்குப் பின் போகலாம்" என்று மன்றாடினான் சுங்க அதிகாரி.

"இப்போது ஏன் போகக்கூடாது?" என்று சற்று நிதானத்தை இழந்து கேட்டுவிட்டு மீண்டும் போகத் தொடங்கிய கருணாகரபல்லவன் கையைப் பிடித்து நிறுத்திய சுங்க அதிகாரி கலவரத்துடன் சொன்னான்: "பிடிவாதம் வேண்டாம். சொல்வதைக் கேளுங்கள். ஊருக்குள் சென்றால் நீங்கள் உயிருடன் மீள முடியாது" என்று.

கருணாகர பல்லவன் விழிகளில் வியப்பு மலர்ந்தது. ஆனால் காரணத்தை அதிகாரி மெல்ல மெல்ல விபரிக்கத் தொடங்கியவுடன் அந்த வியப்பு கோபமாக மாறத் தொடங்கவே, தான் இருக்குமிடம் கலிங்கத்தின் சுங்கச் சாவடியென்பதையும், சுற்றும்முற்றும் வீரர்கள் நடமாட்டம் இருக்கிறது என்பதையுங்கூட கவனிக்காமல், "அத்தனை துணிவா இந்தக் கலிங்க பீமனுக்கு?" என்று ஆத்திரத்தால் சற்று இரைந்தும் கூவிவிட்டான் கருணாகரபல்லவன். அந்தக் கூச்சல் அதிகாரியின் காதில் மட்டும் விழுந்திருந்தால் இந்தக் காதையின் போக்கும் கருணாகரபல்லவன் வாழ்க்கையின் போக்கும் வேறு திசையில் திரும்பியிருக்கும். ஆனால் விதி யாரை விட்டது? அவன் கூவியது சற்று தூரத்தேயிருந்த இரு வீரர்களின் காதிலும் விழுந்தது. உடனே நிகழ்ந்தது பிரளயம்.

**சாண்டில்யன்**

# இலங்கை அரசியலும் அரசியலமைப்புத் திருத்தங்களும்

பிரணவன்

கடந்த வாரங்களிலே இலங்கையின் நடைமுறையிலுள்ள 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிலே மேற்கொள்ளப்பட்ட 16 ஆம் திருத்தம் வரையான அரசியலமைப்புத் திருத்தங்களை பற்றிப் பார்த்தோம். இனி 17 ஆம் 18 ஆம் மற்றும் 19 ஆம் அரசியற் திட்ட திருத்தங்களைப் பற்றி நோக்குவோம்.

### 17 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (03.10.2001)

இலங்கை அரசியல் வரலாற்றில் பாராளுமன்றத்தில் ஒட்டுமொத்த வாக்குகளினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஒரேயொரு அரசியல் யாப்புச் சீர்திருத்தம் இதுவாகும். அரசியலமைப்பின் 17ஆவது திருத்தமானது அரசியலமைப்பு பேரவை என்னும் அமைப்பை உருவாக்கியதுடன் சுயாதீன ஆணைக்குழுக்களையும் உருவாக்கியது. அரசசேவை ஆணைக்குழு (பகிரங்கசேவை ஆணைக்குழு), தேர்தல்கள் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறான அரசியலமைப்பு பேரவை உருவாக்கம், சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கம் என்பன ஜனாதிபதி தனித்து முடிவெடுக்காது அரசியலமைப்புப் பேரவையின் சிபார்சின் அடிப்படையிலேயே இவ் ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்க வழியேற்பட்டதுடன் உயர் நீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்றங்களிற்கு நீதிபதிகளை நியமிக்கும் போது அரசியலமைப்புப் பேரவையின் சிபார்சின் அடிப்படையிலேயே நியமிக்கும் நிலை உருவாக்கப்பட்டது. அத்துடன் அரசியலமைப்புப் பேரவையில் சகல கட்சிகளைச் சேர்ந்தோரும் இடம்பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் ஆரம்பத்திலிருந்தே 17 ஆவது திருத்தத்தை முழுமையாக் நடைமுறைப்படுத்துவதற்கான தேவை அரசுக்கோ அல்லது அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தரப்பிற்கோ நாட்டமில்லாததால் அதனை முழுமையான அளவில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என ஒரு சாரார் கருத்து தெரிவிக்கின்றனர்.

### 18 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (09.09.2010)

18 ஆவது திருத்தத்தின் மூலம் மூல அரசியலமைப்பு உறுப்புரை 31(2) நீக்கப்பட்டது. அதாவது 31(2)இன்படி ஜனாதிபதி பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆளொருவரும் அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தெரிவு செய்யப்படுவதற்கு தகைமையுடையவராக மாட்டார். மேற் படி உறுப்புரை நீக்கப்படுவதன் மூலம் ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதி பதி பதவிக்கு தெரிவு செய்யப்படக் கூடியவராக உள்ளார். 18 ஆவது திருத்தத் தின் மூலம் 17 ஆவது திருத்தத்தில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புப் பேரவை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பாராளுமன்றப் பேரவை உருவாக்கப்பட்டது.

17ஆவது திருத்தத்திற்கமைவாக சில உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கும் போது ஜனாதிபதியால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் அரசியலமைப்புப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய ஜனாதிபதியால் நியமிக்கப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இவ்விடயம் 18 ஆவது திருத்தத்தில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் தவிசாளரையும், ஜனாதிபதி நியமிக்கும் போது அத்தகைய நியமனங்களைச் செய்வதற்கு பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்புக்களை கோருதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பார்க்கும் போது சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது 17 ஆவது திருத்தத்தில் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரமின்றி நியமிக்க முடியாது. ஆனால் 18 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மேற்படி ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்புக்களையே கோருதல் வேண்டும். அதனது அங்கீகாரத்தையல்ல.

ஜனநாயக ஆட்சியில் மக்களது ஆயுதம் தேர்தலாகும். தேர்தல் மூலமே மக்கள் தமது இறைமையை ஆட்சியாளர்களிடம் கையளிக்கின்றனர். 17 ஆம் திருத்தம் மூலம் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு கொண்டு வரப்பட்டது. அதற்கு அரசியலமைப்புப் பேரவையின் சிபார்சின் அடிப்படையிலேயே உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதியால் முடிந்தது. எனினும் 18 ஆம் திருத்தத்தில் ஜனாதிபதி எவருடைய அங்கீகாரத்தைப் பெற்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிக்கும் தேவை இல்லாமற் போனது.

### 19ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (28.04.2015)

இத்திருத்தமானது 28.04.2015 அன்று பாராளுமன்றத்தில் 215 வாக்குகளை ஆதரவாகப் பெற்று நிறைவேற்றப்பட்து. இந்தச் திருத்தச் சட்டத்திற்கு ஒருவர் எதிராக வாக்களித்திருந்தார். ஏழுபேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு விடயமாக தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமை அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டது. இதன் மூலம் அரசியல் நிறுவனங்கள் நிறைவேற்றுத்துறை நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை (Transparency) உறுதிப்படுத்தப்படுகின்றது. இவ்விடயம் நல்லாட்சிக்கான (Good Governance) ஒரு அடிப்படை விடயமாகும். எனினும் நடைமுறையில் இந்த தகவலைப் பெறுவதற்கான உரிமை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஒரு சாரரின் கருத்தாக உள்ளது.

மேலும் மூல அரசியற் திட்டத்தில் உறுப்புரை 30(2) ஜனாதிபதி ஆறாண்டுகள் கொண்டதொரு தவணைக்கே பதவி வகித்தல் வேண்டுமெனவுள்ளது. அதேபோல உறுப்புரை 62(2) இன்படி ஒவ்வொரு பாராளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு ஆண்டுகள் கொண்ட காலத்திற்கு தொடர்ந்திருத்தல் வேண்டுமெனச் சொல்லப்பட்டுள்ளது. எனினும் 19 ஆம் திருத்தச் சட்டத்தினால் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் கொண்டதொரு காலப்பகுதி யெனவும் பாராளுமன்றம் அதன் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கொண்ட காலத்திற்கு தொடர்ந்திருத்தல் வேண்டுமெனவும் திருத்தப்பட்டுள்ளது.



மூல அரசியலமைப்பில் உறுப்புரை 70(1) இற்கமைய ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக பாராளுமன்றத் தேர்தலொன்று நடத்தப்பட்டுள்ள விடத்து அந்தப் பாராளுமன்றத் தேர்தல்த் திகதியிலிருந்து ஓராண்டு காலம் முடியும் வரை பாராளுமன்றம் வேண்டினாலொழிய ஜனாதிபதியால் இரண்டாம் தடைவை பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. இந்த உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி ஏதாவது காரணத்திற்காக ஒரு வருடத்தின் பின் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் இந்த ஏற்பாட்டிற்கமைய ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் வேறு ஒருகட்சியாகவும் இருக்கும் போது பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் ஏதாவது முரண்பாடுகள் ஏற்படும் போது ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியுமாகவுள்ளது.

எனினும் 19ஆவது திருத்தத்தின் மூலம் மேற்படி ஏற்பாடு நீக்கப்பட்டு ஜனாதிபதியானவர் பாராளுமன்றம் அதன் முதல் கூட்டத்திற்கு நியமித்த திகதியிலிருந்து 4 1/2 ஆண்டுகளுக்கு பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாதென திருத்தப்பட்டது.

மேற்கூறிய ஜனாதிபதியானவர் பாராளுமன்றத்தைக் கலைத்தல் தொடர்பாக காணப்படும் மூல யாப்பு ஏற்பாடும் 19 ஆவது திருத்தில் காணப்படும் ஏற்பாடும் இலங்கை அரசியல் வரலாற்றில் பெரும் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமையைக் காணக்கூடியதாகவுள்ளது. 2004 இல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று 1 வருட காலத்தினுள் மூல யாப்பு ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ஐ.தே.கட்சி அரசாங்கப் பாராளுமன்றத்தை கலைத்திருந்தார். அதே போன்றதொரு நிலைமை 2018ஆம் வருட மும் ஏற்பட்டது. 19 ஆவது திருத்தப்படி ஜனாதிபதியானவர் பாராளுமன்றத்தை அதன் முதற் கூட்டத்திற்கு நியமித்த திகதியிலிருந்து 4 1/2 ஆண்டுகளுக்கு முன்னர் கலைக்க முடியாது. எனினும் 2018 இல் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்க அரசாங்கத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கலைத்த போது நீண்டகாலமாக சர்ச்சையை ஏற்படுத்திய இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நீதித்துறையின் உதவி நாடப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

18 ஆம் திருத்தத்தில் ஜனாதிபதியானவர் எத்தனை தடவைகளும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படலாம். எனினும் 19 ஆவது திருத்தம் மூலம் அவ்விடயம் " ஜனாதிபதி பதவிக்கு மக்களால் இரு முறைதெரிவு செய்யப்பட்டுள்ள ஆளொவரும் அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தெரிவு செய்யப்பட தகைமையுடவராக மாட்டார்" ஏன மாற்றப்பட்டது.

19 ஆவது திருத்தத்தில் 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் நீக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன உருவாக்கப்பட்டன. அத்துடன் ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனேயே ஜனாதிபதி நியமிக்கலாம் என்றும் பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள் போன்றோரும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனேயே நியமிக்கலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இனி 19 ஆவது அரசியற் திட்டத்தில் காணப்படும் இதர விடயங்களைப் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

1.19 ஆவது திருத்தப்படி ஜனாதிபதிக்கு அமைச்சுப் பொறுப்புக்களை வைத்திருக்கும் ஏற்பாடுகள் இல்லை. முன்னர் அவ்வாறு வைத்திருக்க முடியுமாக இருந்தது.

2.19 ஆவது இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள ஒருவர் ஜனாதிபதியாகவோ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகவோ முடியாது.

3.முன்னர் காணப்பட்ட ஜனாதிபதியானவர் பிரதமரைப் பதவி நீக்கும் ஏற்பாடு நீக்கப்பட்டது.

4.ஜனாதிபதியானவர் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட சட்டமூலம் ஒன்றை மக்கள் தீர்ப்பிற்கு விடுவதன் மூலம் சட்டமாக்கலாம் என்ற ஏற்பாடு இல்லாது செய்யப்பட்டது.

5.ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் காணப்பட்ட ஆகக் குறைந்த வயது 30 என்பது 35 ஆக அதிகரிக்கப்பட்டது.

6.இத் திருத்தப்படி அமைச்சரவை அமைச்சர்கள் 30 பேரும் ஏனைய அமைச்சர்கள் 40 பேரும் இருக்கலாம். முன்னர் இவ்வாறான கட்டுப்பாடு இல்லை.

(தொடரும்...)

# பதவியைக் காப்பாற்ற நீதிபதியைத் தேடும் ட்ரம்ப்!

**“அந்தப் பதவியில் அடுத்த வாரத்தில் ஒரு பெண்ணை நியமிக்கப் போகிறேன். ஏனெனில், எனக்கு ஆண்களைவிட பெண்களை மிகவும் பிடிக்கும்” - ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஒரு பிரசாரப் பேரணியில் இப்படி உற்சாகமாகச் சொன்னார். கணையப் புற்றுநோயுடன் போராடி, 87 வயதில் மறைந்த அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி ரூத்பேடர் கின்ஸ்பர்க் இடத்துக்கு வேறொரு வரை நியமிப்பது பற்றியே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.**



ஏனைய நாடுகளில் ஒரு நீதிபதியின் இயற்கை மரணம் என்பது ஓர் அஞ்சலி செய்தியுடன் முடிந்து போகிற விவகாரம். ஆனால், அமெரிக்காவில் அது ஓர் அரசியல் சூறாவளியையே ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு மூன்று காரணங்கள். ஒன்று, பரபரப்பான தேர்தல் நேரத்தில் அவர் இறந்து போனது. இரண்டு அந்த காலியிடத்துக்கு இன்னொருவரை நியமிப்பதில் அரசியல் மரபுகள் மீறப்படுவது. மூன்று, ‘அந்த இடத்துக்கு நியமிக்கப்படும் ஒருவர் இன்னும் சில வாரங்களில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவையே தீர்மானிக்கும் நபராக மாறக்கூடும்’ என்பது!

### விசித்திர நீதிமன்றம்!

அமெரிக்கத் தேர்தல் நடைமுறை பல விசித்திரங்களைக்கொண்டது. அதுபோலவே அமெரிக்க உச்ச நீதிமன்றமும் விசித்திரமானது. அமெரிக்க அரசு நிறைவேற்றும் முக்கியச் சட்டங்கள் குறித்த வழக்குகள், முக்கியத்துவம் வாய்ந்த மேல்முறையீடுகள் மாகாணங்களுக்கும் மைய அரசுக்குமான உரசல்கள் போன்றவற்றை விசாரிக்கும் நீதிமன்றம் இது. எல்லா விடயங்களிலும் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதி முடிவாகக் கருதப்படும். ஓர் ஆண்டில் அதிகபட்சம் 100 வழக்குகளுக்கு மேல் இங்கு விசாரிக்கப்படுவதில்லை. இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு உலகின் பல நாட்டு நீதிமன்றங்களில் உதாரணமாகக் காட்டப்படுவதுண்டு.

### நீதிபதிகளில் இரண்டு அணி!

அமெரிக்க ஜனாதிபதியே உச்ச நீதிமன்ற நீதிபதியை நியமிக்கும் அதிகாரம் படைத்தவர். அந்த நியமனத்தை அமெரிக்க செனட் சபை அங்கீகரிக்க வேண்டும். மொத்தம் ஒன்பது நீதிபதிகள். ஓய்வு வயது என்று எதுவும் இல்லை. நியமன திகதியிலிருந்து ஆயுட்காலம் முழுக்க அவர்கள் நீதிபதிகளாக இருப்பார்கள். ஒருவர் மறைந்தாலோ, முதுமை காரணமாக பதவி விலகினாலோ, சுயமாக ஓய்வு அறிவித்துக் கொண்டாலோ அந்த இடத்துக்குப் புதியவர் நியமிக்கப்படுவார்.

தங்கள் கட்சியின் கொள்கை சார்புடைய நீதிபதிகளையே நியமிப்பது ஜனாதிபதிகளின் வழக்கமாக இருக்கிறது. குடியரசுக்கட்சி ஆட்சியில் நியமிக்கப்படும் நீதிபதிகள், பழைமைவாதிகளாக அறியப்படுகிறார்கள். மத நம்பிக்கை மற்றும் தனிமனித சுதந்திரம் சார்ந்த வழக்குகளில் அவர்கள் குடியரசுக் கட்சியின் நிலைப்பாட்டிலிருந்தே தீர்ப்பு சொல்கிறார்கள். ஜனநாயகக் கட்சி ஆட்சியில் நியமிக்கப்படும் நீதிபதிகள், ‘தாராளவாதி’களாக அறியப்படுகிறார்கள். இவர்களின் தீர்ப்புகள் பல புதிய உரிமைகளை அமெரிக்க மக்களுக்குக் கொடுத்திருக்கின்றன.

### யாருக்கு செல்வாக்கு?

தற்போது மறைந்த ரூத்பேடர் கின்ஸ்பர்க், ஒரு தாராளவாதியாகவும் இடதுசாரியாகவும் அடையாளம் காணப்பட்டவர். பெண்ணுரிமை சார்ந்து இவர் வழங்கிய பல தீர்ப்புகள், அமெரிக்க மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. இவர் உயிருடன் இருந்தவரையில் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் பழைமைவாதிகள் ஐந்து பேரும், தாராளவாதிகள் நான்கு பேரும் நீதிபதிகளாக இருந்தனர். ட்ரம்ப் தனது ஆட்சிக்காலத்தில் இதுவரை இரண்டு நீதிபதிகளை நியமித்திருக்கிறார். இதனால் பழைமைவாதிகள் மெஜாரிட்டி பெற்றனர். எனினும், முக்கியத்துவம் வாய்ந்த சில தீர்ப்புகளில், பழைமைவாதிகள் தரப்பிலிருந்து ஒருவரோ, இருவரோ அணி மாறி தீர்ப்பளித்தனர்.

இப்போது கின்ஸ்பர்க் இடத்துக்கு ஒரு பழைமைவாதியை ட்ரம்ப் நியமித்தால், நீதிமன்றத்தில் பழைமைவாதிகளின் செல்வாக்கு 6-3 என்ற விகிதத்தில் ஓங்கிவிடும். ‘குறிப்பாக இளம் வயது நீதிபதிகளை நியமிப்பதை ட்ரம்ப் வழக்கமாக வைத்திருக்கிறார். அவர்கள் நீண்டகாலம் பதவியிலிருந்து செல்வாக்கு செலுத்துவார்கள். நீதிமன்றம் நீண்டகாலத்துக்கு ஒரு சார்புள்ளதாக மாறிவிடும்’ என்பது எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் வாதம். துப்பாக்கி உரிமம், பெண்கள் வேண்டாத கர்ப்பத்தை கருச்சிதைவு செய்துகொள்வதற்கான அனுமதி போன்ற விவகாரங்களில் விரைவில் தீர்ப்பு வரவிருக்கிறது. இந்த நேரத்தில் நீதிமன்றத்தின் சமநிலை அதிகமாக ஒரு பக்கம் சாய்ந்துவிடக் கூடாது என மனித உரிமை ஆர்வலர்கள் கவலைப்படுகின்றனர்.

### மீறப்படும் மரபு!

பராக் ஒபாமாவின் பதவிக்காலம் முடிய 10 மாதங்கள் இருந்தபோது உச்ச நீதிமன்றத்தில் ஒரு காலியிடம் ஏற்பட்டது. ஒபாமா அதற்கு ஒருவரைத் தேர்வு செய்தபோது எதிர்ப்பு எழுந்தது. அப்போது செனட் சபையில் எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சிக்கு மெஜாரிட்டி இருந்தது. அந்தக் கட்சியின் செனட் தலைவரான மிட்ச் மெக்கானெல், ‘தேர்தல் நடைமுறைகள் தொடங்கிவிட்டன. புதிய ஜனாதிபதி பதவி ஏற்றபின் நீதிபதியை நியமிக்கலாம்’ என்று தடுத்துவிட்டார். ஒபாமாவும் அதை ஏற்றுக்கொண்டார்.

இப்போதோ, தேர்தலுக்கு வெறும் 46 நாள்களே இருக்கும்போது காலியிடம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதும் அதே மிட்ச் மெக்கானெல், குடியரசுக் கட்சியின் செனட் சபைத் தலைவராக இருக்கிறார். ‘ட்ரம்ப் நியமிக்கும் நீதிபதிக்கு செனட் சபை ஒப்புதல் வழங்கும்’ என்று இப்போது மாற்றிப் பேசுகிறார் அவர். 100 உறுப்பினர்கள் கொண்ட செனட் சபையில் குடியரசுக் கட்சிக்கு 53 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே, தனது நியமனத்துக்கு ஒப்புதல் பெறுவதில் சிக்கல் இருக்காது என ட்ரம்ப் நினைத்தார். ஆனால், அவர் கட்சியிலேயே இதுவரை இரண்டு செனட் உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

செனட் சபைக்கும் இப்போது தேர்தல் நடக்கிறது. பல உறுப்பினர்கள் தோல்வியைத் தழுவும் நிலையில் உள்ளனர். இந்த நிலையில் ‘நீதிபதி நியமனத்துக்கு ஒப்புதல் தரும் தார்மிக நிலையில் செனட் இருக்கிறதா?’ என்ற கேள்வி எழுந்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பை எதிர்க்கும் ஜோபைடன், ‘முதலில் மக்கள் தங்கள் ஜனாதிபதியைத் தேர்வு செய்யட்டும். அதன் பிறகு அந்த ஜனாதிபதி வந்து நீதிபதியை நியமனம் செய்வார்’ என்கிறார்.

### யாருக்கு வாய்ப்பு?

ட்ரம்ப் இப்போது உடனடியாக இந்த நியமனத்தைச் செய்வதன் மூலம், ஒரே கல்லில் பல மாங்காய்களை அடிக்கப்பார்க்கிறார். மத நம்பிக்கையுள்ள ஒருவரை நியமிப்பதன் மூலம், பெரும்பான்மை கத்தோலிக்கர்களின் வாக்குகளைப் பெற முடியும். அமிகோனிபார்ரெட், பார்பரா லகோவா ஆகியோர் அவர் பட்டியலில் இருக்கிறார்கள். ‘பார்பராவை நியமித்தால், அவரின் / புளோரிடா மாகாணத்தில் ட்ரம்ப் சுலபமாக ஜெயிக்கலாம்’ என குடியரசுக் கட்சியினர் கூறுகிறார்கள். கருத்துக் கணிப்பில் மிகவும் பின்தங்கியுள்ள ட்ரம்ப், எப்படியாவது வாக்குகளை வாங்கத்துடிக்கிறார்.

இன்னொரு பக்கம், தேர்தல் நடைமுறையையே ட்ரம்ப் குறை சொல்லிவருகிறார். கொரோனா அச்சம் இருப்பதால், நிறைய மாகாணங்களில் தபால் வாக்குகளை அனுமதிக்கிறார்கள். சில இடங்களில் முன்கூட்டியே வாக்குகளைச் செலுத்தவும் வசதி செய்துள்ளனர். ‘இதனால் தேர்தலில் மோசடி நிகழும்’ என ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவிக்கிறார். இது தொடர்பாக கீழமை நீதிமன்றங்களில் இப்போதே பல வழக்குகள் போடப்பட்டுள்ளன.

“நான் ஜெயிப்பது போன்ற ஒரு முடிவைத் தவிர வேறு எந்த முடிவு வந்தாலும் ஏற்கமாட்டேன்” என்று இப்போதே ட்ரம்ப் அறிவித்திருக்கிறார். “தேர்தல் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை நாடும்போது, நாம் நியமித்த நீதிபதிகள் நமக்குத் தேவைப்படும் ‘நியாயத்தை’ வழங்குவார்கள்” என ட்ரம்ப் நம்புகிறார்.

**நீதியில் அரசியல் கலக்கும்போது எதிர்ப்புகள் எழுவது இயல்புதானே!**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உதய கீதம்
இயற்றியவர் : முத்துலிங்கம்
இசை : இளையராஜா
பாடியவர்: எஸ்.பி.பாலசுப்பிரமணியம்



**மறைந்த எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் நினைவாக....**

சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
என்றும் விழாவே என் வாழ்விலே

சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்
லலை... லலை...
லல... லல... ல...
லல... லல... ல...
போகும் பாதை
தூரமே வாழும்
காலம் கொஞ்சமே
ஜீவ சுகம் பெற ராக
நதியினில் நீ நீந்தவா

போகும் பாதை தூரமே
வாழும் காலம் கொஞ்சமே
ஜீவ சுகம் பெற ராக
நதியினில் நீ நீந்தவா
இந்த தேகம் மறைந்தாலும்
இசையாய் மலர்வேன்
இந்த தேகம் மறைந்தாலும்
இசையாய் மலர்வேன்
கேளாய் பூமனமே... ஹோ...

சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்
உள்ளம் என்னும் ஊரிலே
பாடல் என்னும் தேரிலே
நாளும் கனவுகள் ராஜ
பவனிகள் போகின்றதே
உள்ளம் என்னும் ஊரிலே
பாடல் என்னும் தேரிலே
நாளும் கனவுகள் ராஜ
பவனிகள் போகின்றதே

எந்தன் மூச்சும் இந்த பாட்டும்
அணையா விளக்கே
எந்தன் மூச்சும் இந்த பாட்டும்
அணையா விளக்கே
கேளாய் பூமனமே... ஹோ...

சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
என்றும் விழாவே என் வாழ்விலே... ஒ...
சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்

# டொரண்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் ஈழத்து விமல்ராஜின் 'வெள்ளம்' குறுந்திரைப்படம் சிறந்த ஜூரி விருதை வென்றது



அது ஒரு கிராமப்புறம். மழை சோவெனக் கொட்டுகிறது. அந்த மழைக்காய் வீதியோரம் இருக்கும் தபால் நிலையத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாண வன் ஒருவன் பாடசாலை உடையுடன் ஒதுங்கி நிற்கிறான்.

மழை கொட்டி ஓய்ந்ததும் சிறுவன் வெளியே கைகளை நீட்டி மழை பெய்கிறதா? எனப் பார்த்து விட்டு வீட்டை நோக்கி ஓட்டம் எடுக்கிறான்.

வெள்ளத்தில் அவன் பாதம் சதக்கு சதக்கு என வெள்ளம் சிதற அவனின் ஓட்டம் வேகமெடுக்கிறது.

வீட்டு உரிமையாளர் உணவு உட்கொண்ட பாத்திரத்தில் வாய் வைத்த பாவத்துக்காய் வீதிக்கு வந்த பூனைக்குட்டி ஒன்று அந்த மழையில் நனைந்து நடுங்கியபடி நின்றதைக் கண்ட அவன் வேகம் சடுதியாக குறைய அந்தப் பூனையைச் சுமந்து கொண்டு வீட்டுக்குச் செல்கிறான்.


வீட்டில் சிறுவனின் தாய் பூனையுடன் வந்த மகனை எச்சரிக்க அவன் நனைந்த பூனையை துணியினால் துடைக்க முற்பட தடுத்து நிறுத்துகிறாள்.

சிறுவன் பூனையுடன் விளையாட கண்டிக்கிறாள். பூனையுடன் விளையாடினால் குக்கல் வருத்தம் வரும் என எச்சரிக்கிறாள் மகனை.

அவன் உணவை பூனைக்கு ஊட்டி விட்டதை கண்ணுற்ற தாய் சிறுவனை கடுமையாகத் தாக்குகிறாள். பூனை பயந்து பாய்ந்து ஓடுகிறது. பூனையைத் தேடி சிறுவன் மழை வெள்ளத்தில் அலைகிறான்.

பூனையின் ஓசை கேட்ட திசைக்குச் சென்று வீட்டின் பின் இருந்த பாழடைந்த, பழைய சாமான்கள், விறகுகள் போடும் கொட்டகைக்குள் சென்ற சிறுவன் திகைத்து நிற்க...

அவனது எண்ணங்கள் நீள்கிறது. பாடசாலையால் வீடு வந்த சிறுவன் "அம்மா அம்மம்மா எங்க?" என்றதும் அவாவை மாமா கூட்டிக் கொண்டு போய் விட்டார் எனத் தாய் கூற, சிறுவனின் முகத்தில் சோகம் இளையோட மீண்டும் நினைவுக்கு வருகிறான்.




மாமா வீட்டுக்குச் சென்று விட்டாள் எனக் கூறப்பட்ட அவனது பாட்டி மழைக் குளிரில் நடுங்கியபடி அந்த பாழடைந்த கொட்டகையில் கிடைக்கிறாள்.

சிறுவனின் முகத்தில் இன்னும் சோகம் இளையோடுகிறது. திரை மூடுகிறது. வெறும் ஆறு நிமிடங்கள் வரை ஓடும் இக்குறும் படம் கனடா டொரண்ரோ தமிழ் திரைப்பட விழாவில் Special Jury விருதினைப் பெற்று 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த குறும்படமாகத் தெரிவாகியுள்ளது.

ஈழத்து இயக்குநர் விமல்ராஜின் இயக்கத்தில் 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது இக்குறும் படம். கடந்த 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை கனடா டொரண்ரோவில் நடைபெற்ற இக் குறுந்திரைப்பட விழாவில் நடுவராக இந்திய திரைப்பட இயக்குநர் மிஸ்கின் செயற்பட்டார் என்பதுடன் வெள்ளம் குறுந்திரைப் படம் ஏற்கனவே ஈழத்தில் பல விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மொத்தமாக இக்குறும் பட போட்டிக்கு 242 குறுந் திரைப்படங்கள் சமர்ப்பிக் கப்பட்ட நிலையில் விமல் ராஜின் வெள்ளம் குறுந் திரைப்படம் Special Jury விருதை தட்டிச் சென்றுள்ளது.

ஒரு காலத்தில் உச்சத்தில் இருந்த ஈழத்து சினிமாத்துறை போரின் உக்கிரத்தால் சிதைக்கப்பட்டு, தற்போது தென்னிந்திய சினிமாவுக்குள் மூழ்கிக் கிடக்கும் சமூகத்தில் மீண்டும் முளைத்தெழத் தொடங்கியுள்ளது.

தென்னிந்திய சினிமாவைக் கொண்டாடும் எமது சமூகம் எமது ஈழத்துக்கே உரிய தனித்துவங்களுடன் வெளிவரும் ஈழத்துப் படைப்புகளுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும்.

இல்லையேல் எமது அடையாளங்கள் அத்தனையும் அழிந்து எமக்கென்ற பண்பாடு, கலாசாரம் எதுவுமின்றி ஏதிலிகளாய் நிற்க வேண்டிய நிலை வரும்.

எனவே விமல்ராஜ் போன்று இன்னும் திறமையுள்ள பல படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களின் படைப்புகளுக்கு சரியான அங்கீகாரம் வழங்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இது ஈழத்து சினிமாத்துறை தென்னிந்திய சினிமா பண்பாட்டுக்குள் புகுவதைத் தடுக்கும் என்பதில் ஐயமேதும் இல்லை.

**மாவை நா.கஜேந்திரன்**

# மறைந்தது பாடும் நிலா



புகழ்பெற்ற சினிமா பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கடந்த ஒகஸ்ட் 5 ஆம் திகதி கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு சூளைமேடு பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அனுமதிக்கப்பட்ட சில நாட்களில் அவரது உடல்நிலை மோசம் அடைந்தது. இதனால் அவரை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றி செயற்கை சுவாச கருவிகள் பொருத்தி சிகிச்சை அளித்தனர். தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. பின்னர் படிப் படியாக உடல்நிலை தேறி வந்த நிலையில், திடீரென அவர் மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை அறிக்கை வெளியிட்டது. இந் நிலையில், கடந்த 51 நாட்களாக வைத்தியசாலயில் சிகிச்சை பெற்றுவந்த எஸ்.பி.பி. வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.04 மணிக்கு காலமானதாக இயக்குனர் வெங்கட் பிரபு டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். அவரது மறைவு திரையுலகினரிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



# இந்திய அளவில் சாதனை படைத்த விஜய் எடுத்த செல்ஃபி

தளபதி விஜய் தற்போது தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமாக திகழ்பவர், இவருக்கு மிகப்பெரிய அளவில் ரசிகர்கள் வட்டம் உள்ளது. இயக்குநர் அட்லீ இயக்கத்தில் இவர் நடிப்பில் சென்ற வருடம் வெளியான பிகில் மிக பெரிய வெற்றியடைந்தது. அதனைத் தொடர்ந்து இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் மாஸ்டர் திரைப்படத்தில் நடித்து வந்தார். மேலும் இப்படத்திற்காக ரசிகர்கள் மட்டுமன்றி பலரும் அவலோடு காத்துக்கொண்டு இருக்கின்றனர். இந்த லொக்டவுன் முடிந்தவுடன்மாஸ்டர் திரைப்படம் திரைக்குவரும் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்நிலையில் தளபதி விஜய் மாஸ்டர் திரைப்படப் படப்பிடிப்பு நெய்வேலியில் நடைபெற்றது. அங்கு அவரை காண கூடிய ரசிகர்கள் முன்னே நின்று செல்பி எடுத்தார். அந்த புகைப்படத்திற்கு 357k லைக்ஸ்களை பெற்றது. மேலும் தற்போது 144k ரீ-டுவீட்களை பெற்று இந்திய அளவில் அதிக ரீ-டுவீட்களை பெற்ற புகைப்படம் என்ற சாதனையை படைத்துள்ளது.

# அக்ஷராவின்
## அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு



நடிகர் கமல்ஹாசனின் இரண்டாவது மகளான அக்ஷரா ஹாசன் ஷமிதாப் திரைப்படத்தின் மூலம் அறிமுகமானார். அதனை தொடர்ந்து தமிழில் விவேகம், கடாரம் கொண்டான் உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்திருந்தார். மேலும் அருண் விஜய், விஜய் ஆண்டனி உள்ளிட்டோருடன் இவர் நடித்து வந்த அக்னி சிறகுகள் திரைப்படமும் லொக்டவுனுக்கு பிறகு வெளியாகவுள்ளது. இந்நிலையில் தற்போது இவர் நடித்து வரும் திரைப்படமான அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற திரைப்படத்தின் பெர்ஸ்ட் லுக் போஸ்டரை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டுள்ளார்.

# காதலில் விழுந்த பாடகர் அனிருத்



தமிழ் திரையுலகில் முன்னணி இசையமைப்பாளராக வலம்வரும் அனிருத், பிரபல பாடகியை காதலித்து வருவதாக கூறப்படுகிறது. தனுஷின் மனைவி ஐஸ்வர்யா இயக்கிய 3 படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் அனிருத். இப்படத்திற்காக அவர் இசையமைத்த முதல் பாடலான கொலைவெறி அவரை உலகளவில் பிரபலமாக்கியது. பின்னர் அடுத்தடுத்த அல்பங்களின் மூலம் இளைஞர்களை வெகுவாக கவர்ந்த அனிருத், குறுகிய காலத்திலேயே அஜித், விஜய், ரஜினி, கமல் ஆகியோரது படங்களுக்கு இசையமைத்து முன்னணி இசையமைப்பாளராக உயர்ந்தார். இவர் கைவசம் மாஸ்டர், இந்தியன் 2, காத்து வாக்குல ரெண்டு காதல், டாக்டர், சியான் 60 போன்ற படங்கள் உள்ளன. இப்படி ஹொலிவுட்டில் பிசியான இசையமைப்பாளராக வலம்வரும் அனிருத், பிரபல பாடகி ஜோனிடா காந்தியை காதலித்து வருவதாக ஹொலிவுட் வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது. சமீபத்தில் கூட ஜோனிடா காந்தியும், அனிருத்தும் சிவகார்த்திகேயனின் டாக்டர் படத்திற்காக சேர்ந்து பாடிய 'செல்லம்மா' பாடல் மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. டில்லியில் பிறந்து கனடாவில் வளர்ந்தவர். யூடியூப் மூலம் பிரபலமான ஜோனிடா காந்தி ஷாருக்கானின் சென்னை எக்ஸ்பிரஸ் படம் மூலம் தன் திரையுலக பயணத்தை தொடங்கினார். அவரை ஓ காதல் கண்மணி படத்தில் இடம்பெறும் மெண்டல் மனதில் பாடல்மூலம், ஏ.ஆர்.ரகுமான் தான் தமிழில் அறிமுகம் செய்துவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எந்தவித காதல் சர்ச்சையிலும் அனிருத் சிக்காமல் இருந்த நிலையில், தற்போது பாடகி ஜோனிடாவை அவர் காதலிப்பதாக கூறப்படுகிறது.



# சனத் ஜெயசூர்யா

# எதிரணியை அடித்து நொருக்கிய இரும்பு மனிதன்

காலத்தின் பதிவு

பனி மூட்டத்துக்கு இடையே டில்லியில் இந்திய நேரப்படி காலை 9.30 மணிக்கு போட்டி தொடங்கியதாக நினைவு. கென்யாவுக்கு எதிராக சென்சுரி அடித்த சச்சின் மேற்கிந்தியத் தீவுக்கு எதிராக 70 ஓட்டங்கள் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 90 ஓட்டங்களில் அவுட் ஆகியிருந்தார். அதனால் இலங்கைக்கு எதிராக ஒரு பெரிய இன்னிங்ஸ் ஆடினால் சுப்பராக இருக்குமே என எதிர்பார்த்து டி.வி முன் உட்கார்ந்த சச்சின் ரசிகர்களுக்கு மிகப்பெரிய விருந்து காத்திருந்தது. பிரமாதமான இன்னிங்ஸ் ஆடினார் சச்சின். .ஒரு ஷொட்கூட மிஸ் ரைமிங் ஷொட் கிடையாது. அவரும், அசாருதினும் சேர்ந்து நான்காவது விக்கெட்டுக்கு 175 ஓட்டங்கள் பாட்னர்ஷிப் போட்டார்கள்.



**“விவியன் ரிச்சர்ஸுக்குப் பிறகு அதிரடியாக ஆடக்கூடிய பட்ஸ்மன்கள் சர்வதேச கிரிக்கெட்டில் இல்லை என்ற குறையைத் தீர்த்தவர் சனத் ஜெயசூர்யா. இப்போதைய பேட்டிங் பவர்ப்ளே கோன்செப்ட்கள் 90களில் இல்லை. முதல் 15 ஓவர்களுக்கு அவுட் பீல்டில் மூன்று பீல்டர்கள் மட்டுமே நிற்கமுடியும். இதைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிபெற ஆரம்பித்த முதல் ரீம் இலங்கைதான்.”**

சச்சின் சென்சுரி மட்டுமல்ல அப்போதைய அதிகபட்ச ஸ்கோராக 137 ஓட்டங்கள் அடித்தார். கடைசி ஓவரில் ஓட்டம் அவுட்தான் ஆனாரே தவிர இலங்கையின் பௌலர்கள் யாரும் அவர் விக்கெட்டை எடுக்கவில்லை. இந்தியா 50 ஓவர்களில் 271 ஓட்டங்கள் சேர்த்தது. அப்போதைய காலகட்டத்தில் 250 ஓட்டங்களுக்கு மேல் அடித்தாலே வெற்றி பெற்றுவிடலாம் என்பதால் இந்தியாவின் வெற்றி ஓரளவுக்கு உறுதியானதுபோல இருந்தது. இடையில் மழைவேறு வந்ததால் இலங்கையின் இன்னிங்ஸ் தொடங்கக் கொஞ்சம் தாமதமாக படத்துக்குக் கிளம்பும் வேலைகளில் இறங்கினோம். தியேட்டருக்கு பேருந்து பிடிக்க சிலமணித்துளிகள் இருந்தபோது இலங்கையின் இன்னிங்ஸ் ஆரம்பித்தது. சனத் ஜெயசூர்யாவும் விக்கெட் கீப்பர் ரோமேஷ். கலுவித்தரானாவும் ஓப்பனிங் இறங்கினார்கள். மனோஜ் பிரபாகர் பௌலிங். “இலங்கை வீரர்கள் இப்படியெல்லாமா ஆடுவார்கள்” என அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தார்கள்.

அப்போதெல்லாம் முதல் ஓவரில் பவுண்டரிகள் அடிப்பது என்பது பேரதிசயம். முதல் ஓவர்களில் எல்லாம் கமன்டேட்டர்கள் பொதுவாக “வெல் லெஃப்ட்” என்றுதான் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதுவும் முதல் 10 ஓவர்கள் எல்லாம் ஆமை வேகத்தில்தான் நகரும். 10 ஓவரில் 40 ஓட்டங்கள் வந்தாலே பெரிய விடயம்தான். ஆனால், அன்று இலங்கையின் இன்னிங்ஸில் முதல் ஓவரிலேயே பவுண்டரிகள் பறந்தன. மனோஜ் பிரபாகரின் முதல் ஓவரில் மட்டும் 11 ஓட்டங்கள். அடுத்த ஸ்ரீநாத் ஓவரில் 9 ஓட்டங்கள். மூன்றாவது ஓவர் மீண்டும் மனோஜ் பிரபாகர். இந்த ஓவரில் மட்டும் 22 ஓட்டங்கள் அடித்தார் ஜெயசூர்யா. 3 ஆவது ஓவரிலேயே இலங்கையின் ஸ்கோர் 42. ஒருபக்கம் ஜெயசூர்யா அடிக்க, இன்னொரு பக்கம் கலுவித்தரானாவும் பவுண்டரிகள் அடித்துக்கொண்டிருந்தார். நான்காவது ஓவரிலேயே 50 ஓட்டங்களைத் தொட்டுவிட்டார்கள். பேரதிர்ச்சியாக இருந்தது. ஆனால், நல்ல வேளையாக 5 ஆவது ஓவரில், வெங்கடேஷ் பிரசாத்தின் பௌலிங்கில் கலுவித்தரானா 26 ஓட்டங்களில் அவுட் ஆக, நாங்கள் கிளம்பி படத்துக்குப்போனோம். இந்தியா வெற்றிபெற்றதா, இல்லை தோல்வியடைந்ததா எனத் தெரியாது. படம் முடிந்து வெளியே வந்ததும் எதிரில் வந்த பலரிடமும் “மேட்ச் என்னாச்சு” எனக்கேட்க, ஒரே ஒரு அண்ணன் மட்டும் தோளில் தட்டி, “இந்தியா தோத்துடுச்சுப்பா...மேட்ச்லாம் பார்க்குறதை விட்டுட்டு நல்லா படிங்க” என அட்வைஸ் செய்துவிட்டுப் போனார்.

அடுத்தநாள் ஹைலைட்ஸில்தான் ஜெயசூர்யாவின் மிரட்டல் இன்னிங்ஸைப் பார்க்கமுடிந்தது. முதல் 2 ஓவர்களில் ஜெயசூர்யா வெளுத்ததால் அடுத்த ஸ்பெல்லில் வேகப்பந்து வீச்சாளரான மனோஜ் பிரபாகர் ஆஃப் ஸ்பின் எல்லாம் போட்ட விநோதங்கள் நடந்திருக்கின்றன. 2 சிக்ஸர், 9 பவுண்டரிகள் உட்பட 79 ஓட்டங்கள் அடித்திருக்கிறார் ஜெயசூர்யா. இந்தியாவுக்கு எதிரான ஜெயசூர்யாவின் முதல் தாக்குதல் அதுதான்... சனத் ஜெயசூர்யா என்கிற பெயர் ஆழ்மனதில் பதிந்தது. மனோஜ் பிரபாகரின் கரியர் அன்றோடு முடிந்தது.

இடது கை பட்ஸ்மனான ஜெயசூர்யா இலங்கையின் மாத்தறை எனும் பகுதியைச் சேர்ந்தவர். கொழும்புவில் இருந்து 160 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் நகரம் இது. சென்னைக்கும் பாண்டிச்சேரிக்குமான பயண தூரம். கிரிக்கெட் பயிற்சிகள் எடுப்பதற்காக தினமும் அதிகாலையில் எழுந்து 3-4 மணி நேரம் பயணம் செய்து கொழும்புவில் வந்து பயிற்சிகள் எடுத்துவிட்டு மீண்டும் மாலையில் கிளம்பி நள்ளிரவில் வீடு போய் சேர்வது என ஒரு சர்வதேச கிரிக்கெட் வீரராக மாற வெறியாக உழைத்திருக்கிறார் ஜெயசூர்யா. கொழும்பு அணிக்கான ஜெயசூர்யாவின் அதிரடி ஆட்டங்கள் 1988 இல் நடந்த முதல் யூத் கிரிக்கெட் உலகக்கோப்பையில் விளையாட அவரை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துப்போனது. பிரையன் லாரா, நாசர் ஹுசைன், மைக்கேல் ஆதர்ட்டன், இன்சமாம் உல் ஹக் என 90“இல் மிகப்பெரிய கிரிக்கெட்டர்களாக உருவெடுத்தப் பலரும் கலந்துகொண்ட ஜூனியர் உலகக்கோப்பை தொடர் அது.

ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவரான ஜெயசூர்யாவுக்கு அவரது நண்பர்கள் எல்லாம் சேர்ந்து பணஉதவி செய்து பேட், **Pad**, ஹெல்மெட் என முதல் முறையாக புது கிரிக்கெட் கிட் வாங்கிக் கொடுத்து அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆமாம், முதன்முதலாக ஜெயசூர்யா தன் சைஸுக்கு ஏற்ற **Pad**, ஹெல்மெட்களை அப்போதுதான் வாங்கியிருக்கிறார். சின்ன வயதில் இருந்தே செகண்ட் ஹேண்ட் Pad, ஹெல்மெட்களை அணிந்து விளையாடியவர் என்பதால் தனக்கு செட் ஆகாத பேட்களையும், ஹெல்மெட்டையும் ஒவ்வொரு பந்தையும் அடிக்கும் முன் அட்ஜஸ்ட் செய்வது ஜெயசூர்யாவின் வழக்கமாகியிருக்கிறது. அந்தப் பழக்கம்தான் சர்வதேச கிரிக்கெட்டாராகி ஒருநாள் கிரிக்கெட்டில் 13 ஆயிரம் ஓட்டங்கள் அடித்தப்பிறகும் மாறவில்லை. அதேபோல் ஒவ்வொரு பவுண்டரியும் சிக்ஸரும் அடித்ததும் பிட்சுக்கு நடுவில் வந்து பேட்டை நான்கைந்து முறை தட்டி விட்டுப்போவார் ஜெயசூர்யா. பௌலர் பௌலிங் போட ஓடிவந்துகொண்டிருக்கும்போது ஜெயசூர்யாவின் பேட் டப்பு, டப்பு, டப்பு என மூன்று முறை தட்டும் சத்தமே கிலிகிளப்பும்.

பின்ச் ஹிட்டிங் எனச் சொல்வார்கள். டாப் ஆர்டரில் விக்கெட்டுகள் சரியும்போது 5 ஆவது அல்லது 6 ஆவது டவுனில் வரக்கூடிய பட்ஸ்மனை ஒரு ரவுன் அல்லது 2 ரவுனில் இறக்கி அதிரடி ஆட்டம் ஆடவைப்பார்கள். அதுதான் பின்ச் ஹிட்டிங் என்பதற்கான அர்த்தமாக 1996 வரை இருந்தது. ஆனால், இலங்கையோ ஓப்பனர்களே பின்ச் ஹிட்டர்கள்தான் என்கிற கோன்செப்ட்டை அறிமுகப்படுத்தியது.

1996 உலகக்கோப்பைக்கு முன்பு வரை சதங்கள் கூட ஜெயசூர்யா அடித்திருக்கிறார். ஆனால், அதுவரை அவரை பௌலிங் ஓல் ரவுண்டராகத்தான் எல்லோரும் பார்ப்பார்கள். ஐந்தாவது அல்லது 6 ஆவது டவுன் பேட்ஸ்மனாகத்தான் வருவார். ஆனால், திடீரென இலங்கை கேப்டன் ரணதுங்கா, ஜெயசூர்யாவை ஓப்பனிங் பட்ஸ்மனாக இறக்க ஆரம்பித்தார். ஜெயசூர்யா மட்டுமல்ல கூடவே இன்னொரு பின்ச் ஹிட்டரான விக்கெட் கீப்பர் ரோமேஷ் கலுவித்தரானாவும் இறக்கிவிட்டார். இந்தக் கூட்டணிதான் 1996 உலகக்கோப்பையை இலங்கை கைப்பற்றியதற்கான அடித்தளம். இலங்கையின் எழுச்சிக்கு அடிநாதம்.

ஜெயசூர்யா - கலுவித்தரானாவின் டார்கெட்டே இலங்கையின் ஸ்கோரை முதல் 15 ஓவர்களில் 100 ஓட்டங்களுக்கு கொண்டுவந்துவிடவேண்டும் என்பதுதான். 15 ஓவர்களுக்கு ரன்ரேட்டை 6 இற்கு மேல் கொண்டுவந்துவிட்டால் அதன்பிறகு மிடில் ஆர்டர் பட்ஸ்மன்கள் ரன்ரேட்டை கொஞ்சம் இறக்கினாலும் 40 ஓவர்களுக்கு மேல் மீண்டும் அதிரடி ஆட்டம் ஆடிக்கொள்ளலாம் என்பது இலங்கையின் பிளான். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியவர் ஜெயசூர்யா.

1996 உலகக்கோப்பை முடிந்த அடுத்த இரண்டு வாரங்களிலேயே சிங்கப்பூரில் சிங்கர் கப் போட்டிகள் நடந்தன. இதில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில்தான் பாகிஸ்தானுக்கு எதிராக உலக சாதனைப் படைத்தார் ஜெயசூர்யா.

(அடுத்தவாரம் தொடரும்)

## உனக்கென்ன மேலே நின்றாய் ஓ நந்தலாலா...

# எஸ்.பி.பி.நினைவுகள்!

> தமிழ் திரை இசை உலகின் அடையாளம் எஸ்.பி.பாலசுப்ரமணியம் மறைந்து விட்டார். எஸ்.பி.பி.ஒரு தெய்வக் குழந்தை. கர்நாடக சங்கீதம் கற்காமல், பொறியியல் படிக்கப்போன ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் அவர்! எல்லாமே கேள்விஞானம்தான்.



மெல்லிசைக் கச்சேரிகளில் பாடுவதும் பாட்டுப்போட்டிகளில் பரிசுகளை வாங்கிக் குவிப்பதையும் ஆர்வத்தோடு செய்தவர். அப்படி ஒரு பாட்டுப் போட்டிக்காக 1966 சென்னை வந்து பாடி இசையமைப்பாளர் எஸ்.பி.கோதண்டபாணியிடம் முதல் பரிசு வாங்கினார் பாலு. கோதண்டபாணி இசையமைத்த தெலுங்கு படமான "ஸ்ரீஸ்ரீஸ்ரீமர்யாத ராமண்ணா" படத்தில் "ஏமிஈவிந்த மோகம்" என்ற பாடலைப்பாடி திரை உலகில் அறிமுகமானார்.

எந்த எல்லைகளுக்குள்ளும் சிக்காத வித்தியாசமான குரல் வளமே எம்.ஜி.ஆர்., சிவாஜி, என்.டி.ஆர்.,நாகேஸ்வரராவ் என இளம் வயதிலேயே எல்லைகள் தாண்டிப்பாடும் வாய்ப்பை வாங்கிக் கொடுத்தது. எந்தப்பாடகனுக்கும் ஆரம்பத்தில் உச்ச நட்சத்திரங்களுக்குப்பாட வாய்ப்புக் கிடைப்பதில்லை. எம்.ஜி.ஆரே "எனக்கு இந்தப் பையன்தான் பாடணும்!" எனக்காத்திருந்து "அடிமைப்பெண்"ணில் பாட வைத்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர்.தனக்காக பாலுவைப் பின்னணிப்பாடகராக தேர்ந்தெடுத்ததே தனிக்கதை. ஒருமுறை ஏ.வி.எம்.ஸ்டூடியோவில் சூட்டிங் பிரேக்கில் காற்று வாங்க மரத்தடியில் உட்கார்ந்திருந்தாராம் எம்.ஜி.ஆர்.பக்கத்திலிருந்த ரெக்கார்டிங் ஸ்டூடியோவில் எம்.ஜி.ஆர்.படமொன்றின் தெலுங்கு டப்பிங் வெர்ஷன் பாடலைப் பாடிக்கொண்டிருந்தாராம் எஸ்.பி.பி. அந்த வித்தியாசமான குரலைக்கேட்ட எம்.ஜி.ஆர்.தன் உதவியாளரை அழைத்து, "பையன் யார்னு விசாரிங்க!" என்று சொல்லியிருக்கிறார். பாலுவின் வீட்டுக்கு கார் அனுப்பி ராமாபுரம் தோட்டத்துக்கே வரவழைத்து, இசையமைப்பாளர் கே.வி. மகாதேவனிடம் அறிமுகப்படுத்தியிருக்கிறார். தன் வீட்டிலேயே கவிஞர் புலமைப் பித்தனின் வரிகளுக்கு பி.சுசீலாவோடு ரிகசல் பாடவைத்துப்பார்த்திருக்கிறார் எம்.ஜி.ஆர்.கனவுபோல எல்லாம் நடந்தது பாலுவுக்கு.

"அடுத்தவாரம் ஜெய்ப்பூர் சூட்டிங் போறோம். இந்தப் பாட்டை இரண்டு நாளில முடிச்சிடு... நல்லாபாடு சரியா?" என எம்.ஜி.ஆர்.சொன்னதும் தலையாட்டி விட்டு உற்சாகமாக வீடு வந்து சேர்ந்திருக்கிறார் பாலு.

ஆனால், மறுநாள் பாலுவுக்கு தைபொய்ட் காய்ச்சல் வந்து சேர்ந்தது. ஒருவாரம் கழித்து, சரியானவர் அவசர அவசரமாக கே.வி.மகாதேவனைப் போய் பார்க்க, "ஆயிரம் நிலவேவா பாட்டுத்தானே... மெதுவா பாடிக்கலாம். சின்னவரே சொல்லிட்டாரு" என்று எம்.ஜி.ஆர்.காத்திருந்ததைச் சொல்லியிருக்கிறார்.

"ஆசை ஆசையா எனக்கு பாடப்போற தகவலை எல்லார்கிட்டயும் சொல்லியிருப்பே. ஏற்கனவே தமிழில நீ பாடின முதல் பாட்டு தாமதமாகுதுனு கேள்விப்பட்டேன். நீ குணமாகி வருகிற வரைக்கும் காத்திருக்கலாம்னு நான் தான் சொன்னேன்" என எம்.ஜி.ஆரே சொன்ன போது தெய்வமே வந்து சொன்னது போல இருந்தது!" என்று "அடிமைப்பெண்"ணில் தமிழில் தன்னை அறிமுகப்படுத்திய எம்.ஜி. ஆரை நன்றியோடு நினைவு கூர்ந்தவர் நம் பாலு!

எஸ்.பி.பியின் பாடல்களைக் கேட்காமல் தமிழர்கள் யாரும் காதலித்திருப்பார்களா என்று தெரியாது. புதிதாய் அரும்பிய காதலுக்கு, "காதலின் தீபம் ஒன்று ஏற்றினாலே என் நெஞ்சில்...", காதலை ஏற்பாளா என்ற தவிப்புக்கு, "சிலுவைகள் சிறகுகள் இரண்டில் என்ன தரப் போகிறாய்?" என்றும் பிரிவில் வாடும்போது, "காதல் ரோஜாவே... எங்கே நீ எங்கே" என்றும் எல்லா எக்ஸ்ட்ரீம்களிலும் வெரைட்டியாக ஒவ்வொரு உணர்ச்சிகளுக்கும் ஆயிரம் பாடல்களாவது பாடியிருப்பார். அந்தவகையில் எஸ்.பி.பி.மென் உணர்ச்சிகளுக்கான ஓர் ஆவணம்!

ஆனால், இதுபற்றியெல்லாம் எந்தவொரு கர்வத்தையும் அவர் தன் தலைக்குள் ஏற்றிக்கொண்டதே இல்லை. "எல்லாமே இறைவன் கொடுத்தது. நான் அப்படி என்ன சாதிச்சிட்டேன்!" என உளப்பூர்வமாகப் பேசுவார்.

பாலிவுட்டில் அவர் அறிமுகம் 1981 இல் கமல்ஹாசனுக்கு பின்னணி பாட கே.பாலசந்தரின் "ஏக்துஜேகேலியே"வுக்காக! ஆனால், அப்படத்தின் இரட்டை இசையமைப்பாளர்கள் லக்ஷ்மிகாந்த்-பியாரிலால் ஜோடி, "மதராஸிகுரல் பாலிவுட்டுக்கு செட்டாகாது!" என்று பாலுவை கடுமையாக நிராகரித்திருக்கிறார்கள். "படத்தில் இந்தி அதிகம் தெரியாத கரக்டரில் கமல் நடித்திருப்பதால் எஸ்.பி.பி. பாடினால் நன்றாக இருக்கும்!" என பிடிவாதமாகக் கேட்டுப்பாட வைத்தது கே.பாலசந்தர் தான். அப்படத்தில் தாமங்கேஷ் கருடன் எஸ்.பி.பி.பாடிய "தேரேமேரே பீச்மெய்ன்" பாடல் அகில இந்திய அளவில் ஹிட்டாக, பாலிவுட்டிலும் தனித்த அடையாளத்தை உருவாக்கினார் பாலு.

50 ஆண்டுகளில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடியிருக்கிறார். ஒரேநாளில் அசுரத்தனமாக 19 பாடல்களைப் பாடி ரெக்காட் செய்ததெல்லாம் இன்றளவும்யாரும்மிஞ்ச முடியாத சாதனை. அதேபோல ஒரு பாடகர் இசையமைப்பாளராக உருமாறி வெவ்வேறு மொழிகளில் 45 படங்களுக்கு இசையமைத்ததும் டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டாக இந்தியா முழுவதும் 13 நடிகர்களுக்கு குரல் கொடுத்திருப்பதும் ஓல்ரைம் ரெக்காட் தான்!.

எத்தனை ஏற்ற இறக்கங்களோடு, கடினமான மெட்டுகளுக்குக்கூட அநாயசமாகப்பாடுவது அவர் சிறப்பு. ரஜினிக்காக எஸ்.ஜி.கிட்டப்பாவை இமிட்டேட் செய்து அவர் பாடிய "பாயும்புலி" படத்தின், "ஆடிமாசம் காத்தடிக்க... வாடிபுள்ள சேர்த்தணைக்க" பாட்டெல்லாம் வேறு வகை. நிறையப் பேர் அது மலேசியா வாசுதேவன் பாடியது என்றே இன்றும் நினைக்கிறார்கள்.

"எப்படி இப்படியெல்லாம் குரல் மாற்றிப் பாட முடிகிறது?" என்று கேள்வியாக அவரிடம் கேட்டால், "கண்டசாலா இதை எல்லாத்தையும் விட பல பரிசோதனைகளை செஞ்சிருக்கார். அவர் போட்ட பிச்சைதான் என் இந்த திறமை. அவ்வளவு ஏன்... ரி.எம்.எஸ்., எம்.ஜி.ஆர்., சிவாஜி என்று குரல் மாத்திப் பாடலையா..? அவங்க முன்னாடி இந்த எஸ்.பி.பிலாம் தூசு!" என்று சுயபகடி செய்திருக்கிறார்.

ஐஸ்கிரீமில் செர்ரிபோல நடிப்புத் திறமை என்பது அவர் நமக்குக் கொடுத்த ஸ்வீட்சர்ப்ரைஸ். மிக நல்ல நடிகர்! "ஒரு பாடகன் என்பவன், கிட்டத்தட்ட நடிகன் தான். என்ன, மைக் முன்னாடி நடிக்கிற நடிகன். நான் பள்ளி நாட்களிலேயே மேடை நடிகன் தான். இயல்பாக நடிப்பேன். அதனால் நடிப்பது சிரமமாக இல்லை. ஆனால், நல்ல அப்பா, நல்ல அண்ணன், நல்ல டாக்டர் என ஒரே மாதிரி ரோல்கள் செய்வது பிடிக்கல. தெலுங்கில் தணிகலபரணியின் இயக்கத்தில் "மிதுனம்" படத்துல கிடைச்ச மாதிரி சவாலான கரக்டர்களை எதிர்பார்த்துட்டு இருக்கேன்!" என்று தன் நடிப்பார்வத்தையும் 74 வயதில் வெளிக்காட்டியவர் பாலு.

எஸ்.பி.பியை எல்லோருக்கும் பிடிக்கக்காரணமே அவரின் எளிமை தான். 40 ஆயிரத்துக்கும் மேலான பாடல்கள், கின்னஸ் சாதனை, 6 தேசிய் விருதுகள் உட்பட ஆயிரக்கணக்கான விருதுகள். அவற்றை வைக்கவே வீட்டில் இரண்டு அறைகள் வைத்திருக்கும் மனிதர். எவ்வளவு உயரங்கள் போனாலும் சிகரங்கள் தொட்டாலும் அவர் எல்லோரிடத்திலும் அன்பாகவே இருந்தார். எளிதில் அணுகும் மனிதராக இருந்தார்.

அதேபோல உழைப்பில் பெரிதென்ன சிறிதென்ன? துளி ஈகோ பார்க்காமல் ஓடி ஓடி வேலை செய்வார் பாலு. கமலின் படங்கள் தெலுங்கில் டப்பிங் வொய்ஸ் எப்போதுமே எஸ்.பி.பி.தான். ஆனால், தமிழில் "இந்தியன்" படம் கமல் டப்பிங் பேசி முடித்த பிறகு ஓரிடத்தில் சின்னதாய் பேட்ச்ஒர்க் செய்ய வேண்டியிருந்தது. கவுண்டமணியை மனீஷா கொய்ராலாவின் ஒட்டகம் கடித்த பிறகு, கமல் பேசும் சின்ன டயலொக் அது. கமலை அந்த ஒரு வரிக்காக அழைக்க முடியவில்லை. ரிலீஸ்க்குத் திகதியும் குறித்ததால் எஸ்.பி. பியை கடைசி நேரத்தில் அவசரமாக அழைக்க குடுகுடுவென ஓடி வந்து, "அதுக்கிட்ட ஏன் டாஸ்டொமக்கைக்காட்டுனே?" என்ற அந்த 4 வார்த்தைகளைப் பேசிக் கொடுத்து விட்டுப்போயிருக்கிறார். அதுதான் பாலு!

சுப்பர் சிங்கர் நிகழ்ச்சிகளில் எவ்வளவு வற்புறுத்தினாலும் அவர் வாயால் யாரையும் அன்போடு கூட குட்டு வைக்க முடியவில்லை. "ஏன்திட்டணும். **Every soul is potentially divine**. யாரும் உயர்ந்தவங்களும் இல்லை. தாழ்ந்தவங்களும் இல்லை. எல்லாம் தெரிஞ்சு தான் பாடணும்னா இந்த பாலுவே கிடை யாது போங்க... நம்மால முடிந்த அளவு பொசிட்டிவிட்டியை விதைப்போமே?" என்பார்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 223

## குஷ்டரோகம் என அழைக்கப்பட்ட தொழுநோய்

உடலில் ஊனத்தை ஏற்படுத்தி, இன்னொருவரில் சார்ந்து வாழும் நிலையை ஏற்படுத்தும் நோய்களில் தொழுநோயும் ஒன்றாகும். இது பரம்பரை நோயல்ல. இது ஒரு தொற்று நோயாகும். நோயாளி தும்மும் போதும் இருமும் போதும் சிந்தும் சிறுதுளிகளினால் ஒருவரிடமிருந்து மற்றையவருக்கு பரவுகின்றது. இதன் நோயரும்பு காலம் 3-5 வருடங்கள் வரைநீண்டு காணப்படலாம். இது எல்லா வயதினரையும் ஆண், பெண் இரு பாலினரையும் தாக்கக் கூடியது. பெரும்பாலும் பொருளாதார வளம் குன்றிய குடும்பத்தினரே இலகுவில் பாதிப்புறுகின்றனர். தோல் மற்றும் நரம்புகளையே இந்த நோய் முதன்மையாகத் தாக்குகின்றது.

### தொழுநோய்க்கு சிகிச்சை உள்ளது



முன்னைய காலங்களில் குஷ்டரோகம் என அழைக்கப்பட்டதும் இந்த நோயே. இந்த நோயை ஆரம்ப நிலையிலே இனங்கண்டு அதற்கான சிகிச்சையை பெறுபவர் பூரண குணமடையலாம். அங்கவீனம் அடைவதனையும் தவிர்த்துக்கொள்ள்லாம். இந்த நோய் முற்றாக குணப்படுத்தக்கூடிய நோயே. அசண்டையீனமாக கவனிக்காதிருப்போமானால் இந்த நோய்ப் பாதிப்பு அதிகரித்து நிரந்தர அங்கவீனமுறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும். இந்த நோயைக் குணப்படுத்தக்கூடிய மருந்து வகைகள் இங்கு யாழ்ப்பாணத்தில் கிடைக்கக் கூடியதாக உள்ளன. குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் தோல் நோய் சிகிச்சைப் பிரிவில் அவற்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அதிலும் விசேடம் என்னவெனில் ஒருநாள் மாத்திரை எடுத்தாலே இதன் தொற்றும் தன்மை இல்லாது போவதுடன் அங்கவீ னமுறும் துர்ப்பாக்கியமும் இல்லாது போகின்றமையாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு குறிப்பட்ட பிரதேசத்தில் மட்டுமே இந்த நோயாளிகள் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டனர். ஆனால் இன்று அவ்வாறில்லாமல் இந்த நோய்த்தாக்கம் பரவலாகக் காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது. குருநகர், நாவாந்துறை போன்ற பகுதிகளில் அதிக நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இந்த நோயாளிகள் வேறொரு நோய்க்கு சிகிச்சை பெறச்செல்லும் போது விபத்தாகவே இந்த நோய் இனங்காணப்பட்டுள்ளது. எனவே எம் மத்தியில் தமக்கு இந்த நோய் தொற்றியுள்ளது என அறியாது இந்த நோயுடன் வாழ்வோரின் எண்ணிக்கை இதுவரை இனங்காணப்பட்டோரிலும் அதிகமாகவே இருக்க வாய்ப்புள்ளது. எனவே இந்த நோயின் ஆரம்ப அறிகுறிகளை நாம் அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. குறிப்பாக மக்களுடன் நேரடியாக அவர்களின் சூழலில் தொடர்புற்று சேவை வழங்கும் உத்தியோகத்தர்கள் இந்த நோயின் அறிகுறிகளைத் தெரிந்திருப்பின் அவர்களை வழிப்படுத்தி சிகிச்சைக்குட்படுத்தி அவர்களின் வாழ்வு நிலை கீழ்நோக்கி விழும் அபாய்நிலையை தடுத்திட முடியும். சிகிச்சைக்குட்பட்டவர்கள் தொடர்ந்தும் மாத்திரைகளை உள்ளெடுத்து வருகின்றமையை உறுதி செய்து கொள்ளவும் முடியும். இவ்வாறு செய்யின் இந்த நோய் சமூகத்துக்கு மேலும் பரம்பலுறுவதை தடுத்திட முடியும். இந்த நோய்க்கான மாத்திரைகளை பரிந்துரைக்கப்பட்ட காலம் வரை பாவித்துவரின் பூரண குணம் கிடைக்கும்.

### அறிகுறிகள்



இந்த நோயின் குணம் குறிகளை பார்ப்போமானால் தோலில் ஏற்படும் தேமல் போன்ற அடையாளங்களாகவோ தளும்புகளாகவோ தோன்றும். இவை வெளிறிய நிறமாகவோ சிவப்பு நிறமாகவோ அல்லது செங்கபில நிறமாகவோ காணப்படும். இவற்றில் கடி, சொறித் தன்மை இருக்காது. இவற்றில் உணர்வுத்தன்மை குறைவாகவோ அல்லது முற்றாக இல்லாதாகவோ காணப்படும். குறிப்பாக நோவு, தொடுகை, சூடு அல்லது வெக்கையை உணரும் தன்மை இருக்காது. இவ்வடையாளங்களில் உரோமங்களும் வியர்வைச்சுரப்பிகளும் கூடக் காணப்படமாட்டா. இவற்றை விட தோலில் சிறுசிறு கட்டிகளும் மினுமினுப்பான தடித்த தன்மையும் சிலரில் காணப்படலாம்.



நரம்புகளில் ஏற்படும் மாற்றங்களை பார்ப்போமானால் தடிப்படைந்த நரம்புகள், மணிக்கட்டு சோர்வடைதல், விரல்களை நீட்ட முடியாமை, பாதத்தை நிமிர்ந்த முடியாமை அல்லது பாதம் சோர்வடைதல், விறைப்புறுதல் காரணமாக பாதம் அடிக்கடி பொருட்களுடன் மோதுண்டு மாறாத புண்கள் ஏற்படும். கண்களை முழுமையாக மூட முடியாமை இதனால் பிறபொருள்கள் கண்களினுள் விழுந்து கண்கள் சிவப்புறுதல், வீங்குதல் போன்ற அறிகுறிகள் தோன்றும். கவனிக்காது விடுவோமெனில் பார்வையிழப்பு ஏற்படும்.

சாதாரணமாக தேமலுக்குப் பூசப்படும் பூச்சு மருந்துகளுக்கு இந்த தோல் பாதிப்புக்கள் குணமடையமாட்டா.

எனவே மேற்சொன்ன ஏதேனும் ஓர் அறிகுறியாவது இருப்பின் அருகிலுள்ள வைத்தியரிடமோ அல்லது தோல் சிகிச்சை நிலையத்துக்கோ சென்று ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல் நன்று.

### அவதானம் அவசியம்



கால், கைகளில் விறைப்புத் தன்மை கொண்ட நோயாளிகளுக்குக் காயங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம். இது மீள முடியாத அங்கக் குறைபாடுகளைக் காலப்போக்கில் ஏற்படுத்தி விடும்.

எனவே அங்கங்களை பாதுகாக்கும் முயற்சியில் கவனம் செலுத்துதல் வேண்டும். சூடான பொருள்களையோ கூரான ஆயுதங்களையோ கையாளும் போது பாதுகாப்பான அங்கிகளை அணிந்து கொள்ளுதல், பொருத்தமான பாதணிகளை அணிந்து கொள்ளுதல், வீட்டிலிருந்து வெளிக்கிளம்பும் போது பாதுகாப்பு கண் - கண்ணாடிகளை அணிந்து கொள்ளுதல், நித்திரை செய்யும் போதும் கண் பாது காப்பை உறுதி செய்தல் போன்ற தடுப்பு முறைகளில் கவனம் செலுத்துதல் நன்று.

இருமும் போதும் தும்மும் போதும் கைக்குட்டைகளை பாவித்தல் பொது இடங்களில் கண்டபடி துப்புவதைத் தவிர்த்தல் போன்ற பழக்கங்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றையவருக்கும் நோய் பரவுவதை தடுத்திட முடியும்.

மருந்துப் பாவனைக் காலத்தில் தோல் நிறம் கருமையடைதல், சிறுநீர் சிவப்பு நிறமாக மாறுதல் என்பன போன்ற பக்க விள்ளவுகள் ஏற்படலாம். சிகிச்சை நிறைவில் இவை பழைய நிலைக்கு திரும்பும். சிகிச்சைக் காலத்தில் ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவு வகைகளை தவிர்த்தல் நன்று.

இந்த நோய்க்கான பரிசோதனையை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் செய்து கொள்ள வேண்டும். தமக்கு நோய் தொற்று ஏற்படவில்லை என்பதனை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

சிகிச்சை பெற்றுவரும் நோயாளியைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கான சமூக அந்தஸ்தையும் மரியாதையும் பறித்தல் கூடாது.

சிகிச்சை பெற்றுக் கொள்வதனை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நோயாளிகளுக்குப் பிரதேச செயலக - சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாதந்தோறும் உதவிப்பணக் கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படுகின்றது.

வைத்தியர் பொ.ஜெசிதரன்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்